# மயங்கினேன் சொல்லத் தயங்கினேன்



சத்யா ராஜ்குமார்

# மயங்கினேன் சொல்லத் தயங்கினேன்

## 1

கைப்பையைத் தோளில் போட்டுக் கொண்டு வேக நடையுடன் கம்பெனியை விட்டு வெளியே வந்தாள், அபிநயா.

வேலை நேரம் முடிந்தும் கூட அன்று மூன்று மணி நேரங்களுக்கும் மேலாகி விட்டிருந்தது.

கைக் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மணி எட்டு.

வீட்டில் டின்னர் சாப்பிடும் நேரம்.

பசி வேறு வயிற்றைக் கிள்ளியது.

நேராகச் சென்று தனது ஐடென்டிஃபிகேஷன் கார்டு மூலம் பன்ச் செய்து முடித்தவள், பிறகு அதை மீண்டும் கழுத்தில் மாட்டாமல் கைப்பைக்குள் போட்டுக் கொண் டாள்.

அந்தப் பெரிய லிமிடெட் நிறுவனத்தில் அக் கௌண்ட்ஸ் டிபார்ட்மென்ட்டின் தலைமைப் பொறுப் பில் இருந்தாள் அபிநயா.

கம்பெனி ஆடிட்டிங் வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்ததே தாமதத்திற்கான காரணம்.

வருடத்திற்கொரு முறை வரும் ஆடிட்டிங்கில் இந்த ஒரு வாரத் தாமதம் மட்டும் எப்பொழுதுமே தவிர்க்க முடியாதது.

அந்த மிகப்பெரிய நீளமான கார் பார்க்கிங் முழுவ தற்கும் சேர்த்துத் தன்னுடைய ஒரு கார் மட்டுமே தனி யாக நின்றிருக்க, காரின் கதவைத் திறந்து ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்தாள்.

விட்டிருந்தால் அடுத்த முப்பது நிமிடங்களில் வீட் டையும் சென்றடைந்திருப்பாள்.

அபிநயாவின் வீடு நகரத்தை விட்டுச் சற்றுத் தள்ளி யிருந்தது.

அதனாலோ என்னவோ அந்தப் பாதையில் வாகனங் களின் புழக்கம் சற்றுக் குறைவாகவே இருக்கும்.

பாதி தூரம் வந்திருப்பாள். சாலையில் தனக்கு வலது கைப் பக்கத்தில் மரத்தருகில் நின்றிருந்த கார் ஒன்றி லிருந்து யாரோ கையை அசைப்பது போலத் தோன் றியது.



காரை நிறுத்தி இறங்கிச் சென்று பார்க்கலாம் என் றாலும், பயமாக இருந்தது.

எதற்குப் பிரச்சனையை விலை கொடுத்து வாங்க வேண்டுமென்று யோசனையாகவும் இருந்தது.

இந்த நேரத்திற்கு அதுவும் இந்த மாதிரி ஒரு பாதை யில் நிற்க வேண்டாமென்று மனம் ஒரேயடியாகச் சொல்லி விட, அதெப்படி உனக்கு இந்த நிலை நேர்ந்து மற்ற வர்கள் இப்படிக் கண்டு கொள்ளாமல் போனால் என்று மனச்சாட்சி கேள்வி கேட்டது.

கடைசியில் மனச்சாட்சி ஜெயித்து விட, உடனே காரைத் திருப்பி விட்டிருந்தாள்.

மரத்தடியில் நின்றிருந்த அந்தக் காருக்கு அருகில் சென்றிருந்தவள், காரை விட்டு இறங்காமலே, அந்தக் காருக்குள் பார்வையை ஓட்டினாள்.

நடுத்தர வயதுடைய பெண்மணி ஒருவர் காருக் குள்ளே இருக்க, அவருடைய இடது நெற்றியிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

அந்தப் பெண்மணியும் பார்ப்பதற்குப் பாதி சுய நினை விலும், பாதி மயக்கத்திலும் இருப்பது போலத் தோன்ற, அவசரம் புரிந்து வேகமாகக் காரை விட்டு இறங்கினாள்.

இறங்கியவள் வேகமாகச் சென்று ஏற்கெனவே திறந்து கிடந்த காரின் கதவை இன்னும் அகலமாகத் திறந்து ''ஆன்ட்டி'' என்று அழைத்தாள்.

அவர் கண்களைத் திறந்து பார்க்க முயற்சி செய்வது தெரிய, ''சீக்கிரம் இறங்குங்க. ஹாஸ்பிட்டலுக்குப் போகலாம்,'' என்று சத்தமாக அழைத்தாள்.

சரி யென்பதைப் போல அவர் தலையை அசைக்க, பர வாயில்லை, மிகவும் பயப்படுமளவிற்கு ஒன்றுமில்லை யென்று நினைக்கத் தோன்றியது.

ஆனாலும் நிற்காமல் வழிந்து கொண்டே இருந்த இரத்தம் மனதை உறுத்தியது.

இரத்தம் என்றாலே அபிநயாவிற்கு எப்பொழுதும் பயம். ஆனாலும் அப்பொழுது ஏனோ சிறிதும் பயம் தோன்றவில்லை.

"வாங்க ஆன்ட்டி," என்று மீண்டுமொரு முறை அழைத்தாள்.

காரை விட்டு இறங்க அந்தப் பெண்மணியும் ஒத் துழைத்ததோடு, கூடவே தனது பலமனைத்தையும் கொடுத்து, அவரை வெளியே அழைத்து வந்து அடுத்த இரண்டு நிமிடங்களில் தனது காருக்குள்ளும் ஏற்றி யிருந்தாள்.

அந்தப் பெண்மணி இருந்த காரின் சாவியும் காரி லேயே இருக்க, அதைப் பூட்டிச் சாவியைக் கையிலெடுத் துக் கொண்டாள்.

மரத்தில் மோதியிருந்த காரின் முன் பக்கம் முழுவதும் சிதைந்து போயிருக்க, உடன் வந்தவர்கள் எங்கே போயிருப்பார்களென்று யோசித்துக் கொண்டே வந்து காரை ஸ்டார்ட் செய்திருந்தாள்.

அப்படியே மீண்டும் தனது வீடு செல்லும் பாதையில் காரைத் திருப்பியிருந்தவள், பிறகு வேகமாகச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

அடுத்த சில நிமிடப் பயணத்தில் ஒரு மருத்துவ மனையின் முன்பாகச் சென்று காரை நிறுத்தியிருந்தவள்,



உடனே அதிலிருந்து இறங்கி, மருத்துவ மனையை நோக்கிப் போனாள். ஏன், ஓடினாள் என்றும் கூடச் சொல்லலாம்.

தான் வீண் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டிருக் கிறோமோ என்று மீண்டும் பயம் வந்து விட்டிருந்தது.

ஆனால் அதையே நினைத்துக் கொண்டிருக்க வழி யில்லாமல் எமர்ஜென்சி வந்து விட்டிருக்க அங்கிருந்த நர்ஸிடம் விஷயத்தைச் சொன்னாள்.

மேலும் ஒரு மணி நேரமும் கூடச் சென்று விட் டிருந்தது.

கம்பெனியின் ஆடிட்டிங் நடந்து கொண்டிருப்பதால் வரத் தாமதமாகுமென்று ஏற்கெனவே சொல்லியிருந் ததாலோ என்னவோ வீட்டிலிருந்து அழைப்பு வந்திருக்க வில்லை.

கடைசியில் ஒரு வழியாக அனைவரும் சேர்ந்து அந்தப் பெண்மணியிடமிருந்து சரியான போன் நம்பரை வாங்கியிருக்க, அந்த எண்ணுக்கு அழைத்துப் பேசி னார்கள்.

பேசியதும் அபிநயாதான்.

அதுவரை நடந்தவற்றில் தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள்.

முதலுதவி கொடுக்கப்பட்டு விட்டதால் உடனடி அபாயம் இருப்பது போலத் தோன்றவில்லை என்றும் தனக்குப் பட்டதைச் சொன்னாள்.

எதிர் முனையில் பேசியது அந்தப் பெண்மணி யுடைய மகனென்பது புரிய அப்பாடா இனி நாம் கிளம்பி விடலாமென்று மனதிற்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

''ஒரு நிமிஷம்,'' என்று உடனே நர்ஸிடம் போனைக் கொடுத்திருந்தாள்.

ஏற்கெனவே போனில் சொன்னது போலப் பேசிவிட்டு அடுத்த சில வினாடிகளில் ரிஸீவரைக் கீழே வைத்திருந்த நர்ஸிடம் அந்தப் பெண்மணியின் கார் சாவியை ஒப்படைத்துவிட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள் அபிநயா.

இதுவே வீட்டில் பெற்றவர்களுக்குத் தெரிந்தால் எங்கே வாங்கிக் கட்டிக் கொள்ள நேரிடுமோ என்று பயமாக இருந்தது.

போலீஸ், எஃப்.ஐ.ஆர். என்றெல்லாம் நர்ஸ்களும், டாக்டரும் பேசிக் கொண்டதில் தப்பித்தால் போதுமடா சாமி என்று அந்த வினாடியே கிளம்பி விட்டிருந்தாள் என்று கூடச் சொல்லலாம்.

அடுத்த பத்து நிமிடங்களில் வீடு வந்து சேர்ந்திருந்தாள் அபிநயா.

''வாம்மா.''

''ஹாய் டாடி.''

''என்ன இன்னைக்கு வேல ரொம்பவும் அதிகம் போலிருக்கு?''

''அது சரிதான் டாடி,'' என்றவள் வழியில் நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னாள்.

அவள் நினைத்துப் பயந்தது போலவே, ''உனக்கு ஏம்மா இந்தத் தேவையில்லாத வேலை?'' என்று தந்தை கேட்டதில், எதுவும் பேசாமல் பார்த்தாள்.

கடவுளே! தந்தையே இப்படிக் கேட்கிறாரென்றால் இனித் தாயைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?



''என்ன தேவையில்லாத வேலை?''

தாய் வர, மனைவியிடம் தான் நடந்ததைச் சொன்னார் ராகவன்.

ஆனால் அதற்கு அவருடைய மனைவி வளர்மதியோ, ''எவ்வளவு பெரிய வேலை பண்ணிட்டு வந்திருக்க!'' என்று மகளை மெச்சும் பார்வை பார்த்தார்.

வளர்மதியின் கேள்வியில், தந்தை மகள் இருவருக்குமே ஆச்சரியமாகிப் போயிற்று.

உடனே, ''அதுக்காக நீ செஞ்சது சரின்னும் நான் சொல்ல வரல. பாவமேன்னு தான் நாம உதவி செய்யப் போவோம். ஆனா கடைசில நம்ம தலைலயே கூடப் பிரச்சன வந்து முடிய வாய்ப்பிருக்கு. அதுலயும் இந்தக் காலத்துல நமக்கென்ன வந்ததுன்னு போயிட்றது ரொம்ப ஸேஃப்!'' என்று மகளைப் பார்த்துச் சொன்னவர், ''என்னங்க, நான் சொல்றது?'' என்று கணவனிடமும் கேட்டார்.

''அது சரிதான் மதி!'' என்று உடனே பதில் சொன்ன தந்தையைப் புன்னகையைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் அபிநயா.

''என்னமா நான் சொன்னதெல்லாம் காதுல விழுந்ததா?''

தாய் கேட்க, ''விழுந்தது மம்மி,'' என்றாள்.

''அப்படி எந்தப் பிரச்சனையும் நீ உதவப் போனதால நமக்கு வந்துடாதே?''

''அச்சச்சோ! அதெல்லாம் வராது மம்மி. நாந்தான் என் போன் நம்பர யாருக்கும் தரலையே.''

''என்னவோ போ,'' என்றவர், ''சரிசரி. ஹாஸ்பிட்டலுக்கெல்லாம் போய்ட்டு வந்திருக்க. முதல்ல போய் நல்லா

சோப்புப் போட்டுத் தேய்ச்சுக் குளிச்சுட்டு வந்துடு,'' என்றார்.

''யூ ஆர் கரெக்ட் மம்மி!'' என்றவள் உடனே அந்த இடத்தை விட்டுச் சென்றிருந்தாள்.

தன்னறைக்கு வந்து சேர்ந்திருந்தவள், ''உஷ்... அப் பாடா...'' என்று அப்படியே சிறிது நேரம் அமர்ந்து விட் டிருந்தாள்.

நல்ல வேளை! இந்த அளவில் தப்பித்து விட முடிந்த தென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.



## 2

''அபி.''

''சொல்லுங்க மம்மி.''

''இந்தா, இதுல சப்பாத்தியும் சென்னாவும் போட்டிருக் கேன்,'' என்று தாய் நீட்டிய லஞ்ச் பாக்ஸை வாங்கிக் கொண்டாள் அபிநயா.

''கொஞ்சம் தயிர்ச் சாதம் வெச்சுத் தரட்டுமா?''

''ம்கூம், இதுவே அதிகம் மம்மி.''

''அதிகமெல்லாம் இல்ல. அளவாதான் வெச்சிருக் கேன்.''

''சரிதான் மம்மி. சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். அப்ப நான் கிளம்பறேன். பை.''



''இன்னைக்கும் ஏதாவது பொதுச் சேவைக்குப் போயிடாத!'' என்றவர், ''நேத்து ஏதோ நம்ம நல்ல நேரம். அப்படி நம்பற மாதிரி நடிச்சுத் தான் ஏமாத்தறவனுங்க கூட முதல்ல பக்கத்துல வர வைப்பாங்க. அதுக்கப்புறம் என்ன வேணும்னாலும் பண்ணிடுவாங்க. அதுவும் நேத்து அந்த இடத்துல அந்த நேரத்துல வயசுப் பொண்ணு தனியா இறங்கிப் போயிருக்க. கடவுள் புண்ணியம்தான் போ,'' என்றார்.

உண்மையிலேயே உணர்ந்து சொன்ன தாயைப் பார்த்தவள் அதற்குப் பிறகுதான் அந்தக் கோணத்தில் யோசிக்கவே செய்தாள்.

''என்ன, காதுல விழுகுதா?''

''சரிதான் மம்மி. இனிமேல் இந்த மாதிரி செய்யவே மாட்டேன்.''

''சும்மா எனக்காகச் சொல்லாத.''

''அச்சச்சோ, உண்மையாதான் சொல்றேன்.''

''சரி சரி. கிளம்பு. அப்புறம் வேலைக்கு லேட்டா யிடும்மா.''

அதே நேரம் தந்தையும் டிபன் சாப்பிட வர, இருவரிட மும் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள், அபிநயா.

வழக்கமான நேரத்திற்கு இன் பஞ்ச் செய்து விட்டுத் தனது இடத்திற்கு வந்திருந்தாள்.

உடன் வேலை செய்பவர்களிடம் சில வார்த்தைகள் பேசி விட்டுப் பிறகு வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

அந்தக் கம்பெனியைப் பொறுத்தவரை அலுவலகக் கட்டடத்திற்குள் யாரும் தங்களுடைய மொபைல் போன்களில் பேசவே முடியாது.

வேண்டுமானால் அப்படி அவசரமென்றால் உணவு இடைவேளையில் கம்பெனியை விட்டு வெளியே அதாவது கார், டூ வீலர் பார்க்கிங் இடத்திற்கு வந்துதான் பேச வேண்டும். அங்குதான் சிக்னல் கிடைக்கும்.

ஆனால் அன்று இருந்த வேலைப் பளுவில் அப் படியே நின்று கொண்டே, கொண்டு வந்திருந்ததில் பாதியை மட்டும் உண்டுவிட்டு வேலையைப் பார்க்க ஓடி விட்டிருந்த அபிநயா, காலையிலிருந்து நான்கைந்து முறை தனது மொபைலுக்குப் புது எண்ணிலிருந்து வந்திருந்த அந்த அழைப்பைக் கவனித்திருக்கவில்லை. வேலை முடிந்து மாலையில் வீட்டிற்குக் கிளம்பி விட்ட பிறகு, பார்த்தவள் உடனே அந்த எண்ணிற்கு அழைத்து விட்டிருந்தாள்.

இரண்டு ரிங்கிலேயே தொடர்பு கிடைத்து விட்டிருக்க, யாரென்று கேட்டாள்.

............

''அதெல்லாம் இருக்கட்டும். நிறையத் தடவ எம் மொபை லுக்குக் கூப்புட்டிருக்கீங்க. நீங்க யாருன்னு சொல்லுங்க.''

.............

''ம், சொல்லுங்க.''

............

''ஓ, அப்பிடியா, இப்ப அவங்க எப்பிடி இருக்காங்க?''

............



''ஓ. இன்னும் கொஞ்ச நாள்ல முழுமையா க்யூர் ஆயிடுவாங்க. நானும் கடவுள வேண்டிக்கறேன்.''

............

''தேங்க்ஸ், அது அவங்களோட நல்ல நேரம். நான் ஹெல்ப் பண்ணியிருக்கலேன்னாலும் வேற யாராவது பண்ணியிருப்பாங்க. என்ன அம்மா கூப்புட்ற மாதிரி யிருக்கு. போன வைக்கறேன்,'' என்றவள், ''நீங்க உங்க அம்மாவ நல்லாப் பாத்துக்கோங்க,'' என்று போனை வைத்தே விட்டிருந்தாள்.

போனை வைத்து விட்ட பிறகு இன்னும் கொஞ்சம் டீடெய்லாகக் கேட்டிருக்கலாமோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

எப்படியோ அந்த ஆன்ட்டி பிழைத்து எழுந்தால் அதுவே போதுமென்று நினைத்துக் கொண்டாள்.

மிகச் சரியான நேரத்திற்குள் மருத்துவமனைக்குக் கொண்டு வந்ததால்தான் எங்களால காப்பாற்ற முடிந் தது. இன்னுமொரு ஐந்து நிமிடங்கள் தாமதமாகியிருந் தாலும் கூடக் காப்பாற்றவே முடிந்திருக்காது. அந்த அள விற்கு அளவுக்கு மீறிய இரத்தம் வெளியேறி விட்டிருந்த தென்று மருத்துவர்கள் சொன்னதாக அவன் சொன்ன தும்,

உண்மையிலேயே எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்து விட்டிருக்கிறோமென்று, அபிநயாவிற்குப் பெருமையாக இருந்தது.

மேலும் இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

கம்பெனியில் ஒரு வழியாக ஆடிட்டிங் வேலைகள் முடிவுக்கு வந்திருந்தன.

அந்த அறையின் கதவு திறந்தே இருக்க, அதன் கதவை ஆள்காட்டி விரலால் தட்டிப் பார்த்தாள்.

அந்த ஆன்ட்டி மட்டும் கட்டிலில் படுத்திருப்பது தெரிய, தூக்கம் கலைய வேண்டாமென்று வெளியிலேயே நின்று விட்டிருந்தாள்.

அதே நேரம் பின்னால் யாரோ வருவதைப் போலிருக்கத் திரும்பிப் பார்த்தாள்.

அதற்குள் அருகிலேயே வந்து விட்டிருந்த அந்த இளைஞன், ''நீங்க?'' என்று கேட்டான்.

''நான் அபிநயா.''

''ஓ, வாங்க!'' என்று லேசான புன்னகையுடன் உள்ளே கை காட்டி அழைத்தான்.

அடுத்த சில வினாடிகளில் அவனுடன் தானும் அறைக்குள் வந்திருந்தாள் அபிநயா.

''நீங்க?''

அபிநயா கேட்க, ''என் பேர் தயானந்த். உங்ககூட போன்ல பேசினது நாந்தான்,'' என்றான் அவன்.

''நீங்க தான் கூட இருக்கீங்களா?''

''வீட்ல எல்லாருமே லாஸ்ட் த்ரீ டேஸாவே இங்க தான் இருக்காங்க. ஐ மீன் பக்கத்து ரூம்ல. நான் காலைல வந்துட்டுப் போனது. திரும்பவும் ஆபீஸ்ல இருந்து கொஞ்சம் முன்னாடிதான் வந்தேன்,'' என்றான்.

''ஓ, இப்ப ஆன்ட்டிக்கு எப்படி யிருக்கு?''

''அபாய கட்டத்த முழுமையாத் தாண்டிட்டாங்க, ஆனாலும் கொஞ்ச நாளைக்குக் கம்ப்ளீட் ரெஸ்ட்ல இருந்தாகணும்னு சொல்லியிருக்காங்க.''



''பரவாயில்ல,'' என்று உணர்ந்து சொன்ன அபிநயாவிடம், ''வாங்க உட்காருங்க,'' என்று இருக்கையைக் காட்டினான் தயானந்த்.

அபிநயா அமர்ந்ததும் தானும் அமர்ந்தான்.

அடுத்த சில வினாடிகளில், ''ஆன்ட்டி நல்லாத் தூங்கறாங்க. நான் வேணும்னா நாளைக்கு வந்து பாக்கறேன்,'' என்றாள் அபிநயா.

''இப்ப எழற நேரம்தான். இப்பக் கொஞ்சம் முன்னாடி கூட உங்களக் கேட்டுட்டு தான் தூங்கவே செஞ்சாங்க.''

''சரிதான். அப்ப வெயிட் பண்ணிப் பாத்துட்டே போயிட்றேன்.

''எப்படி அந்த ஆக்ஸிடெண்ட்?'' என்று அபிநயா கேட்க, நடந்ததனைத்தையும் சொன்னான் தயானந்த்.

அதே நேரம், ''ஒரு நிமிஷம்...'' என்று எழப் போனவனிடம் என்னவென்று கேட்டாள்.

''உங்களுக்குக் குடிக்கறதுக்கு ஏதாவது...''

''இல்ல. வேண்டாம். ஆன்ட்டி எழுந்ததும் பாத்துட்டுக் கிளம்பணும்,'' என்றவள், ''ஆமா, அந்த டிரைவரக் கண்டு பிடிச்சுட்டீங்களா?'' என்று கேட்டாள்.

''அன்னைக்கே பிடிச்சுட்டோம், ஆனா இப்ப அவனும் ஐ.ஸி.யுல இருக்கான்.''

''ஓ. அந்த நிலைல எப்படித் தப்பிச்சுப் போனான்?''

''பயந்துக்கிட்டு ஒரு வேகத்துல கவர்மெண்ட் ஹாஸ்பிட்டல் வரைக்குமே போயிருக்கான்...''

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, ''ஒரு நிமிஷம்,'' என்று விட்டு அட்டெண்ட் செய்து பேசினாள்.

''இனிமேல் பாருங்க ஸார். ரொம்ப ஸ்பீடா ஆன்ட்டி ரிக்கவர் ஆயிடுவாங்க!'' என்ற நர்ஸிடம், ''அது சரிதான்,'' என்று தானும் உடனே சொன்னான் தயானந்த்.

''அதே சமயம் பேஷண்ட் ரெஸ்ட்ல இருக்கறதும் ரொம்ப முக்கியம். ட்ரிப்ஸ் தீர்றதுக்குக் கொஞ்சம் முன்னாடியே வந்து சொல்லுங்க,'' என்ற நர்ஸ், ''இன்னைக்கு உங்க அம்மா இந்த அளவுக்குப் பிழைச்சு எழுந்ததுக்குக் காரணமே இவங்கதான்,'' என்று தயானந்திடம் மீண்டுமொரு முறை அபிநயாவைக் காட்டிச் சொல்லிவிட்டுப் போனாள்.

''அது சரிதான்,'' என்று மீண்டும் நன்றிப் பெருக்குடன் தன்னைப் பார்த்தவனிடம், ''அப்ப நான் கிளம்பறேன், ஆன்ட்டிய நல்லாப் பாத்துக்கோங்க,'' என்றாள்.

சொன்னது போல அடுத்த சில நிமிடங்களில் கிளம்பியும் விட்டிருந்தாள் அபிநயா.



## 3

ஒரு மாதம் சென்றிருந்தது.

அன்று ஞாயிறு விடுமுறை நாள் என்பதால், நேரம் கழித்துத்தான் படுக்கையை விட்டே எழுந்தாள்.

சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கிச்சனுக்குள் வந்தவள், ''மம்மி! காபி,'' என்றாள்.



''டிபனே சாப்புட்லாம்மா.''

''ம்கூம். காபிதான்.''

''சரி. தர்றேன். வெயிட் பண்ணு,'' என்று தாய் சொல்லிக்கொண்டிருக்கும்போதே தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தாள்.

தயானந்த் என்று வந்தது.

மீண்டும் இவனா என்று நினைத்தவள் ஏதோ தோன்ற உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

''ஆமா. அபிநயாதான். சொல்லுங்க.''

சில நிமிடங்கள் பேசியவள், ''சரி. வந்துட்டுக் கூப்புடுங்க,'' என்று போனை வைத்திருந்தாள்.

''இந்தா காபி,'' என்று வந்தவாறே, மகளிடம், ''யார் வரப் போறாங்க?'' என்று கேட்டார்.

''அதான் நான் ஹெல்ப் பண்ணினேனே, அந்த நிர்மலா ஆன்ட்டி, அவங்கதான்...''

''சரி. என்னவாம்?''

தாய் கேட்க, அனைத்தையும் சொன்னாள் அபிநயா.

''சரி. நீ வீட்லதான இருக்கப் போற. நானும் டாடியும் முடிவு பண்ணின மாதிரி கிளம்பிக்கறோம்...''

''நீங்களும் இருங்கமா, அவங்க எல்லாரையும்தான் பாக்கணும்னு சொன்னாங்களாம்.''

''அட என்ன நீ, சும்மா இருக்காம உதவி பண்ணப் போய் இப்ப எங்க வேலையையும் சேத்துக் கெடுக்கற...''

''ப்ளீஸ்மா. இன்னும் ஒரு மணி நேரத்துல இங்க வந்துட்றதா சொன்னாங்க. அவங்க வந்துட்டுப் போன உடனே கிளம்பிக்கோங்களேன்.''

அவளை யறியாமலேயே ஒரு அடி பின்னால் வந்திருந் தாள் அபிநயா.

''என்னடாம்மா, உனக்குத்தான். என் உயிரக் காப்பாத் தின நன்றிக்காக ஒரு சின்ன அன்பளிப்பு. வாங்கிக் கோம்மா.''

''அதுதான் எதுக்கு ஆன்ட்டி? தயவு செஞ்சு புரிஞ் சுக்கோங்க. இதையெல்லாம் என்னால நிச்சயம் வாங் கிக்க முடியாது...''

''என்னமா இப்படிச் சொல்ற? இன்னைக்கு என்னோட பிறந்த நாள். வழக்கமா என்னோட பிறந்த நாளுக்கு ஆயிரக்கணக்கான அநாதைக் குழந்தைகளுக்கு வயிறு நிறையச் சாப்பாடு குடுப்பேன். என் சின்ன வயசுலயிருந்தே அது வழக்கம். அதுல எம் மனசுக்கு ஒரு திருப்தி. ஆனா இந்த வருஷம் என் இடத்துல யார் இருந்தாலும் இதத் தான் செஞ்சிருப்பாங்க.''

அந்த ஆன்ட்டி பாட்டுக்கு மேலும் மேலும் ஏதோ சொல்லிக் கொண்டே போக, ஒருவிதச் சங்கடத்தில் நெளியவே ஆரம்பித்து விட்டிருந்தாள் அபிநயா.

''நீங்க சந்தோஷமா இத ஏத்துக்க எவ்வளவு நேரம் ஆனாலும் சரி, அதுவரைக்கும் நான் இப்படியேதான் நின்னுட்டிருப்பேன்,'' என்று நிர்மலா சொல்ல, அவ ருடைய கணவரும், ''யோசிக்காம வாங்கிக்கோமா,'' என்றார்.

''இந்த மாதிரி இன்னும் நாலஞ்சு மடங்கு எடுத்துட்டு வந்திருப்பாங்க. நாங்கதான் அவங்க தயங்காம நீ குடுக் கறத வாங்கிக்கணும்னா இது போதும்னு ரொம்பவும் எடுத்துச் சொல்லி, ஒரு வழியா சம்மதிக்க வெச்சு அழைச் சுட்டு வந்திருக்கோம்,'' என்றார்.



''எவ்வளவு நேரம் ஆன்ட்டி கைலயே வெச்சுட்டு நிப்பாங்க. சந்தோஷமா வாங்கிக்கோ அபி!'' என்று தனது பெற்றவர்களும் சிலமுறை சொன்ன பிறகே முடிந்த அளவு தயக்கத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு வாங்கிக் கொண்டாள் அபிநயா.

மேலும் சிறிது நேரமும் கூட இருந்து பேசிக் கொண் டிருந்து விட்டு, ''கட்டாயம் நீங்க எல்லாரும் எங்க வீட் டுக்கு ஒரு முறை வரணும்,'' என்று மீண்டும் சில முறை யும் கூடச் சொன்னவர்கள், அதற்குப் பிறகே கிளம்பி யிருந்தார்கள்.

மூவரும் வாசல் வரை சென்று அவர்களை வழி யனுப்பி விட்டு அதற்குப் பிறகே உள்ளே வந்தனர்.

உள்ளே வந்ததும், ''என்ன, கிளம்பலாமா?'' என்று மனைவியைப் பார்த்தார் ராகவன்.

ஆனால் அதெல்லாம் அவருடைய மனைவியின் காது களில் விழுந்தால் அல்லவா?

அவர் பாட்டுக்குச் சென்று அந்த வெள்ளித் தட்டை ஆசையுடன் எடுத்துத் தனது மடியில் வைத்துப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தார்.

''அபி!''

தாய் அழைக்க, ''என்ன மம்மி?'' என்று அருகில் வந் தாள் அபிநயா.

''இது என்னமா இவ்வளவு வெச்சுக் குடுத்திருக்காங்க?''

எல்லையற்ற ஆச்சரியத்துடன் கேட்ட தாயிடம், ''அதான் அப்பவே வேண்டாம்னு சொன்னேன். விட் டிங்களா?'' என்று கோபத்துடன் பட்டென்று கேட்டாள் அபிநயா.

காருக்குப் போறேன்.'' என்று வெளியே சென்றே விட்டிருந்தார்.

''அபி.''

''டாடி.''

''சரிமா. போய்ட்டு வந்துட்றோம்.''

''சரி டாடி.''

''லாஸ்ட் டென் டேஸாவே உனக்கு வொர்க் லோட் அதிகமாச்சே. நல்லா சாப்டுட்டு கொஞ்ச நேரம் போய் ரெஸ்ட் எடு. ஈவினிங் எங்கயோ வெளிய போகணும்னு வேற சொல்லிட்டிருந்தியே.''

''சரி டாடி.''

பெற்றோர் கிளம்பியதும், அவர்கள் சொன்னதைப் போல வீட்டை உள்புறமாகப் பூட்டிக் கொண்டு வந்து டி.வி.யைப் போட்டுக் கொண்டு சோபாவில் அமர்ந்திருந்தாள் அபிநயா.

அதற்குப் பிறகுதான் தனக்கு முன்னால் டீபாயின் மேலிருந்த அந்த வெள்ளித் தட்டைப் பார்த்தாள்.

அந்த ஆன்ட்டி எவ்வளவு ஆசையுடன் கொடுத்தார் என்று தோன்ற உடனே அந்தத் தட்டில் இருப்பவற்றைத் தானும் ஒரு முறை எடுத்துப் பார்த்தாள்.

என்னதான் மனதிற்குப் பிடித்திருந்தாலும், தனக்குச் சொந்தமில்லாததைப் போல ஏதோ உறுத்தியது.

சரிதான். இதை இத்தோடு மறந்து விட்டு விடலாமே என்று தோன்ற அந்தத் தட்டை எடுத்துக் கொண்டு போய்ப் பீரோவிற்குள் வைத்துப் பூட்டி விட்டு வந்தாள்.



அவர்கள் வருவதாகச் சொல்லியிருக்கிறார்களே என்று குளித்து விட்டு அந்தப் புது சுடிதாரை எடுத்துப் போட்டிருந்தவள், மீண்டும் நைட்டிக்கு மாறினாள்.

வயிறு பசிக்க, அதற்குப் பிறகுதான் இன்னும் சாப்பிடவில்லை என்பதே நினைவிற்கு வந்தது.

பொங்கலும், பூரியும் ஹாட் பாக்ஸில் இருக்க, ஒரு வெட்டு வெட்டினாள்.

உண்டு முடித்ததும் அனைத்தையும் ஒதுக்கி வைத்தவள், ஸ்ட்ராங்காக ஒரு கப் காபியைக் கலக்கிக் கொண்டு வந்து மீண்டும் டி.வி. பார்க்க அமர்ந்து விட்டிருந்தாள்.

அதே நேரம் ஒரு புது எண்ணிலிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினாள் அபிநயா.

''ஆன்ட்டி! நீங்களா? சொல்லுங்க.''

................

''அச்சச்சோ! என்ன ஆன்ட்டி நீங்க? உங்க அன்பளிப்பு எனக்கு ரொம்பப் பிடிச்சது ஆன்ட்டி!'' என்றவள், ''ஏன் இப்பக்கூட அதத்தான் ரசிச்சுப் பாத்துட்டிருக்கேன்.'' என்று நிர்மலாவிற்காகப் பொய் சொல்லவும் செய்தாள்.

அவர் ஆதங்கத்துடன் கேட்டது அபிநயாவை அப்படிச் சொல்ல வைத்து விட்டிருந்தது.

''நீங்க திடீர்னு குடுக்கவும்தான் எனக்கு என்னவோ மாதிரி தோணிடுச்சு. ஆனா இப்ப ஏன் அப்படி செஞ்சோம்னு பீல் பண்ணிட்டிருக்கேன்.''

இன்னும் ஏதேதோ சொல்லி அந்த ஆன்ட்டியைச் சமாதானப்படுத்தி விட்டு அதற்குப் பிறகே போனை வைத்திருந்தாள் அபிநயா.

அது மட்டுமல்லாமல் அதற்குப் பிறகுதான் அவள் தானும் சரியான பாதையில் யோசிக்கத் தொடங்கியிருந்தாள்.

பெற்றவர்கள் சொன்னது போல அவர்களைப் பொறுத்த வரை இது ஒரு சிறு அன்பளிப்பே. அதற்குத் தான் அவ்வளவு தயங்கியிருக்கவே வேண்டாமோ என்று இப்பொழுது நினைக்கத் தோன்றியது.

அந்த நிர்மலா ஆன்ட்டியையும், பாவம்! நாம் கஷ்டப்படுத்தாமல் இருந்திருக்கலாம் என்றும்.



## 4

"அம்மா."

"வா தயா."

"என்ன ஃப்ரீயா உக்காந்திருக்கீங்க, சமையல் வேல எதுவுமில்லையா?"

"அது சரி, இப்பக் கேப்பீங்க. ஆனா கடைசில சும்மா இருக்க முடியாதான்னு திட்டுவீங்க. அப்பாவுக்கும் மகனுக்கும் இதே வேலையாப் போயிடுச்சு."

"பின்ன நீங்க ஒரேயடியா மூழ்கிட்டா அதுவும் தப்பு தான? ஏதோ போரடிக்காம இருக்கற அளவுக்குப் பட்டும் படாம வேல செய்யணும்," என்று தயானந்த் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "நிர்மலா! சாப்புடலாமாம்மா?" என்று வந்தார் அவனுடைய தந்தை ராகவேந்திரன்.



"என்னப்பா, ஆபீஸ் கிளம்பிட்ட போலிருக்கு?"

"ஆமாம்பா."

"எனக்கொரு நாலு நாள் ஃபாரின் ட்ரிப் இருக்கு. சரியா எப்பன்னு இன்னுமொரு ரெண்டு நாள்ல கன்பார்மா சொல்லிடறேன்."

"சரிப்பா."

"சரி வா, சாப்புடலாம்," என்று தந்தை அழைக்க, "நான் ஆச்சு. நீங்க சாப்புடுங்க. அம்மா சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். ஸ்ட்ரெய்ன் பண்ணிக்காதீங்க," என்றவன்,

"அப்ப நான் கிளம்பறேன்," என்று பெற்றவர்கள் இருவரிடமும் பொதுவாகச் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தான்.

காரில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்யப் போனவன் தனது மொபைல் ஒலிக்க முதலில் அதை எடுத்துப் பார்த்தான்.

அபிநயா.

அட்டெண்ட் செய்து காதில் வைத்தவன், "சொல்லுங்க," என்றான்.

...............

"இல்ல, சொல்லுங்க."

.............

"என் ஆஃபீஸ் அட்ரெஸ் சொல்றேன். நோட் பண்ணிக்கோங்க. உங்க ஃப்ரண்ட் அங்க வந்து என்னப் பாக்கச் சொல்லுங்க," என்றவன் தனது அலுவலக முகவரியைச் சொன்னான்.

.............

''பரவாயில்ல. அவங்களுக்குத் தகுந்த வேலை இருக்கு. உங்க வார்த்தைக்காக வேல குடுக்கவும் நான் தயாரா இருக்கேன். அதுக்கப்புறம் வேணும்னா அவங்க பர்ஃபாமென்ஸைப் பாத்துட்டுப் பேசிக்கலாம்.''

............

''ம், தாராளமா. இன்னைக்கே வரலாம். நானும் என் பி.ஏ. கிட்ட ஒரு வார்த்தை சொல்லி வெச்சுட்றேன்.''

............

''பரவாயில்ல,'' என்றவன் அடுத்த சில வினாடிகளில் போனை வைத்தும் இருந்தான்.

உடனே காரை ஸ்டார்ட் செய்திருந்தவனுக்கு லேசாகச் சிரிப்புக் கூட வந்திருந்தது.

அதற்கு இரண்டு காரணங்கள்.

ஒன்று அபிநயா தனக்கு போன் செய்திருந்தது.

மற்றொன்று அபிநயா தனது தோழிக்காகக் கேட்ட வேலை தனது கம்பெனியில் அப்பொழுது காலியாக இருந்தது.

அபிநயா சொல்லியிருந்தது போல அன்று மதியம் அவளுடைய தோழி வர, அழைத்துப் பேசினான். அதாவது இண்டெர்வியூ செய்தான்.

தான் எதிர்பார்த்ததை விடவும் கூட அந்தப் பெண் திறமைசாலியாகத் தோன்ற, மறுநாளில் இருந்தே வேண்டுமானாலும் வேலையில் சேர்ந்து கொள்ளச் சொல்லி விட்டிருந்தான்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் பறித்த திருப்தி ஏற்பட்டிருந்தது.



அபிநயாவை அழைத்துச் சொல்லலாமா என்று பரபரத்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஆனால் அன்று மாலையே அவளிடமிருந்து அவனுடைய மொபைலுக்கு அழைப்பு வந்து விட்டிருந்தது.

அட்டெண்ட் செய்து, ''சொல்லுங்க,'' என்று காதில் வைத்திருந்தான்.

.............

''அதுதான் சொன்னேனே, உங்க வார்த்தைக்காகன்னு. எதுக்கும் உங்க நன்றியக் கொஞ்சம் மிச்சம் வெச்சுக் கோங்க. வேல திருப்தியா இல்லேன்னா வேலைல இருந்து நிறுத்தவும் யோசிக்க மாட்டேன்.''

....

''அதெல்லாம், அது வரைக்கும் ரொம்பவே திருப்தியா தான் இருந்தது. பாக்கலாம்.''

..........

''எனக்கு வெறும் தேங்க்ஸ் பத்தாது.''

..........

''ஒரு சின்ன ட்ரீட் குடுத்தாக் கூட சந்தோஷம்தான்.''

.........

''அதுவும் உங்க இஷ்டம்தான். எங்க குடுத்தாலும் வரத் தயார்.''

..........

''வேண்டாம், அப்புறம் நிஜமாவே அங்க வந்து நின்னுடுவேன்.''

..........

''கமிங் சன்டே? சரி. வந்துட்றேன்,'' என்றவன், அடுத்த சில வினாடிகளில் மொபைலை வைத்திருந்தான்.

''தயா.''

''சொல்லுங்கமா.''

''வா. வந்து டிபன் எடுத்துக்கோ.''

''எடுத்து வைங்க. வர்றேன். அப்புறம் இன்னைக்கு மாத்திர கரெக்டா எடுத்துக்கிட்டீங்களாம்மா?''

''அதெல்லாம், அப்புறம் தயா...''

''என்னமா, சொல்லுங்க.''

''உங்கப்பாவுக்கு ஏதோ மீட்டிங் இருக்குன்னு சொன்னார். உனக்கு இல்லையா?''

''இல்லமா. அவர் மட்டும் போனாப் போதும். எனக்கு வேற ஒரு வேலையிருக்கு.''

''அப்ப நீ திரும்பவும் கிளம்பணுமா?''

''ஆமாம்மா. போய்ட்டு ஒரு ஒன் அவர்ல வந்துடுவேன்.''

''என்னப்பா, நான் மட்டும் வீட்ல போரடிச்சுட்டு உக்காந்துட்டிருக்கணுமா?''

தாயைப் பார்க்கவும் பாவமாக இருக்க, ''சரி, விடுங்க. நான் அந்த வேலைய நாளைக்கே பாத்துக்கறேன்,'' என்றான் தயானந்த்.

''நிஜமாவா சொல்ற?''

''ஆமாம்மா. இங்க ஆபீஸ் ரூம்ல இருந்தே சிஸ்டத்துல வேலையப் பாத்துக்கறேன்,'' என்றவன், ''அப்புறம் சித்தப்பா, பெரியப்பா வீட்ல இருந்தெல்லாம் யாருமே வரலையாம்மா?'' என்று கேட்டான்.

''இல்ல கண்ணா. அவங்களும் ஹாஸ்பிட்டல்ல இருந்த வரைக்கும்தான் தினமும் வந்துட்டு இருந்தாங்க.



அதுக்கப்புறம் வீட்டுக்கு ஒரே ஒரு முறை மட்டும்தான் வந்திருக்காங்க...''

''சரிதான்மா. அதான் எல்லாம் சரியாயிடுச்சேன்னு இருந்திருப்பாங்க.''

''என்னவோ போப்பா.''

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க அட்டென்ட் செய்து காதில் வைத்தார் நிர்மலா.

..........

''அப்பிடியா, அதிலிருந்து நாலு வீடு தள்ளித் தான்டா நம்ம வீடும் இருக்கு. நான் கேட்கிட்டயே நிக்கறேன். வா வா,'' என்று சந்தோஷமாக மொபைலை வைத்திருந்தவர், ''கண்ணா, அபிநயா வர்றேன்னா,'' என்றார்.

அப்படிச் சொன்னவர், அதற்குப் பிறகுதான் மகன் என்ன சொல்லி விடுவானோ என்று தயக்கத்தை உள்ளுக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார்.

ஆனால் பயந்தது போலவெல்லாம் எதையும் சொல்லி விடாமல், ''என்ன திடீர்னு?'' என்று சாதாரணமாகக் கேட்ட மகனிடம், சந்தோஷமாக விஷயத்தைச் சொன்னார்.

''சரிப்பா. ரெண்டு நிமிஷத்துல அங்கிருந்து கிளம்பறேன்னா. இனி நான் போய் நின்னா சரியா இருக்கும்...''

''இருங்கமா. சாலமன் கிட்ட இண்டர்காம்ல சொல்லிடறேன்,'' என்றவன் கேட்டில் நின்றிருக்கும் செக்யூரிட்டியை அழைத்து விஷயத்தைச் சொன்னான்.

''ஆமா. வந்தா உள்ள அனுப்புங்க,'' என்று இன்ட்டர்காமை வைத்த மகனிடம்,

''அதெப்பிடி கண்ணா. நான் போய் நின்னே கூட்டிட்டு வந்துடறேனே...'' என்று கேட்டார்.

''அவ்வளவு தூரம் நீங்க நடக்கணுமேன்னு பாக்கறேன்,'' என்றவன், ''சரி. விடுங்க. நான் போறேன்,'' என்று எழுந்திருந்தான்.

அடுத்த சில வினாடிகளில் அவன் நடந்து சென்று கேட்டை அடையவும், அபிநயா வரவும் சரியாக இருந்தது.

ஏனோ அந்தச் சந்திப்பில் இருவரும் அவர்களையறியாமலேயே சிரித்து விட்டிருந்தனர்.

''வா,'' என்று அழைத்த தயாணந்த் உடனே ஏதோ சொல்ல வர, ''பரவாயில்ல, என்ன அப்படியே கூப்புடுங்க. கண்டிப்பா நான் உங்கள விடவும் ரொம்ப சின்னப் பொண்ணாதான் இருப்பேன்,'' என்றாள்.

''அப்ப சரிதான்,'' என்றவன், ''வா,'' என்று முன்னே நடந்தான்.

''ஆமா, எப்படி வந்த?''

''கார்லதான். கார வெளிய ரெண்டு வீடு தள்ளிப் பார்க் பண்ணியிருக்கேன்.''

தானும் சற்று தயானந்தின் வேகத்திற்கு ஈடு கொடுத்து நடந்த அபிநயா, ''அப்புறம் ரொம்ப தேங்க்ஸ்!'' என்றாள்.

..........

''என்ன பாக்கறீங்க? என் ஃப்ரண்டுக்கு வேல குடுத்திருக்கீங்களே, அதுக்குத்தான்,'' என்றாள்.

''ஒரே உதவிக்கு ரெண்டு தேங்க்ஸா?''

''நேர்ல சொல்ற ஃபர்ஸ்ட் தேங்க்ஸ்,'' என்றவள், ''ஆன்ட்டி?'' என்று கேட்டாள்.



''உள்ள இருக்காங்க. அவங்கள ஸ்ட்ரெய்ன் பண்ண விட வேண்டாமேன்னு நானே வந்தேன்.''

''பரவாயில்ல. முதல்ல சரின்னு போன வெச்சுட்ட எனக்குத் திரும்பவும் அதே யோசனைதான். அதான் மறுபடியும் கூப்புட்டு நானே வந்துட்றேன் ஆன்ட்டின்னு சொன்னேன்.''

''ஓ அதுவும் நீதானா?''

இருவரும் வராண்டாவை அடைந்திருக்க, அடுத்து லேசான தயக்கத்துடன் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்திருந்தாள் அபிநயா.

கேட்டிலிருந்து வீடு வந்து சேரும் தூரமே ஒரு கால் கி.மீட்டர் வரும் போலிருக்கிறதே என்று ஆச்சரியத்துடன் மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

''வாடாம்மா, வா வா வா.''

''வர்றேன் ஆன்ட்டி. எப்படியிருக்கீங்க?''

''நான் நல்லார்க்கேன்மா!'' என்ற நிர்மலா, அபிநயாவின் அருகிலேயே வந்து அவளை அழைத்துக் கொண்டு போனார்.

''டிஸ்டர்ப் பண்ணிடலயே ஆன்ட்டி?''

''அச்சச்சோ, எனக்கு இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

''அங்கிள்...''

''இன்னும் ஆபிஸிலிருந்து வரலமா,'' என்றவர், ''அப்புறம் நீ மட்டும் தனியாத்தான் வந்தியா?'' என்று கேட்டார்.

''ஆமா ஆன்ட்டி. அப்பாவும் அம்மாவும் ஊர்ல ரொம்ப சொந்தத்துக்குள்ள ஒரு கல்யாணம்னு நேத்து கிளம்பிப் போனவங்க இன்னைக்கு நைட்தான் வருவாங்க.''

''ஓ அப்ப நேத்து நைட் வீட்ல நீ மட்டும் தனியாவே இருந்துட்டியா?''

''வேலக்காரம்மாவ வந்து தங்கச் சொல்லிட்டேன்,'' என்றவள் கண்களால் யாரையோ தேடினாள்.

''என்னமா தயானந்தா? அவனும் வந்து அஞ்சு நிமிஷம் தான் இருக்கும். டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வருவானா இருக்கும்,'' என்றார்.

''இதோ வர்றேம்மா,'' என்று எழப்போன நிர்மலா விடம், ''ப்ளீஸ் எனக்கு எதுவுமே வேண்டாமே ஆன்ட்டி. இப்பதான் அந்த அங்கிள் வீட்ல அவாய்ட் பண்ண முடியாம சாப்டுட்டு வந்தேன்,'' என்றாள்.

''அதுக்காக சாப்புடாமலா வருவ?'' என்று கேட்ட தயானந்த் அந்த இடத்தை விட்டு எழப்போன தாயிடம், ''நானே சொல்லிட்டேன்மா. நீங்க உக்காருங்க,'' என்று தானும் வந்து அமர்ந்தான்.

''அப்புறம் அவங்க எப்படிப் பழக்கம்மா?''

''அந்த அங்கிள் அப்பாவோட வேலை செஞ்சுட்டிருக் கறவங்க ஆன்ட்டி. இருபது வருஷத்துக்கும் மேல டாடியோட ஃப்ரண்ட்டும் கூட. நாங்க நேரத்துல வர்றது சந்தேகம்தான். நீயாவது அரை நாள் லீவ் போட்டுட்டுப் போய்ட்டு வந்துடுன்னு டாடி மதியம் கூப்புட்டு சொன் னார்.

''ஆனா லீவ் கிடைக்கல. அதனால ஒன் அவர் பர் மிஷன்ல கிளம்பி வந்தேன்.''



''நானுங்கூட ஒரு அரை மணி நேரத்துக்கு முன்னாடி தாம்மா அங்க வந்துட்டு வந்தேன்...''

''தெரியும் ஆன்ட்டி. நான் உங்கள அங்க பாத்தேன். அதுக்கப்புறம்தான் உங்க வீடு இங்க இருக்கறதே எனக்கும் ஸ்ட்ரைக் ஆச்சு மொபைல்ல கூப்புட்டேன்,'' என்றாள்.

''அடடா, அப்படியா! நான் பாக்கலையே.''

''நீங்க வெளிய கொஞ்ச தூரமே வந்துட்டிங்க. அதுக் கப்புறம்தான் நானும் பாத்தேன். அப்புறம் ஆன்ட்டி எங்கிட்ட ஒரு விஷயம். நோட் பண்ணினீங்களா?''

அப்படிக் கேட்ட அபிநயாவை, ''என்னடாம்மா?'' என்று பார்த்தார் நிர்மலா.

''நீங்க குடுத்த நகைகள்தான் போட்டுட்டிருக்கேன்.''

''அடடா, ஆமாம்மா, நானும் இப்பதான் பாக்கறேன். ரொம்ப பிரமாதமா இருக்குடாம்மா.''

அருகில் அமர்ந்திருக்கும் தயானந்த் தன்னைப் பற்றி என்ன நினைப்பானென்று அபிநயாவிற்கும் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

மிகவும் முயன்று அவனைச் சற்றே திரும்பிப் பார்த்தாள்.

அதே நேரம் வேலைக்காரப் பெண் ஸ்வீட்டும், கார மும் கொண்டு வந்து வைத்து விட்டுப் போக, ''எடுத் துக்கோடாம்மா,'' என்றார் நிர்மலா.

தயானந்த் தானும் சொல்ல, கொஞ்சம் ஸ்வீட்டை எடுத்து ருசித்தாள்.

''நீங்களும் எடுத்துக்கோங்க. இப்பதான் வந்தீங்க ளாமே,'' என்று தயானந்தைப் பார்த்துச் சொன்னாள்.

''அது சரிதான்,'' என்றவன், ''விட்டா லொடலொடன்னு பேசிட்டே இருப்ப போலிருக்கு!'' என்று கேட்டான்.

''இனிமேல் நான் உங்ககிட்டப் பேசினா என்னன்னு கேளுங்க.''

''அப்பிடி சொல்லுடாம்மா...''

''அட சும்மா ஒரு வார்த்த கேட்டேன். விட்டாக் கூட்டணியே அமைச்சுடுவீங்க போலிருக்கே.''

''ஆனா அவர் சொன்னது சரிதான் ஆன்ட்டி. என்ன வாயாடின்னு சொல்லாதவங்க ரொம்பக் குறைவு.''

''பொய் சொல்லக் கூடாது. அது மட்டும்தான் சொல் வாங்களா?''

''புரியல,'' என்று தன்னைப் பார்த்தவளிடம், ''சரிதான் விடு,'' என்று விட்டிருந்தான் தயானந்த்.

மேலும் சிறிது நேரமும் கூட இருந்து பேசிவிட்டு அதற்குப் பிறகே கிளம்பினாள் அபிநயா.

''ஒரு நிமிஷம்மா,'' என்று உள்ளே சென்ற நிர்மலா சில வினாடிகளில் குங்குமச் சிமிழுடன் வந்தார்.

வந்தவர் தானே அபிநயாவிற்கு எடுத்து வைத்தும் விட்டார்.

''மாலை நேரம். வயசுப் பொண்ண சும்மா அனுப் பக்கூடாது,'' என்றவர் கொஞ்சம் மல்லிகைச் சரத்தையும் எடுத்து வைத்து விட்டார்.

இடைவரை தொங்கிய அபிநயாவின் கூந்தலை ஆசையுடன் வருடியவர், ''நீ ரொம்ப அழகா இருக் கடாம்மா!'' என்றார்.

''சரிதான் ஆன்ட்டி. நம்பிக்கறேன்.''

''நம்பிக்கையா? இதெல்லாம் உனக்கே அநியாயமா இல்ல?'' என்று தயானந்த் கேட்க, பதில் சொல்லத் தெரியாமல், அதாவது என்ன பதில் சொல்வதென்று புரியாமல் பார்த்தாள்.

ஆனால் அது சில வினாடிகள்தான்.

தயானந்த்தின் கேலி புரிய, ''அப்ப ஆன்ட்டி பொய் சொல்றாங்கன்னு சொல்றீங்களா?'' என்று கேட்டாள்.

''அவங்களுக்குதான் உன்ன ரொம்பப் புடிச்சுப் போச்சே. அதனால உன் விஷயத்துல கொஞ்சம் மிகைப் படுத்தித்தான் சொல்வாங்க.''

''பாத்தீங்களா, அதான் நீங்களே சொல்லிட்டிங்களே. மிகைப்படுத்தறாங்கன்னு. கொஞ்சம்கூட இல்லாம எப்படி மிகைப்படுத்த முடியுமாம்...''

''அடடா, இது பெரிய வாயாடியா இருக்கும் போலி ருக்கே...''

''ம்கூம். நீங்க ஒத்துக்கற வரைக்கும் நான் விட மாட் டேன். சொல்லுங்க. கொஞ்சமாவது இருக்கப் போய்த் தான மிகைப்படுத்தறாங்க?'' என்று கேட்டாள்.

''ம்கூம். நானில்ல. விட்ரு.''

''எனக்குப் பதில் சொல்ல முடியலேன்னு சொல்லுங்க.''

''சரிதான். உன்னை மாதிரி வாயாடிகளுக்குப் பதில் சொல்ல என்னால முடியாது.''

''ஒத்துக்கிட்டா சரி.''

புன்னகையுடன் இருவரையும் பார்த்தார் நிர்மலா.

''இந்த நேரத்துல எப்படிமா தனியாப் போவ?''

''ஏன் ஆன்ட்டி, மணி எழுதான ஆச்சு?''

''அப்ப பயமில்லையா?''

''கொஞ்சம். ஆனாலும் அந்த வழில ட்ரேபிக் சுத்தமாவே ஏன் இந்த நேரத்துக்கு ரோடு ரொம்பவுமே பிரீயா இருக்கும். அதனால ஸ்பீடாப் போய்டுவேன்.''

''ஓ. அதோட அன்னைக்கு நீ எனக்கு உதவும் போது நேரம் இதவிடக் கூட. அதிகமா ஆயிடுச்சு இல்லையா?''

''ஆமா ஆன்ட்டி. எட்டரை.'' என்றவள்.

''சரி ஆன்ட்டி. அப்ப நான் கிளம்பறேன்.'' என்றாள்.

ஆனால் அவர் முதலில் சொன்னதையே பிடித்துக் கொண்டு. ''எப்படி அன்னைக்கு அந்த நேரத்துல வண்டிய விட்டு இறங்கி வந்த? உனக்குக் கொஞ்சங் கூட பயமாவே இல்லையா? என்று கேட்டார்.

''அதுதான் தெரியல ஆன்ட்டி. ஒரு குண்டு தைரியத் துல இறங்கிட்டேன்னு வெச்சுக்கோங்களேன். முதல்ல உங்களுக்கு ஒண்ணு தெரியுமா ஆன்ட்டி? எனக்கு ப்ளட்னாலே ரொம்பவும் பயம். ஏன் நிறைய தடவ சில ஆக்ஸிடெண்ட்ஸ் எல்லாம் பாத்து மயக்கம் போட்டுக் கூட விழுந்திருக்கேன்.''

''அப்படியா?''

''ஆமா ஆன்ட்டி. அதனால ரொம்ப நாள் அப்பா எனக்கு டூ வீலர், கார் எதுவுமே குடுக்காமத்தான் இருந்தார். பஸ்ல எல்லாம் என்னால வந்துட்டிருக்க முடியாதுன்னு என்ன சொல்லியும் அப்ப வேலைக்கு வேணும்னாலும் போகாம விட்ரு. அவ்வளவுதான்னு சொல்லிட்டார்.

''அதுக்கப்புறம் போராடி, சண்ட போட்டு அதுவும் என் சம்பளப் பணத்துல தான் இப்ப நான் ஓட்டிட்டிருக்கற காரையே வாங்கினேன், ஆன்ட்டி.''



''உன் காருக்குப் பின்னாடி இவ்வளவு பெரிய கதை யிருக்கா?'' என்று தயாளந்த் கேலியாகச் சிரிக்க, ''பின்ன இதக்கூட நான் சுருக்கமாதான் சொல்லியிருக்கேன்.'' என்று தானும் சிரித்தாள் அபிநயா.

''சரி ஆன்ட்டி. நான் கிள...''

''அன்னைக்கு நடந்ததையெல்லாம் சொல்லேன் அபி. தெரிஞ்சுக்கணும்னு தோணுது...''

''எதுக்கு ஆன்ட்டி. நீங்க அதை - அந்த ஆக்ஸிடெண்ட் டையே மறக்க ட்ரை பண்ணுங்களேன்.''

''ஆமாம்மா.''

''எதுக்குத் திரும்பத் திரும்ப அதையே நினைச்சு உங் களையே நீங்க ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கறீங்க?''

''என்ன நடந்ததுன்னு தெரிஞ்சுட்டா அதுக்கப்புறம் எனக்கும் இவ்வளவு தானான்னு ஆயிடும்பா. அதான்...''

''அதான் ஆன்ட்டி. அன்னைக்கு வேல முடிஞ்சு நான் கம்பெனிய விட்டுக் கிளம்பும் போதே டைம் எட்டு. லேட் டாயிடுச்சேன்னு மனசுக்குள்ள லேசா பயமும் கூட.

''சரிதான், நிக்காம ஸ்பீடா போய்ட்டாத் தீந்ததுன்னு வேகமாதான் காரயே ஓட்டிக்கிட்டுப் போய்ட்டிருந்தேன்.

''அப்பதான் மரத்துல மோதி நின்னுட்டிருந்த உங்க காரப் பாத்தேன். உங்க கார் கதவும் பாதி திறந்தேதான் இருந்தது.''

''நான் போன ஸ்பீடுக்கு உள்ள ஒரு லேடி அதாவது நீங்க இருந்தது மட்டும் தான் தெரிஞ்சது நீங்க லேசா கைய அசைச்சுக் கூப்புட்ற மாதிரியும்.

''முதல்ல ஏற்கெனவே எனக்கிருந்த பயத்துல நிக்காம போய்ட்டேன். ஆனா ஒரு அம்பது மீட்டர் கூடப்

போயிருக்க மாட்டேன். அந்த நிமிஷமே காரத் திருப்பிட்டேன்.''

.........

''ஸாரி ஆன்ட்டி!'' என்று நிர்மலாவின் கையைப் பிடித்துக் கொண்டவள், ''உங்களப் பாத்த அந்த ஒரு செகண்ட் உண்மைலயே நான் பயந்துட்டேன்,'' என்றாள்.

''அந்த அளவுக்கு ப்ளட்ல உங்க கழுத்து சேல - ஏன், மடி வரைக்குமே கூட நனஞ்சிருந்தது. அது மட்டுமில்லாம நிக்காம ப்ளட் தொடர்ந்து வந்துட்டே வேற இருந்தது.

''நீங்க மேக்சிமம் மயக்க நிலைக்குப் போயிருந்தீங்க. அதப் பாத்த எனக்கு மத்ததெல்லாத்தையும் விட உங்கள உடனே ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியாகணுங்கறதுதான் ரொம்பவும் ஸ்ட்ராங்கா தோணுச்சு.

''ஆன்ட்டின்னு சத்தமாக் கூப்புட்டேன், ஹாஸ்பிட்டல் போலாம், வாங்கன்னும். நீங்க ரொம்பவும் லேசா தலையாட்டின மாதிரிதான் இருந்தது.

''நான் என் பலம் எல்லாத்தையும் குடுத்து உங்களத் தூக்கற மாதிரி வெளிய இழுத்தேன். நீங்களும் ரொம்பவும் கொஞ்சம் ஒத்துழைச்சீங்க. அப்படியே எம்மேல சாய்ச்ச மாதிரியே என் காருக்கு அழைச்சுட்டுப் போய் பின் ஸீட்ல உட்கார வெச்சுட்டு, திரும்பவும் உங்க காருக்குப் போய் அதப் பூட்டி சாவியக் கைல எடுத்துக்கிட்டு வந்து வேகமா என் கார ஹாஸ்பிட்டலுக்கு விட்டேன்.

''அடுத்த அஞ்சு நிமிஷத்துல உங்களுக்கு ஹாஸ்பிட்டல்ல ஃபர்ஸ்ட் எய்டே குடுத்துட்டாங்க. நிக்காம வந்துட்டிருந்த ப்ளட்ட ஸ்டாப் பண்ணிட்டாங்க. அதனால



அப்பத்துக்குப் பயமில்ல. ஆனாலும் உடனே ப்ளட் குடுத்தாகணும்னு பேசிக்கிட்டாங்க.

''அதுக்கப்புறம் எப்பிடியோ நம்பரக் கண்டுபிடிச்சு உங்க வீட்டுக்கு நியூஸ் குடுக்கறதுக்குள்ள ரொம்ப நேரம் போயிடுச்சு.''

அதற்குப் பிறகுதான் உடனே கிளம்பி விட்டதின் காரணத்தையும் சொன்னாள் அபிநயா.

''அதுக்கப்புறம் வீட்டுக்குப் போய்த் திரும்பவும் ஹாஸ்பிட்டலுக்கு போன் பண்ணிக் கேட்டேன். அடுத்த இருபத்தஞ்சு நிமிஷத்துலயே உங்க சன் வந்துட்டதா சொன்னாங்க ஆன்ட்டி.

''அதுக்கும் அப்புறம்தான் கொஞ்சம் பரவாயில்லாத மாதிரி ஃபீல் பண்ணினேன் ஆன்ட்டி.

''மறுநாள் வந்து பாக்கலாம்னு ரொம்பவும் தோணுச்சு. ஆனாலும் போலீஸ் அது இதுன்னு ஸ்டாஃப்ஸ் பேசிக்கிட்டத நினைச்சு பயமா இருந்ததால திரும்பவும் போன்ல மட்டும் உங்களுக்கு எப்படியிருக்குன்னு கூப்புட்டுக் கேட்டுக்கிட்டேன்.

''அதுக்கப்புறம்தான் நீங்க எனக்குக் கூப்புட்டீங்க,'' என்று திரும்பி தயானந்த்தைப் பார்த்தாள் அபிநயா.

''நான் கூப்புடாம இருந்திருந்தா நீயும் வந்து எங்களப் பாத்திருக்கவே மாட்ட இல்லையா? அம்மாவக் காப்பாத்தினது நீதாங்கறது எங்களுக்கும் தெரியாமலே போயிருக்கும். அப்படித்தான?''

''அது சரிதான்,'' என்ற அபிநயா, ''உங்களையெல்லாம் மிஸ் பண்ணியிருப்பேன்,'' என்றாள்.

"நீ எவ்வளவு பெரிய வேல செஞ்சிருக்க தெரியுமா? இன்னுமொரு அஞ்சு நிமிஷம் லேட்டாயிருந்தாக் கூட அம்மாவப் பிழைக்க வெச்சிருக்க முடியாதுன்னு சொன்னாங்க," என்ற தயானந்திற்குக் குரல் கரகரத்து விட்டிருந்தது.

ஏன் அங்கிருந்த மூவருக்குமே.

சில வினாடிகள்தான்.

முதலில் நடப்பிற்கு வந்திருந்தான் தயானந்த்.

"என்ன வாயாடி, கிளம்பலயா?" என்று கேட்டான்.

"பின்ன?" என்று அந்த வினாடியே எழுந்து விட்டிருந்த அபிநயா, "சரி ஆன்ட்டி. நான் கிளம்பறேன். உடம்ப நல்லாப் பாத்துக்கோங்க," என்று விட்டுத் திரும்பி தயானந்த்தைப் பார்த்தாள்.

அவனிடமும், "சரி கிளம்பறேன்," என்றாள்.

"கொண்டு வந்து விடணுமா?"

"அச்சச்சோ! அப்புறம் என் கார என்ன பண்றது?" என்று கேட்டவள் அடுத்த சில நிமிடங்களிலேயே காரை ஸ்டார்ட் செய்து முக்கியச் சாலையை அடைந்திருந்தாள்.



# 5

மிகவும் வெகுளித்தனமாகப் பேசி விட்டுச் சென்ற அபிநயா தாய், மகன் இருவரையுமே இரு வேறு



விதங்களில் ஈர்த்திருந்தாள். அதாவது அவர்கள் இருவருக்குமே அவளை மிகவும் பிடித்து விட்டிருந்தது.

மேலும் சில நாட்கள் சென்றிருந்தன.

வழக்கம் போல ஞாயிறான அன்று படுக்கையை விட்டே நேரம் கழித்துத்தான் எழுந்திருந்தாள் அபிநயா.

எழுந்த வினாடியே தனது மொபைலுக்கு அழைப்பு வர, எடுத்துப் பார்த்தாள்.

தயானந்த்.

தொண்டையைச் செருமிக் கொண்டு அட்டெண்ட் செய்து "ஹலோ" என்றாள்.

...........

"ம். குட்மார்னிங். எப்படியிருக்கீங்க?"

..........

"ம். இப்பதான் எழுந்துட்டே இருக்கேன்."

..........

"நான் மறக்கலையே," என்று சமாளித்தவள், உண்மையிலேயே அந்த ட்ரீட் விஷயத்தை மறந்துதான் போய் விட்டிருந்தாள்.

.........

"சரி. நான் வந்துட்றேன். அப்புறம் ஆன்ட்டி எப்படியிருக்காங்க?"

..........

"நான் ரொம்பவும் கேட்டதா சொல்லுங்க," என்றவள், "சரிதான். அப்பக் கிளம்பி நான் தயாரா இருக்கேன். நீங்க கூப்புடுங்க. நான் உங்ககூடவே வந்துட்றேன்," என்றாள்.

.........

''அதெல்லாம் பன்னென்டு மணிக்கே நான் தயாரா யிட்டேன். அதுக்கப்புறம் நீங்க எப்ப வந்தாலும் சரி,'' என்று போனை வைத்திருந்தாள்.

தயானந்துடன் வெளியே செல்லப் போகிறோம் என்ற எண்ணமே மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது.

காலைக் கடனை முடித்துக் கொண்டு கீழே இறங்கி வந்தவள், ''அம்மா, காபி,'' என்றாள்.

''தர்றேன். அப்புறம் இன்னைக்கு நீ ப்ரீ தானமா?''

''இல்ல மம்மி. எனக்குக் கொஞ்சம் வெளிய போகணும்.''

''என்னமா நீ, இன்னைக்கு மாமா வீட்ல இருந்து எல்லாரும் வர்றேன்னு சொல்லியிருக்காங்களேமா.''

''அதனால என்ன மம்மி, போய்ட்டு ரெண்டு மணி நேரத்துல வந்துடுவேன்.''

''எங்க போற?''

''என் ஃப்ரண்ட் கூட கொஞ்சம் வெளிய போகணும்.''

முதன் முறை பொய் சொல்வது மனதிற்கு ஒரு மாதிரி யாக இருந்தது.

நல்ல வேளையாக அது எந்த ஃப்ரண்ட் என்ன என் றெல்லாம் கேட்டுத் தாய் மேலும் சங்கடத்தைக் கொடுக் காததில் சற்று நிம்மதியாக உணர்ந்தாள்.

உடனே அப்படியென்ன தவறாகச் சொல்லி விட்டே னென்றும் நினைக்கத் தோன்றியது.

தயானந்த் ஃப்ரண்ட்தானே.



ஆனால் அவன் தன்னை எப்படி எடுத்துக் கொள் வானோ...

அவன் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள் ளட்டும். ஆனால் அவன் தனக்குத் தோழன்தான்.

ஏன் அவனுமே அப்படித்தான் எடுத்துக் கொள்வானாக இருக்கும்.

''சரிமா. இனி நான் சொல்ல என்ன இருக்கு. உன் வேலையப் போய்ப் பாரு.''

''வனிதா வீட்ல இருந்து எத்தன மணிக்கு வர்றாங்க?''

''தெரியலமா. கூப்புடுவாங்க.''

சொன்னது போலப் பன்னிரண்டரைக்குத் தயானந் திடமிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வர வீட்டை விட்டு வெளியே வந்தாள் அபிநயா.

அவனிடம் சொன்னது போலப் பக்கத்திலிருந்த பூங்கா வழியாக அதன் காம்பவுண்டைப் பிடித்துக் கொண்டு நடந்து சென்றவள், தன்னருகில் ஒரு கார் வந்து நிற்கவும் திரும்பிப் பார்த்தாள்.

அதே நேரம், ''உள்ள வா,'' என்று தயானந்த் கார் கதவைத் திறந்திருக்க ஏறி அமர்ந்து கொண்டு கதவைச் சாத்தினாள்.

''அப்புறம்?''

''என்ன அப்புறம்?''

''காலைல என்ன சாப்ட?''

''இட்லி, சிக்கன் குழம்பு.''

''காலைலயேவா?''

''ம், ஏன் நீங்கெல்லாம் காலைல அப்படி சாப்புட மாட் டீங்களா?''

''சிக்கன் செஞ்சதில் அப்ப ஒரு வெட்டு வெட்டிட்டன்னு சொல்லு.''

''அச்சச்சோ, நான் ரெண்டு இட்லிதான் சாப்புட்டேனாக்கும்.''

''ஏன் ஒரு இட்லி சாப்புட்டிருக்க வேண்டியதுதான?''

''அது எப்படிப் போதுமாம்? கூட நாலு தோச மட்டும் தான சாப்புட்டேன்.''

பட்டென்று அப்படிச் சொன்னவளை, ''ம் அப்பிடிப் போடு. எங்க வரிசையா என்னென்ன சாப்புட்டன்னு ஒரு லிஸ்ட் போடு, பாக்கலாம்,'' என்றான்.

''அப்புறம் ஒரே ஒரு ஸ்வீட். அவ்வளவுதான்.''

''இத்தனய சாப்டுட்டு எப்படிக் கூலா அவ்வளவு தான்னு சொல்ற?'' என்று கேட்டான் தயானந்த்.

''என்ன பண்றது, எல்லாம் ஒரு தன்னடக்கம்தான்,'' என்று அபிநயா பாவனையுடன் சொல்ல, இப்பொழுது சிரித்தே விட்டிருந்தான்.

''ஆமா, நீங்க என்ன சாப்புட்டீங்க?''

''சப்பாத்தி, பொங்கல், வடை, ஸ்வீட்...'' என்று மேலும் ஏதோ சொல்லப் போனவனை மேலிருந்து கீழாகப் பார்த்தாள் அபிநயா.

''என்ன?''

''என்னவோ என்ன ஏதோ சொன்னீங்க?''

''சரி சரி. விடு வாயாடி, நான் லஞ்ச் ட்ரீட் குடுக்கலாம்னு வரச் சொன்னா இவ்வளவு சாப்டுட்டு வந்திருக்க, ம்...''

''ஹலோ, இப்ப ட்ரீட் குடுக்கப் போறது நான்.''



''நோ, நோ. நாந்தான்.''

''இத என்னால ஒத்துக்கவே முடியாது. இன்னைக்கு நாந்தான தர்றேன்னு சொன்னேன்.''

''சரி வா. அத அங்க போய்ப் பாத்துக்கலாம்,'' என்றவன், ''அப்புறம் நீ ஒரே பொண்ணுதானா?'' என்று கேட்டான்.

''ம், நீங்க?''

''எனக்கொரு தங்கை இருக்கா. கல்யாணம் பண்ணிக் குடுத்தாச்சு.''

''அப்பிடியா, அப்ப உங்களுக்கு என்ன வயசாச்சு? முப்பத்தஞ்சா?''

''ஏய், என்ன உன் வயசச் சொல்ற?''

''என் வயசு அதுலிருந்து பதிமூனக் கழிச்சா வரும்.''

''உங்கிட்ட குறுக்குக் கேள்வி கேட்டா எல்லா விஷயத்தையும் கறந்துடலாம் போலிருக்கே...''

''அடடா, அது உங்களுக்கும் தெரிஞ்சு போச்சா?'' என்றவள், ''ஒண்ணு பாருங்க. நான் உண்ம பேசறதே ரேர் தான்,'' என்றாள்.

''அதுவும் தெரியுமே.''

''எப்படி?''

அதே நேரம், ''சரி இறங்கி வா,'' என்று தயானந்த் அழைத்த பிறகு தான் கார் அங்கு நின்று விட்டிருந்ததையே கவனித்தாள் அபிநயா.

''இதுக்குள்ள வந்துட்டோமா?''

''இறங்கி வந்து பாரு,'' என்றவன், அதற்குள் இறங்கியே விட்டிருக்க, தானும் இறங்கியிருந்தாள் அபிநயா.

ஒரு பெரிய வீட்டின் முன்பாகக் கார் நின்றிருக்க, அது இப்பொழுது தான் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வீடு என்பது தெரிந்தது.

பெரும்பான்மை வேலைகள் முடிந்து விட்டிருக்க, பெரிய பெரிய மரங்களை மலை போலக் குவித்து வைத்திருந்ததைக் கண்டாள்.

''என்ன, உள்ள வா.''

தயானந்த் அழைக்க, ''இது யார் வீடு?'' என்று கேட்டாள்.

''நம்மளோடதுதான், அதாவது என் தங்கைன்னு சொன்னேனே... அவளுக்காகக் கட்டிட்டிருக்கோம்,'' என்றான்.

''ஓ வீடு ரொம்ப பிரமாண்டமா இருக்கு.''

''அப்ப நல்லா இல்லையா?''

''ரொம்ப நல்லா இருக்கு. ஆனாலும் கம்ப்ளீட்டாப் பாத்துட்டு சொல்றேன்.''

தயானந்த் வீட்டை முழுவதுமாகச் சுற்றிக் காட்டத் தானும் அனைத்தையும் பார்த்தவாறு அவனுடன் நடந்தாள் அபிநயா.

தான் இதுவரை கண்டிருந்த பெரிய பெரிய கட்டடங்களையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விடும் போல இருந்த அந்த வீட்டின் ம்கூம் மாளிகை வீட்டின் பிரமாண்டமும், உள் அலங்காரங்களும் அவளை வாயடைக்கச் செய்து விட்டிருந்தன.

அப்படியே மேலோட்டமாகப் பார்த்து விட்டு வரச் சுத்தமாக முடிந்திருக்கவில்லை.



ஒவ்வொன்றையும் குறைந்தது ஒரு சில நிமிடங்களாவது நின்று ரசிக்க வேண்டும் போல இருந்த வீட்டின் அழகான வேலைப்பாடுகளில் அபிநயா மெய் மறந்து நின்று விட்டிருந்தாள் என்றால் அது சற்றும் மிகையல்ல.

எங்கே தயானந்த் தனக்காகக் காத்திருக்கிறானோ என்று திரும்பிப் பார்த்தவள், அவன் மர வேலை செய்து கொண்டிருந்தவர்களிடம் மும்முரமாக எதையோ சொல்லிக் கொண்டிருப்பது தெரிந்தது.

மேலும் சில நிமிடங்களும் கூட ரசித்துப் பார்த்து விட்டு அதற்குப் பிறகே தயானந்தின் அருகில் வந்திருந்தாள் அபிநயா.

''செலவப் பத்தியோ, மேன் பவரப் பத்தியோ யோசிக்க வேண்டாம். அவங்க எக்ஸ்பெக்ட் பண்ற மாதிரி செஞ்சு குடுக்கணும். அதுதான் முக்கியம்,'' என்றவன், ''முடிஞ்ச அளவுக்கு ஆளுங்கள அதிகமாப் போட்டு சொன்ன தேதிக்குள்ள வேலய முடிக்கப் பாருங்க,'' என்றான்.

''சரிங்கய்யா,'' என்றவர்களிடம், ''சாயந்தரம் பில்டிங் ஓனர்ஸ் வருவாங்கன்னு நினைக்கறேன். அவங்ககிட்டயும் எல்லாம் திருப்தியான்னு ஒரு தடவ கேட்டுக்கோங்க,'' என்றான்.

அடுத்த சில நிமிடங்களில் தன்னை நோக்கி வந்த தயானந்த்தைப் புன்னகையுடன் பார்த்தாள் அபிநயா.

''என்ன?''

''பில்டிங் முழுக்க சுவரே தெரியாத அளவுக்கு வுட்வொர்க் பண்றீங்க. எவ்வளவு செலவாகும்?'' என்று கேட்டாள்.

''ஏன் நல்லா இல்லையா?''

''ரொம்பவும் அழகா இருக்கு. அந்தக் காலத்து சினி மாக்கள்ல வர்ற பெரிய பெரிய மாளிகைகள் எல்லாம் தோத்துப் போயிடும் போலிருக்கு!'' என்று ஆச்சரியத் துடன் சொன்னவளிடம், ''கிளம்பலாமா?'' என்று கேட் டான்.

''ஓ. யெஸ். நான் ரெடி!'' என்றவளிடம், ''எல்லாம் ஐயாவோட ப்ளான் தான்!'' என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான் தயானந்த்.

''பரவாயில்ல. அங்கயும் கொஞ்சம் இருக்கும் போலி ருக்கே,'' என்றவளிடம், ''பின்ன உன்ன மாதிரியே சுத்தமா இருக்கும்னு நினைச்சுட்டியாக்கும்?'' என்று கேட்டான்.

''ஆமா, எப்ப கிரஹப் பிரவேசம்?''

''இன்னும் ஒரு மாசமிருக்கு,'' என்றவன், ''என்னப் பேர் சொல்லிக் கூப்புடு,'' என்றான்.

''சரி தயானந்த். அப்படியே கூப்புட்றேன்.''

''நீ சொல்லலேன்னாலும் எம்பேர் அதுதான். சும்மா தயான்னே கூப்புடு, போதும்.''

''சரி தயா.''

''நீ ஒரே பொண்ணுன்னு சொல்ற. வீட்டுக்கு நீ அப்ப ரொம்ப செல்லம்னு சொல்லு.''

''ம்கூம், அப்படியெல்லாம் இல்ல தயா. அம்மாவுக்கு அம்மாவோட ஜாப் ஃப்ரண்ட்ஸ் அது இதுன்னு அவங் களோட வேலையே சரியா இருக்கும். அதே மாதிரி தான் அப்பாவுக்கும்.''

''ஓ, அப்ப போரடிச்சுட்டிருப்பன்னு சொல்றியா?''



''கிட்டத்தட்ட அப்படித்தான்.''

''அப்ப எவ்ரி சன்டேவும் ட்ரீட் குடுக்கலாம். இல் லன்னா வாங்கிக்கலாம் போலிருக்கே.''

''அது கஷ்டம். ஆமா, நான் உங்ககிட்ட ஒண்ணு கேக்கலாமா?''

''ம். கேளு.''

''நீங்க என்ன பெஸ்ட் ஃப்ரண்டா ஏத்துப்பீங்களா? ஐ மீன் உங்களோட ப்ரண்டா இருக்கணும்னு ஆசப்பட் றேன்.''

''ஏன் அப்படி?''

''ஏன் அப்படின்னு கேட்டா என்ன சொல்றது? லைப்ல யாருக்கு வேணும்னாலும் என்ன வேணும்னாலும் அமைஞ்சுடும். ஆனா ஒரு பெஸ்ட் ப்ரண்ட் அமையறது கஷ்டம் தெரியுமா தயா? ஏன் அது ரொம்பப் பெரிய விஷயம்.''

''ஓஹோ.''

''ஏன், அத எதிர்பாக்கறது கூடப் பேராசைன்னே சொல்வேன்.''

''எப்படியோ திடீர்னு இப்படியொரு வார்த்தை சொல் லிட்டயே!'' என்று பாவமாகக் கேட்டவனின் வார்த்தை களெல்லாம் அபிநயாவின் காதுகளுக்குள் கூடச் சென் றிருக்கவில்லை.

''ஆமாம் தயா, நானெல்லாம் என் ப்ரண்ட்ஸ் கிட்ட ரொம்ப உண்மையா உரிமையோடதான் பழகினேன். அவங்களுக்காக என்ன வேணும்னாலும் செய்யத் தயாரா இருந்தேன். செஞ்சேன். ஆனா...''

''ம்.''

''ஆனா அவங்களால அதப் புரிஞ்சுக்க முடியல. முதல்ல அத எப்படி உங்களுக்குப் புரியற மாதிரி எடுத்துச் சொல்றதுன்னே எனக்குத் தெரியல.

''உலகத்துலயே ரொம்பப் புனிதமானது என்னன்னு கேட்டா நான் ஃப்ரண்ட்ஷிப் தான்னு சொல்வேன். ஏன் நம்ம பேரண்ட்ஸ்கிட்ட, லவ்வர் கிட்ட, லைஃப் பார்ட்னர் கூட இப்படி யார் கூடவும் பகிர்ந்துக்க முடியாத எத்தனையோ விஷயங்கள நாம ஃப்ரண்ட்ஸ் கூடப் பகிர்ந்துக்கலாம். அதாவது அவங்களும் நம்ம கூட அதே உரிமையோட பழகற பட்சத்துல.''

தயானந்த் பாட்டுக்குத் தான் சொல்வதைக் கேட்டுக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருக்க, அபிநயா தானும் அவள் பாட்டுக்குப் பேசிக் கொண்டே வந்தாள்.

''முக்கியமா ப்ரண்ட்ஷிப்குள்ள சுயநலம் இருக்கவே கூடாது. அப்படி இருந்துட்டா அங்க ப்ரண்ட்ஷிப்பே இல்லாமப் போய்டுது. அதே போலத்தான் எதிர்பார்ப்புகளும்.''

''ஆனா நீ எதையோ எதிர்பார்க்கற மாதிரியல்ல தெரியுது!'' என்று தயானந்த் கேட்க, ''அது சரிதான்,'' என்று உடனே ஒத்துக் கொண்டாள்.

''நான் என்ன வருத்திக்கிட்டு எனக்கே இல்லன்னாக் கூட அவங்களுக்காக என்ன வேணும்னாலும் செய்வேன் தெரியுமா?

''அதுக்காக அவங்க என்னத் தூக்கிக் கொண்டாடணும், எனக்கும் அவங்க அதே மாதிரி செய்யணும்னெல்லாம் நான் சொல்ல வரல.



''ஆனா, ரொம்பச் சின்ன விஷயங்கள்ள கூட சுய நலமா பிரதிபலன் எதிர்பாக்கற மாதிரி நடந்துக்கறப்ப தான் என்னால ஏனோ தாங்கிக்கவே முடியல.''

அபிநயாவின் மனநிலையைத் தயானந்தாலும் நன்றாகவே புரிந்து கொள்ள முடிந்தது. அதிலும் இந்த அளவிற்கு அவள் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமே இருந்திருக்கவில்லை.

தனது தாய்க்கு அத்தனை பெரிய உதவியைச் செய்து விட்டு அவளை யாரென்று கூடக் காட்டிக் கொள்ளாமல், எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் எங்கோ ஒரு மூலையில் பேசாமல் இருந்து விட்டிருந்தாளே.

தாய் மிகவும் கேட்கப் போய் அல்லவா தானும் கூட அழைத்துப் பேசினோம்.

ஏன் அப்படித் தொடர்பு கொள்ள முயன்ற போதுமே கூட அவள் தான் செய்ததைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளவில்லையே! தனது தாய் மிகவும் கேட்கிறாரென்று சொன்னதற்குப் பிறகுதானே பார்ப்பதற்காகக் கூட வந்தாள்.

''நீ சொல்ல வர்றது எனக்கும் புரியுதுமா!'' என்ற தயானந்த், ''நான் வேணும்னா ஒண்ணு சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

''ம். சொல்லுங்க.''

''நீ ரொம்ப ஸென்சிட்டிவ் டைப். அதனால தான் இந்த அளவுக்கு திங்க் பண்ணவும், எதிர்பாக்கவும் செய்யற. உண்மைலயே அந்த மாதிரி ஃப்ரண்ட்ஷிப் அமையறது ஒரு வரம்தான். கடவுள் புண்ணியத்துல எனக்கு ஏற்கெனவே அப்படியொரு ஃப்ரண்ட் இருக்கான். இப்ப நீ செகண்ட்.''

அப்படிச் சொன்ன தயானந்த்தை எல்லையற்ற சந்தோஷத்துடன் திரும்பிப் பார்த்தாள் அபிநயா.

''நிஜமாவா சொல்றீங்க?''

''பின்ன? இந்த மாதிரி ஒரு ஃப்ரண்ட் கிடைக்க நான் குடுத்து வெச்சிருக்க வேண்டாமா?''

''ஆனா நீங்கெல்லாம் பெரிய பணக்காரங்க. பணத்துக்காகக்கூட உங்ககிட்ட எத்தனையோ பேர் ஃப்ரண்ட் மாதிரி பழகலாம்...''

''ஓ அப்ப யார் எந்த மாதிரி எண்ணத்தோட பேசறாங்க, பழகறாங்கன்ற வித்தியாசத்தக் கூட என்னால தெரிஞ்சுக்க முடியாதுன்னு சொல்றியா?''

''அச்சச்சோ! என்ன தயா, இல்ல, நானும் அந்த மாதிரி தான் உங்ககூடப் பேசிப் பழகிட்டிருக்கேன்னு யாராவது சொல்லிடுவாங்களோன்ற பயம்தான். வேறொண்ணுமில்ல...''

''நீ பணத்தப் பெரிசா மதிக்கறவ கிடையாதுங்கறது எனக்குத் தெரியும்...'' என்றவன் மிகுந்த வாகன நெரிசலில் சாலையில் கவனமாகக் காரைச் செலுத்திக் கொண்டிருக்க, அதற்குப் பிறகு தானும் பேசாமல் அமர்ந்து விட்டிருந்தாள் அபிநயா.

பாதை சீரானதும் சில வினாடிகளில் மீண்டும் திரும்பி அபிநயாவைப் பார்த்த தயானந்த், ''அதுதான் வள்ளுவர் ரொம்ப அழகா பிரமாதமா சொல்லியிருக்காரே!

உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

அந்த மாதிரி நம்ம இருக்கோம். ஆனா நம்ம ஃப்ரண்ட்ஸ் அப்படி இல்லேங்கறதத் தாங்கிக்கறது கொஞ்சம் கஷ்டமான விஷயம்தான்.''



தான் சிரமப்பட்டு அவ்வளவு நேரமும் சொல்ல வந்ததை வெகு அழகாகச் சில வரிகளில் சொல்லி விட்டிருந்த தயானந்த்தைப் பெருமையுடன் பார்த்தாள் அபிநயா.

''என்ன?''

''எவ்வளவு சிம்பிளா, சுருக்கமா புரியற மாதிரி சொல்லிட்டிங்க!''

''அது இருக்கட்டும், உன் ஃப்ரண்ட்ஸ்னால உனக்கு நிறையக் கசப்பான அனுபவங்கள் வந்திருக்கும் போலிருக்கே.''

''அது சரிதான் தயா. ஆனா அதையெல்லாம் நான் மறந்துடலாம்னு இருக்கேன். மனசு கஷ்டப்பட்ற மாதிரி விஷயங்கள எதுக்காக திரும்பத் திரும்பப் பேசி இன்னும் நம்மள நாமே சங்கடப்படுத்திக்கணும்.''

''அது சரிதான்,'' என்ற தயானந்த் ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலின் முன்பாக அதாவது அதனுடைய கார் பார்க்கிங்கில் சென்று காரை நிறுத்தியிருந்தான்.

''இறங்கி வா,'' என்றவன் தானும் இறங்கிக் கொண்டான்.

''என்ன பாக்கற?''

''இங்கெல்லாம் பில் அதிகமா வருமே. நான் அவ்வளவு பணம் எடுத்துட்டு வந்திருக்கேனான்னு தெரியலயே...''

''இன்னைக்கு ட்ரீட் தரப் போறதே நாந்தான்னு உனக்கு எத்தன தடவ சொல்றது?'' என்று தயானந்த் கேட்க, ''சரி. அப்ப நான் நெக்ஸ்ட் டைம்,'' என்று உடனே சொல்லி விட்டிருந்தாள் அபிநயா.

இருவருக்குமே அந்த அனுபவம் இரு வேறு விதங்களில் மிகவும் பிடித்துப் போய் விட்டிருந்தது.

முக்கியமாகத் தயானந்த்திற்கு.

அதிலும் இதெல்லாம் பெரிய விஷயமில்லை, எனக்கே அனைத்தும் தெரியும் என்றெல்லாம் பார்க்காமல் சிறு குழந்தை போல ஒவ்வொன்றையும் கேட்டுத் தெரிந்து கொண்ட அபிநயாவின் வெகுளித்தனமான யதார்த்தத்தை மனதிற்குள் மிகவும் ரசித்தான்.

சாப்பிடுவதிலும் அப்படித்தான். தனக்குப் பிடித்ததை மிகவும் பிரமாதமென்று அவள் மீண்டும் மீண்டும் வாங்கி ரசித்து உண்டதையும்.

அவசரப்படாமல் பேசிக் கொண்டே உணவை ரசித்து உண்டு விட்டு இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வந்தபோது வெகு நேரம் கடந்து விட்டிருந்தது.



## 6

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது.

அபிநயாவின் வேலைகள் அதன் பாட்டுக்குச் சுமுகமாகச் சென்று கொண்டிருந்தன.

தினமும் ஒரு முறையாவது தயானந்த்தை அழைத்துப் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

அதே போல தயானந்த் தனக்கு அழைப்பதையும் சந்தோஷத்துடன் அட்டெண்ட் செய்து பேசுவாள்.

''அபி.''

''சொல்லுங்க மம்மி.''



''இங்க வா. உங்கிட்ட கொஞ்சம் பேசணும்.''

''என்னமா பீடிகையெல்லாம் பலமா இருக்கு. என்ன, சொல்லுங்க?''

''அது சரிதான்,'' என்று தந்தையும் வர, என்னவென்பதைப் போலப் பார்த்தாள் அபிநயா.

''நம்ம கிருஷ்ணனைப் பத்தி நீ என்ன நினைக்கற?''

தந்தை கேட்க, ''யாரக் கேக்கறீங்க, உங்க அக்கா மகனையா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்.''

''பாவப்பட்ட ஜென்மம்.''

''என்னமா, இப்படிச் சொல்ற?''

''பின்ன? அவங்கம்மாவ மீறி அவரால ஒரே ஒரு வார்த்தை பேச முடியுமா?''

''அத்தைன்னு சொல்லுமா.''

''சரி, அத்தை. சொல்லுங்க டாடி. என்னைக்காவது அவர் ஆம்பள மாதிரி கம்பீரமாப் பேசிப் பாத்திருக்கீங்களா? அவனப் பின்ன என்னன்னு சொல்லச் சொல்றீங்க?''

''வயசுக்கு மரியாதை குடுமா. உன்ன விடவும் ஏழெட்டு வயசு பெரியவன்.''

''இருக்கட்டுமே. நான் இருக்கறதத்தான சொல்றேன். அது சரி. ஏன் கேக்கறீங்க?''

''இல்ல, உங்க அத்தைக்கு உன்ன அவரோட மகனுக்குப் பாக்கலாம்னு ஒரு ஆச...''

''போதும். இத இத்தோட விட்ருங்க,'' என்று மகள் எரிச்சலுடன் சொல்ல, ''ம். இப்பப் பாத்தீங்களா?'' என்பதைப் போலக் கணவனைப் பார்த்தார் வளர்மதி.

அடுத்த சில வினாடிகள் அமைதியாகக் கழிந்தன.

"போய் உங்க அக்காகிட்ட இத இத்தோட மறந்துடு. நீ நினைக்கறதெல்லாம் நடக்க வாய்ப்பே இல்லைன்னு அடிச்சுச் சொல்லிடுங்க," என்ற மனைவியை எதுவும் பேசாமல் பார்த்தார் ராகவன்.

"சரி டாடி. எனக்கு டியூட்டிக்கு லேட்டாச்சு. நான் கிளம்பறேன்."

மகள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "எனக்கும் தான்," என்று எழுந்து விட்டிருந்தார் ராகவன்.

கைப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு காரை நோக்கி நடந்த அபிநயா தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினாள்.

"சொல்லுங்க தயா."

..........

"ம். கிளம்பிட்டேன். நீங்க?"

..........

"அப்பிடியா? சரிதான். வந்துட்டாப் போச்சு. என்ன டைம்க்கு?"

..........

"ஓ ஷ்யூர். எனக்கும் உங்க ரிலேட்டிவ்ஸ் எல்லாரையும் பாக்கணும்னு ரொம்ப ஆசையா இருக்கு."

..........

"கமிங் சன்டே மம்மி ஆஃபீஸ்ல டூர் ஏற்பாடு பண்ணியிருக்காங்க. அதனால அவங்க டவுட்தான். டாடி வருவார்."



..........

"ம். அப்புறம் உங்களோட இன்னொரு ஃப்ரண்ட் வருவாரா?"

..........

"ஒண்ணுமில்ல. பாக்க ஆசையா இருந்தது. அதான் கேட்டேன்," என்றவள் மேலும் சில நிமிடங்களும் கூடப் பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே போனை வைத்திருந்தாள். கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

இனி உடனே கிளம்பினால்தான் சரியாக இருக்குமென்று தோன்ற, மொபைலை ஆஃப் செய்து கைப்பைக்குள் போட்டுக் கொண்டு காரை ஸ்டார்ட் செய்தாள்.

அவர்களுடைய கம்பெனி கட்டடத்திற்குள் எந்த மொபைல் போன்களும் எடுக்காது. அந்த மாதிரியொரு சிஸ்டத்தைத்தான் அந்தக் கம்பெனி கடைப்பிடித்துக் கொண்டு வந்தது.

அதற்கு மேல் பேச வேண்டுமென்றால் கம்பெனி லேண்ட் லைனுக்குத்தான் அழைத்தாக வேண்டும். இல்லையென்றால் கார், டூ வீலர் பார்க்கிங் இருக்கும் இடத்திற்கு வந்து பிறகு மொபைலை ஆன் செய்து பேச வேண்டும்.

சொன்னது போல அந்த வார ஞாயிற்றுக் கிழமையன்று அதிகாலையிலேயே தாய் அவருடைய கம்பெனி ஏற்பாடு செய்திருந்த டூருக்குக் கிளம்பி விட்டிருக்க, மதியம் தயானந்த் வீட்டிற்குத் தனது தந்தையுடன் செல்வதற்காக அனைத்தையும் தயாராக எடுத்து வைக்கத் தொடங்கி விட்டிருந்தாள் அபிநயா.

அவர்கள் அனைவரும் பெரும் பணக்காரர்கள் என்பதால் தயானந்த்திற்கும் மற்றவர்களிடம் தன்னை

அறிமுகப்படுத்த ஏதுவாக இருக்க வேண்டுமென்று மிகவும் பார்த்துப் பார்த்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

அதே சமயம் ஒரு துளி கூட அதிகப்படியாக இல்லாத படியும் பார்த்துக் கொண்டாள்.

ஆளுயரக் கண்ணாடியின் முன்பு நின்று தன்னை ஒரு முறை மேலிருந்து கீழாக அளவிட்டாள்.

''எலுமிச்சை நிறத்தில், நல்ல உயரத்துடன் மிகவும் லட்சணமாக...''

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் போல. என்ன முயன்றும் அபிநயாவால் தன்னிடமிருந்தே தனது பார்வையைத் திருப்பிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

பரவாயில்லை. நாமும் ஒன்றும் மட்டமாகவெல்லாம் தெரிந்து விட மாட்டோமென்று சற்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

ஏன், நீ மிகவும் அழகென்று இதுவரை தன்னைப் பார்த்துச் சொல்லாதவர்கள் மிகவும் குறைவல்லவா என்றும்.

ஆனாலும் தன்னைப் பார்ப்பவர்கள் அப்படிச் சொல்ல வேண்டுமென்று அபிநயா எதிர்பார்ப்பவள் கிடையா தென்பதால், அப்படி யாராவது சொன்னாலும் ஒரு சிறு புன்னகையுடன் வேறு பேச்சுக்கு வந்து விடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

ஜீன்ஸ் பேண்ட்டும், டாப்சும் அணிந்து கொண்டு வந்த மகளை, ''என்னமா இது?'' என்று பார்த்தார் ராகவன்.

''என்ன டாடி?''

''சேல கட்டியிருக்கலாமே.''



''போங்க டாடி. வேலைக்கு எப்பப் பாத்தாலும் சேல தான கட்டிட்டிருக்கேன்.''

''கடைசிக்கு சுடிதாராவது...''

''ஏன் இந்த காஸ்ட்யூம் நல்லா இல்லையா?''

''அப்படியில்ல, உனக்குச் சேல ரொம்ப நல்லாக்கு மேன்னு சொன்னேன்.''

''நோ டாடி. இதுவே போதும்.''

''சரி. கிளம்பலாமாம்மா?''

''சரி டாடி,'' என்று அபிநயாவும் தனது தந்தையுடன் வெளியே வந்திருந்தாள்.

அடுத்த நாற்பத்தைந்து நிமிடங்களில் இருவரும் தயானந்த்தின் வீட்டிற்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.

தயானந்த்தின் பெற்றவர்கள் வந்து சந்தோஷத்துடன் வரவேற்று உபசரிக்க, அபிநயாவின் பார்வையோ தயா னந்த்தைத் தேடிக் கொண்டிருந்தது.

சில வார்த்தைகள் பேசியவள், தானும் நிர்மலாவுடன் உள்ளறைக்கு வந்து விட்டிருந்தாள்.

''உங்க ஹெல்த் இப்ப எப்படியிருக்கு ஆன்ட்டி?''

''ஓரளவுக்குப் பழையபடியே ஆயிட்டேன்டாம்மா. அப்புறம் அம்மா வரலையா?''

''அவங்க இல்ல ஆன்ட்டி, கம்பெனி டூர் போயிருக் காங்க.''

''ஓ, உக்காரு அபி.''

''அப்ப ரெகுலர் வொர்க் எல்லாமே செய்ய ஆரம்பிச் சுட்டிங்களா ஆன்ட்டி?'' என்று கேட்டுக் கொண்டே அமர்ந்தாள் அபிநயா.

''இல்லமா, என்ன ஸ்ட்ரிக்டா வேலையே செய்யக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க. டாக்டர்ஸ்னு நினைச்சுக் காத. இங்க வீட்ல...''

''ஏன் ஆன்ட்டி. அப்படிப் பாத்தா டாக்டர்சும் ரெஸ்ட்ல தான இருக்கச் சொல்லியிருக்காங்க?''

''அவங்க சொன்னது ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கக் கூடா துங்கற அர்த்தத்துல,'' என்றவர், ''ஒரு நிமிஷம் அபி,'' என்று வேலைக்காரப் பெண் கொண்டு வந்ததை வாங்கிக் கொண்டு ஹாலுக்குப் போனார்.

சில வினாடிகளில் வந்தவர், ''நீயும் எடுத்துக்கோம்மா,'' என்று டிபன் ப்ளேட்டை அபிநயாவிடம் கொடுத்தார்.

''எங்க ஆன்ட்டி உங்க டாட்டர்?''

''அவங்க வீடு ஒண்ணு வேல நடந்துட்டிருக்கு. அதப் பாக்கப் போயிருக்காங்கமா,'' என்றவர், ''இப்ப வந்துடு வாங்க,'' என்றார்.

''ஓ...''

''உன்னக் காலைலிருந்தே தொடர்ந்து கேட்டுட்டே இருந்தா,'' என்றவர், ''இரு. கூப்புட்டுப் பாக்கலாம்,'' என்று அருகிலிருந்த லேன்ட்லைன் போனிலிருந்து மகளுக்கு அழைத்துப் பேசினார்.

சில வினாடிகளில் போனை வைத்துவிட்டுத் திரும் பியவர், ''இன்னும் இருபது நிமிஷத்துல இங்க இருப் பாங்களாம்மா,'' என்றார்.

''வரட்டும் ஆன்ட்டி. எனக்கும் அவங்களப் பாக்க ஆசையா இருக்கு,'' என்று ஒரு ஸ்வீட்டைக் கையில் எடுத்திருந்த அபிநயா, ''நீங்களும் எடுத்துக்கோங்க ஆன்ட்டி,'' என்றாள்.



''நான் ஆச்சுமா,'' என்றவர், ''ஒரு நிமிஷம்,'' என்று எழுந்து சமையலறைக்குச் சென்றார்.

''அம்மா.''

அதே நேரம் அவனுடைய தாயை அழைத்துக் கொண்டே அந்த அறைக்கு வந்திருந்த தயானந்தைப் புன்னகை யுடன் பார்த்தாள் அபிநயா.

''வா லூசு, எங்க வந்த?''

''ம். இந்த லூசுக்குத் தான் யாரோ ட்ரீட் தர்றதா சொன் னாங்க.''

''ஓ. சாப்பாடுன்னதும் கிளம்பி வந்துட்டியாக்கும்!''

''ஆமா, நான் லூசுன்னா நீங்க யாரு? என்ன பாக்கறீங்க? ஒரு லூச இன்னொரு லூஸ் தான இன்வைட் பண்ணும்?''

''அப்படின்னு நீயே நினைச்சுக்கிட்டா? நான் அங்கிள ஐ மீன் உன் டாடியக் கூடத் தான் இன்வைட் பண்ணி னேன். அப்ப எப்படி...''

''ஹலோ போதும். கூப்புட்டு வெச்சு குடும்பமே லூசுன்னு பட்டம் குடுக்கறீங்களா?''

''ஐயய்யோ! நானில்ல, வாயாடி,'' என்று தயானந்த் பயந்தவன் போல அந்த இடத்தை விட்டு நகரப் போக, நன்றாகவே சிரித்தாள் அபிநயா.

''தயா, வாப்பா.''

''அம்மா, உங்கள அப்பா கூப்புட்றாங்க.''

''இதோ போறேன்,'' என்றவர், ''நீயும் சாப்பிட ஏதாவது எடுத்துக்கோ,'' என்றார்.

''சாப்புட்றதுக்கெல்லாம் ஒண்ணும் வேண்டாம். டீ மட்டும் ஒரு கப் கிடைச்சா பரவாயில்ல.''

''இதோ போட்டுட்டிருக்காங்க தயா,'' என்ற நிர்மலா அங்கிருந்து நகர.

''ஆன்ட்டி வரலையா?'' என்று கேட்டுக் கொண்டே தானும் வந்து சோபாவில் அமர்ந்தான் தயானந்த்.

''இல்ல. வரல.''

''ஏன்?''

''ஏன், அவங்களுக்கும் ஊரசுப் பட்டம் குடுக்க முடியலையேன்னு கவலையா இருக்கா?''

''உன் ஒருத்திய ஊரசுன்னு இருக்கறத சொன்னதுக்கு நீ எத்தன பேர இழுத்துட்டிருக்க?

அதே நேரம் வேலைக்காரப் பெண் டீ கொண்டு வர, இருவரும் எடுத்துக் கொண்டார்கள்.

''அப்புறம் கலக்கலா வந்திருக்க!''

''அப்பிடின்னா?''

''இந்தக் காஸ்ட்யூம்ல நான் உன்ன எதிர்பாக்கல.''

''அது ஏன் ஸார் அப்பிடி?''

''என்னு கேட்டா, அப்புறம் ஃப்ரண்டாப் பாக்க முடியாது.''

''ஓ. அப்புறம் வேற எப்பிடிப் பாப்பீங்க?''

''வேண்டாம். விடு.''

''ம்கூம். சொல்லுங்க.''

''அப்புறம் நீ திரும்பவும் டென்ஷனாயிடுவ.''

''பரவாயில்ல. சொல்லுங்க.''



''என்னது பரவாயில்ல சொல்லுங்களா. ஐயோ! வேண்டாம்மா. எனக்குப் பயமா இருக்கு.''

''சரி. டென்ஷன் ஆகவே மாட்டேன். சொல்லுங்க.''

''நிஜமா?''

''நிஜமாதான்.''

''பிகரா தான் பாக்கத் தோணும்.''

அப்படிச் சொன்னவனைக் கோபத்துடன் முறைத்தாள் அபிநயா.

''பாரு. இதுக்குத்தான் சொல்ல மாட்டேன்னு சொன்னேன்.''

''ம்கூம். இது ஒண்ணும் சரியில்ல.''

''எது?''

''நீங்க நடந்துக்கறது. பேசறது எல்லாம்தான்.''

''நீதான சொன்ன. ஃப்ரண்ட்னா எத வேணும்னாலும் தயங்காம, யோசிக்காம சொல்லலாம்னு...'' என்ற தயானந்தை. ''ஆனாலும் நீங்க சரியான ஆள்தான். நான் எந்த அர்த்தத்துல சொன்னேன். நீங்க அத எப்படிப் புரிஞ்சுட்டிருக்கீங்க!'' என்று கேட்ட அபிநயாவிற்கும் இப்பொழுது சிரிப்பு வந்து விட்டிருந்தது.

''என்ன பண்றது. ஐயாவுக்கு மூளை அப்பிடி!'' என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டவனிடம். ''ம்கூம். கொழுப்பு அப்பிடி!'' என்றாள் அபிநயா.

''சரிதான். உங்கூட சேந்து சேந்து அதுவும் வந்திருக்கலாம்,'' என்றவனை மீண்டும் பொய்க் கோபத்துடன் முறைத்தாள்.

சொன்னது போலச் சிறிது நேரத்தில் தயானந்த்தின் தங்கையும், தங்கை கணவனும் வந்து விட்டிருக்க, அவர்களிடம் அபிநயாவை அறிமுகப்படுத்தி வைத்தான், அதே போல அபிநயாவிற்கு அவர்களையும்.

''எவ்வளவு பெரிய உதவி பண்ணியிருக்கீங்க!'' என்று தனது கையைப் பிடித்துக் கொண்டு மனதார உணர்ந்து நன்றி சொன்ன நிர்மலா ஆன்ட்டியின் மகள் சுமிதாவையும் அபிநயாவிற்கு மிகவும் பிடித்துப் போனது. மற்றவர்களைப் போலவே.

தொடர்ந்து வந்த அரை மணி நேரத்தில் அனைவருடனும் சேர்ந்து மதிய உணவை எடுத்துக் கொண்ட அபிநயாவும், அவளுடைய தந்தை ராகவனும் மேலும் சிறிது நேரமும் கூட இருந்து சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே வீட்டிற்குக் கிளம்பினர்.



## 7

''வாங்க அத்தெ.''

''என்னமா, என்ன பண்ணிட்டிருக்க?''

''சும்மாதான் போரடிச்சுட்டு உக்காந்திருக்கேன் அத்தெ!'' என்ற தம்பி மகளிடம், ''ஏன் டி.வி. போட்டுப் பாக்க வேண்டியதுதான?'' என்று கேட்டார் துர்கா.

''ம்கூம். அது அதவிடப் பெரிய போர். அப்புறம் வீட்ல எல்லாரும் எப்படியிருக்காங்க அத்தை?''



''நல்லார்க்காங்கமா. எங்க... தம்பியக் காணல?''

''டாடி வெளிய ஏதோ வேலைன்னு போனார் அத்தை. இப்ப வந்துடுவார்.''

''சரிதான். உங்கிட்டப் பேச எனக்கும் இத விட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது,'' என்று பீடிகையுடன் ஆரம்பித்தவரைப் பார்த்தாள் அபிநயா.

''பெத்தவங்க கொஞ்சம் இடம் குடுக்கறாங்கன்றதுக்காக அத மிஸ்யூஸ் பண்ணிக்கக் கூடாதுமா,'' என்றவரை இப்பொழுது புரியாமல் பார்த்தாள்.

''என்ன பாக்கற? உன்னத்தான சொல்றேன். அது யாரோ ஒரு பையங்கூட கொஞ்ச நாளா சேந்து சுத்திட்டிருக்கியாமே.''

...............

அப்படிக் கேட்ட தனது அத்தையை அபிநயா பார்க்க, ''எப்படித் தெரியும்னு பாக்கறியா? கிருஷ்ணன்தான் சொன்னான்,'' என்றார்.

...............

''ஏன் அவன வேண்டாம்னு சொல்லிட்டயாமே! அவனுக்கென்ன குறைச்சல்?''

...............

''ப்ளீஸ், வேற பேசுங்க அத்தை.''

''ஏன்னு சொல்லு. அப்படியென்ன அவன் குறைஞ்சு போய்ட்டான். அவனும் மாசம் அம்பதாயிரம் ரூபா வாங்கறான், தெரிஞ்சுக்கோ. என்ன செலவு பண்ணினாலும் உன் சம்பளத்தோட சேத்து ரெண்டு பேரும் பிரமாதமாக் குடும்பம் நடத்தலாமே.''

என்ன ஆயிற்று இந்த அத்தைக்கு. சம்பந்தமில்லாமல் எதையெதையோ பேசிக் கொண்டே போகிறார்கள் என்று நினைத்தாள் அபிநயா.

''என்னடியம்மா, எம்மேல கோபமா வருதா? நீ என்ன நினைச்சுக்கிட்டாலும் சரி, இப்ப நீ பண்ணிட்டிருக்கறது ரொம்ப பெரிய தப்பு. உங்கம்மா பெரிய ராணி மாதிரி ஏதோ சொல்லுவா. அதயெல்லாம் கேட்டா உருப்படாம தான் போகணும்.''

..........

''நம்ம பரம்பரைலயே பொம்பளைங்க ரொம்பவும் அடக்கமா இருப்பாங்க. ஆனா இங்க உன் அம்மா, நீ......''

தனது அத்தையின் வார்த்தைகளில் கோபமே வந்து விட்டிருந்தது அபிநயாவிற்கு. ஆனாலும் அதை வெளிக் காட்டாமல் தனக்குள் வைத்துக் கொண்டாள்.

''நீ சேந்து சுத்தற பையன் ரொம்பப் பெரிய பணக் காரனாமே! அதுலயும் நேரத்துக்கொரு கார்ல போறவங் களாம். அவனுங்கெல்லாம் உன்னை மாதிரி கொஞ்சம் லட்சணமான பொண்ணுங்க கூட எதுக்காகச் சுத்தறாங் கன்னு தெரியுமா?

''காரியத்த முடிச்சுட்டு துரத்தி விட்ருவானுங்க.''

''போதும் அத்தை. இதுக்கு மேல ஒரு வார்த்த கூடப் பேசாதீங்க.''

''ஏன்டி, இருக்கறத சொன்னா உடம்பு எரியுதா?''

''போதும். பேசாதீங்க!'' என்று எரிச்சலை மறைக்கக் கூட முயலாது சொன்னாள் அபிநயா.

''என்னயும், உன்னப் பெத்தவங்க மாதிரின்னு நினைச் சுட்டியா? எங்கிட்டயெல்லாம் உன் பருப்பு வேகாது,



நான் நில்லுன்னா நிக்கணும். உக்காருன்னா உக்கார ணும்.''

''அது சரிதான். உங்க பையனக் கூட நீங்க அப்படித் தான வெச்சுட்டிருக்கீங்க - பொம்பள மாதிரி.''

''வார்த்தைய அடக்கிப் பேசு.''

''கண்டிப்பா. என்ன ஏன் இப்படியெல்லாம் பேச வெக்கறீங்க?''

''உன்ன வளர்த்திருக்கற லட்சணத்துக்கு நாளைக்கு சந்தி சிரிக்கத்தான் போகுது. ஆனா அப்படி ஆனாத்தான் உன்னப் பெத்தவங்களுக்கும் கொஞ்சமாவது புத்தி வரும்.''

''என்ன, சாபம் விட்றீங்களா?''

''நடக்கப் போறத சொல்றேன்.''

''சரிதான். அப்பிடி நடக்கும்போது வேணும்னா வந்து நின்னு சந்தோஷமா வேடிக்கை பாருங்க. இப்ப விடுங்க.''

''நீயெல்லாம் என்ன பெத்தவங்க பேச்சையா கேக்கப் போற? இனி எப்ப யார் கூட ஓடப் போறி...''

''போதும். இதுக்கு மேல ஒரு வார்த்தை கூடப் பேசா மக் கிளம்பிடுங்க.''

''என்னடி என்ன வீட்ட விட்டுப் போன்னு சொல்றியா?''

அப்படியெல்லாம்... ஏன், அதிர்ந்து கூட பேசிப் பழக் கப்பட்டிராத அபிநயாவின் கண்கள் கலங்கி விட் டிருந்தன.

''சரிதான். ஆடு, அவன் வயித்துல குடுத்துட்டுப் போகும்போது அதுக்கப்புறம் குடும்பத்தோட உக்காந்து அழுவீங்க!'' என்ற அத்தை வெளியே சென்று விட்

டிருக்க, மூளை மரத்துப் போய் அப்படியே சிலை போல நின்று விட்டிருந்தாள் அபிநயா.

வந்த அழுகையும் கூட இப்பொழுது நின்று போய் விட்டிருந்தது.

அவருடைய வார்த்தைகள் தந்த அதிர்ச்சி கண்ணீருக்கும் இடமில்லாது செய்து விட்டிருந்தது.

வாய் கூசாமல் என்னவெல்லாம் பேசி விட்டார்கள்.

மற்றவர்களுடைய மனம் என்னவெல்லாம் பாடுபடும் என்றெல்லாம் சிறிதும் யோசிக்காமல் இப்படிப் பேச இவர்களால் எப்படி முடிகிறது.

மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, பேசாமல் சென்று படுத்து விட்டிருந்தாள் அபிநயா.

சிறிது நேரம் தான் சென்றிருக்க வேண்டும்.

திடீரென்று யாரோ சத்தமாக அழைப்பது போலிருக்க, உடனே எழுந்து ஹாலுக்கு வந்திருந்தாள்.

அங்கு கோபத்துடன் ராகவன் நின்றிருக்க, அதெல்லாம் அபிநயாவின் கவனத்தில் கூட விழுந்திருக்கவில்லை.

''என்ன டாடி, கூப்புட்டிங்களா?'' என்று கேட்டாள்.

''என்ன, நீ உம் மனசுல என்ன நினைச்சுட்டிருக்க?''

''என்ன டாடி?''

''அத்தைகிட்ட ஏன் அந்த மாதிரியெல்லாம் அசிங்கமாப் பேசின? நாங்க உன்ன அந்த மாதிரியா வளர்ந்திருக்கோம்...''

''நானெதுவும்...''

''வாய மூடு. ஏதாவது பேசினா அறைஞ்சுடுவேன்.''



......

''கொஞ்ச நாளா நீ ஓவராய் போயிட்டிருக்கறது எனக்கு மட்டும் என்ன தெரியாதுன்னா நினைச்சுட்டிருக்க? சரிதான், ரொம்பவும் அழுத்திக் கேக்கக் கூடாதுன்னு பல்லக் கடிச்சுட்டிருக்கேன். வயசுக்கு மரியாதை இல்லாம நீ வாய்க்கு வந்ததையெல்லாம் பேசிட்டிருக்க!''

......

''ஒரே பொண்ணுன்னு செல்லங் குடுத்து வளத்த எங்களுக்கே கடைசில தலைக்குக் கல்லக் குடுத்துடுவ போலிருக்கு...''

தந்தை கேட்கக் கேட்க அபிநயாவிற்குக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.

''இதோட சரி, இனிமேல் நிர்மலா ஆன்ட்டி அது இதுன்னு அந்தக் குடும்பத்து கூட உறவு வெச்சுட்டிருந்த, அப்புறம் நடக்கறதே வேற.''

.........

''ஏன், அன்னைக்கு அவங்க வீட்டுக்கு வாங்கன்னு அப்பிடிக் கம்பல் பண்ணிக் கூட்டிக்கிட்டுப் போனியே, அந்த ஆன்ட்டியத் தவிர மத்தவங்க முகங் கொடுத்துப் பேசினாங்கன்னா நினைச்சுட்டிருக்க?''

இது என்ன தந்தை இப்படிக் கேட்கிறாரென்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஏனென்றால் தயானந்த், அவனுடைய தந்தை என அனைவருமே தந்தையுடன் நன்றாகச் சிரித்துப் பேசியதை அபிநயாவும் பார்த்தாளே.

ஒருவேளை முழு நேரமும் கூடவே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கவில்லை என்னும் அர்த்தத்தில் சொல்கிறாரோ.

''எனக்குப் பாதிலயே எழுந்து கிளம்பிடலாம் போல ஆயிடுச்சு. உனக்காகத் தான் பல்லக் கடிச்சுக்கிட்டு சகிச்சு உக்காந்திருந்தேன். தெரிஞ்சுக்கோ.''

..............

''இன்னொரு முறையும் சொல்றேன். நல்லாக் கேட்டுக்கோ. அன்னைக்கு அவங்க வீட்டுக்குப் போனது பேசினது அதெல்லாம்தான் கடைசியா இருக்கணும். போ, போ.''

அனைத்துமே அத்தையின் கைவண்ணம் என்பதை அபிநயாவாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் தந்தை அப்பொழுது இருக்கும் மனநிலையில் அதை எடுத்துச் சொல்வதைப் பற்றி அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

''ஒரு நிமிஷம். நில்லு.''

இரண்டு அடி எடுத்து வைத்திருந்தவள் தந்தையின் குரலில் நின்று திரும்பினாள்.

''லேண்ட் லைன்ல உங்க அத்தைக்குக் கூப்புடு.''

.............

''என்ன பாக்கற? கூப்புட்டு முதல்ல மன்னிப்புக் கேளு.''

............

''கேளுன்னு சொல்றேனில்ல,'' என்ற தந்தையின் சீறலில், ''இல்லப்பா. முடியாதுப்பா,'' என்று அழுகையுடன் சொல்லியிருந்தாள்.

''கூப்புடுன்னு சொல்லிட்டே இருக்கேன்,'' என்று தந்தை கோபத்துடன் கையை ஓங்கிக் கொண்டு வர, பயத்தில் தன்னையறியாமலேயே இரண்டு அடி பின்னால் வந்திருந்தாள் அபிநயா.



''சொன்னத செய்.''

''இல்ல, நான் மாட்டேன்,'' என்ற மகளின் பிடிவாதத்தில் இப்பொழுது கோபத்துடன் கையை ஓங்கியே விட்டிருந்தார்.

பளாரென்று கன்னத்தில் விழுந்த அறையில் நம்ப மாட்டாத அதிர்ச்சியுடன் தனது தந்தையைப் பார்த்தாள்.

''கூப்புடுன்னு சொல்றேனில்ல.''

''ம்கூம். மாட்டேன்பா. விட்டுடுங்க. தயவு செஞ்சு என்ன விட்...''

அழுகையுடன் கெஞ்சிய மகளை, ''அப்புறம் அடிச்சுக் கொன்னுடுவேன்!'' என்று மீண்டும் முன்னோக்கி ஒரு எட்டு எடுத்து வைத்திருந்தார் ராகவன்.

''நீங்க என்ன செஞ்சாலும் சரி. நான் அவங்களுக்குக் கூப்புடவே மாட்டேன்.''

''ஏய், உன்ன...'' என்று எல்லையற்ற கோபத்துடன் இரண்டு எட்டு எடுத்து வைத்திருந்த தந்தையை, மிரட்சியுடன் பார்த்தாள் அபிநயா.

ஆனால் அடுத்த வினாடியே, ''இனி என்ன பாவம் செஞ்சேனோ, உன்ன மகளாப் பெத்ததுக்கு!'' என்று விரக்தியுடன் தந்தை வெளியே சென்று விட்டிருக்க, அவர் சென்ற திசையையே பார்த்தபடி அப்படியே சிலை போல நின்று விட்டிருந்தாள் அபிநயா.

அடுத்த சில நிமிடங்களில் தனது அறைக்கு வந்து சேர்ந்திருந்த அபிநயாவிற்கு ஓவென்று கதறி அழ வேண்டும் போல இருந்தது.

ஏன் மனிதர்கள் இப்படியெல்லாம் இருக்கிறார்களென்று ஆதங்கத்துடன் அழுகையினூடே நினைத்துப் பார்த்தாள்.

தன்னிடம் கோபத்தில் பேசியது போகட்டும். ஏதோ ஆதங்கத்தில் பேசி விட்டார் என்று கூட வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் அதை ஏன் இந்த அத்தை தந்தையிடம், அதுவும் எந்த அளவிற்குச் சொல்லியிருந்தால் தந்தைக்கு இந்த அளவிற்குக் கோபம் வந்திருக்கும் என்று நினைத்தவளுக்கு மீண்டும் அழுகை வந்து விட்டிருந்தது.

மேலும் சில நாட்கள் சென்றிருந்தன.

அபிநயாவின் தாய் வளர்மதி டூர் முடிந்து திரும்பி விட்டிருந்தார்.

கணவனும், மகளும் வேலைக்குச் சென்று விட்டிருந்தது தெரிய, களைப்பெல்லாம் தீர ஹீட்டர் போட்டு விட்டுக் குளித்து முடித்துவிட்டு வந்திருந்தார்.

அதற்குப் பிறகு தனது மனதிற்குத் திருப்தி தோன்றும் வரை, லேசாகக் கலைந்து கிடந்த பொருட்களை ஒதுக்கி வைத்தார்.

ஏற்கெனவே சாப்பாடும் தயிரும் இருக்க, மிளகு ரசம் மட்டும் வைத்துக் கொண்டு உண்டு முடித்தார்.

அதற்குப் பிறகு சென்று படுத்தவர் மாலை வரை நன்கு தூங்கிவிட்டு எழுந்திருந்தார்.

எழுந்து முகம் கழுவிக் கொண்டு ஹாலுக்கு வரவும், அவருடைய கணவன் ராகவன் வரவும் சரியாக இருந்தது.

''வாங்க.''

''நீ எப்ப வந்த?''

''காலைல பத்து மணிக்கு. அப்புறம் அப்பாவுக்கும், மகளுக்கும் இந்த வாரம் எப்பிடி இருந்தது?''



''இருந்தது, இருந்தது.''

இதென்ன இப்படியொரு பதில் என்று நினைத்துக் கொண்ட வளர்மதி சில நிமிடங்களில் சென்று இரண்டு ப்ளேட்களில் ஸ்நேக்சுடன் திரும்பி வந்திருந்தார்.

''எடுத்துக்கோங்க,'' என்று டீபாயின் மீது வைத்தவர் மீண்டும் சென்று சில நிமிடங்களில் இரண்டு டம்ளர் டீயைக் கலக்கி எடுத்து வந்திருந்தார்.

ஒன்றைக் கணவன் எடுத்துக் கொள்ள, மற்றொன்றுடன் சோபாவில் வந்து அமர்ந்தார்.

''ஏன் டல்லா இருக்கீங்க?''

''ம். என்ன டூர், பேசாம வீட்ல இருந்து தொலைச்சிருக்க வேண்டியதுதான?''

கோபத்துடன் கேட்ட கணவனைப் புரியாமல் பார்த்தார் வளர்மதி.

அது எப்படி, தானே தலைமைப் பொறுப்பில் இருந்து கொண்டு தட்டிக் கழிப்பது.

''எப்பிடிங்க? என் எம்.டி. மேடம் என்னக் கேட்டுட்டு தான் டூரே அரேன்ஞ் பண்ணினாங்க. சரி. அதிருக்கட்டும். என்னவோ நடந்திருக்கு. அது என்னன்னு சொல்லுங்க.''

''ஒண்ணுமில்ல.''

''நான் நம்ப மாட்டேன்.''

''நம்பலேன்னா விடு.''

இதென்ன எப்பொழுதுமில்லாத அதிசயமாகக் கணவன் இப்படி நடந்து கொள்கிறாரென்று வளர்மதிக்கும் ஆச்சரியமாகப் போயிற்று.

அதே நேரம் "மம்மி" என்று புன்னகையுடன் வந்த மகளை நன்கு கவனித்தார்.

வித்தியாசமாக எதுவும் தெரியாததில் மனதிற்குள் சற்று நிம்மதியாக உணர்ந்தார்.

"எப்ப வந்தீங்க மம்மி?"

மகள் கேட்க, "காலைலமா," என்றார்.

"அப்புறம் உங்க ட்ரிப் எப்படியிருந்தது? நல்லா என்ஜாய் பண்ணினீங்களா?"

"அதெல்லாம் அப்புறம். நீயும் வந்து சாப்பிட ஏதாவது எடுத்துக்கோ அபி. போன இடத்துலெல்லாம் ஒவ்வொன்னு ஸ்பெஷல்னு நிறைய வாங்க வேண்டியதாயிடுச்சு."

"ம்கூம், முதல்ல குளிக்கணும். அப்புறம்தான்."

"சரி. இங்க வா. டாடிக்கு குடிக்கத் தண்ணி எடுத்துக் குடுத்துட்டுப் போ."

"இதோ..." என்று சென்றவள், சில வினாடிகளில், "எடுத்துக்கோங்க டாடி," என்று தண்ணீர்ச் செம்பைக் கொண்டு வந்து தந்தையிடம் கொடுத்தாள்.

அடுத்த சில வினாடிகளில் தன்னுடைய அறைக்கு வந்து விட்டிருந்தவளுக்கு, ஏனோ காரணமே இல்லாமல் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

கடந்த இரண்டு நாட்களாக அபிநயா தயானந்துடன் பேசியிருக்கவில்லை.

தந்தை சொன்னதற்காக என்றில்லை. ஏனோ அழைக்கத் தோன்றியிருக்கவில்லை.

அதற்குப் பிறகுதான் தயானந்த் அவனும் ஏன் அழைக்கவில்லை, என்ன காரணமாக இருக்குமென்று யோசித்தாள்.



சரிதான். குளித்துவிட்டு வந்து அழைத்துப் பேசலாமென்று, இரவு உடையுடன் சென்றாள்.

அபிநயா குளித்து முடித்து வெளியே வரவும், தயானந்திடமிருந்து அவளுடைய மொபைலுக்கு அழைப்பு வரவும் சரியாக இருந்தது.

உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

தொடர்ந்து பேசியவளுக்கு, அதற்குப் பிறகு தான் அவன் சில நாட்களாக ஊரில் இல்லையென்பதும் ஒரு அவசர வேலையாக வெளியூர் சென்று விட்டிருந்ததும் தெரிந்தது.

மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு மொபைலை வைத்திருந்தவளுக்கு கடவுளே இப்பொழுது என்ன செய்வது என்றிருந்தது.

தங்கையின் வீட்டுப் புதுமனை புகு விழாவிற்கு அழைப்பதற்காக நாளைக் காலை உங்கள் வீட்டிற்கு வருகிறோமென்று தயானந்த் சொன்னதே அவளுடைய பயத்திற்குக் காரணம்.



# 8

அன்று ஒரு பொது விடுமுறை நாளாக இருந்ததால் அனைவருமே வீட்டில்தான் இருந்தார்கள்.

தாயுடன் கோவிலுக்குச் சென்று வரலாமென்று நேரத்திலேயே எழுந்து குளித்து முடித்திருந்தாள் அபிநயா.

அதே நேரம் தனது மொபைலுக்குத் தயானந்தின் அழைப்பு வர, தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு அட்டெண்ட் செய்து பேசினாள்.

சில வினாடிகள் பேசியவள், ''சரி, வாங்க,'' என்று மொபைலை வைத்திருந்தாள்.

''யாருமா போன்ல?''

தாய் கேட்க, ''நிர்மலா ஆன்ட்டி வீட்ல இருந்து அவங்க வீட்டு கிரஹப்பிரவேசத்துக்கு இன்விடேஷன் குடுக்க வர்றாங்களாம்மா, அதான்,'' என்றாள்.

''அப்படியா? எப்பமா விசேஷம்?''

''தெரியல. வந்தாதான் தெரியும்,'' என்றவள் அது தனக்குச் சம்பந்தமில்லாத விஷயம் என்பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

அடுத்த பத்து நிமிடங்களில் தயானந்தின் கார் வந்து வாசலில் நின்றிருக்க, அபிநயாவின் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது.

அடுத்த சில வினாடிகளில் தயானந்தும், அவனுடைய தங்கையும் வீடிற்குள் வர, புன்னகையுடன் வரவேற்றாள்.

தந்தையை எண்ணிப் பயந்து கொண்டிருந்தவள் அவரும் சந்தோஷமாக வந்து வரவேற்றது, உபசரித்ததில் சற்று நிம்மதியாக உணர்ந்தாள்.

தயானந்துடைய தங்கை வீட்டுப் புதுமனை புகு விழாவிற்கு அபிநயா மட்டுமே கிளம்பிச் சென்றாள்.

அபிநயாவைப் பொறுத்தவரை அவள் நடை, உடை, பாவனை என அனைத்திலுமே எப்பொழுதும் மிகுந்த அக்கறை செலுத்துபவள்.



பார்ப்பவர்கள் அது யாராக இருந்தாலும் மிகுந்த மரியாதை தரக் கூடிய வகையில்தான் எப்பொழுதுமே அவளுடைய தோற்றம் பழக்க வழக்கங்கள் என அனைத்துமே இருக்கும்.

அப்படிப்பட்டவளுக்கு அப்பொழுது தான் செல்லப் போகும் தயானந்தின் வீட்டு விசேஷத்தை நினைக்கும் போதே ஏனோ மிகுந்த சங்கடமாகவும், பயமாகவும் இருந்தது.

மிகுந்த தயக்கத்திற்குப் பிறகு ஒரு விலையுயர்ந்த ஸாஃப்ட் ஸில்க் சேலையை எடுத்து அணிந்து கொண்டு கிளம்ப ஆயத்தமானாள்.

அதற்கு மேட்சாக சிம்பிளான நகைகளும்.

அடர்ந்த நிறத்தில் இருந்த சேலை ஏற்கெனவே இருந்த தனது தோலின் நிறத்தை மேலும் பளிச்சென்று எடுத்துக் காட்ட, தலைக்குக் குளித்து நீண்ட இடைவரை விழுந்த கூந்தலைத் தளரப் பின்னிக் கொண்டாள்.

நல்ல வேளையாகப் பெற்றவர்கள் அவர்களுடைய குலதெய்வக் கோவில் கும்பாபிஷேகமென்று அதிகாலையிலேயே கிளம்பிச் சென்று விட்டிருக்க, என்ன நினைத்துக் கொண்டு விடுவார்களோ என்ற பயமின்றித் தோற்றத்தில் அதிக அக்கறை செலுத்த முடிந்தது.

அதே சமயம் அதிகப்படியாகத் தெரிந்து விடாத அளவிற்கும் பார்த்துக் கொண்டாள்.

புதுமனை புகு விழாவிற்கு அபிநயா சென்று சேர்ந்த போது தெரிந்தவர்கள் அனைவருமே கண்களில் படும் விதமாகவே இருந்தனர்.

அதிலும் தயானந்தின் தங்கை முன்னே வந்து புன்னகையுடன் கைகளைப் பிடித்துக் கொண்டு பேசிய தோடு, ''வாங்க!'' என்று உள்ளேயும் அழைத்துச் செல்ல, சற்று நிம்மதியாக உணர்ந்தாள்.

''அபி, வாடாம்மா.''

நிர்மலா சந்தோஷமாகத் தன்னை நோக்கி வர, அதற் குப் பிறகு அவருடன் உள்ளே வந்திருந்தாள்.

அனைத்து அறைகளிலும் விருந்தினர்களின் கூட்டம் நிரம்பி வழிய, ஒவ்வொருவரும் பார்ப்பதற்கு மிகுந்த செல்வந்தர்களாகத் தோன்றியதை மனதிற்குள் ஆச் சரியத்துடன் உணர்ந்தாள்.

மிகுந்த அக்கறையுடன் பார்த்துப் பார்த்துக் கிளம்பி வந்திருந்தும் கூடத் தான் தோற்றத்தில் மட்டமாகத் தெரிவதைப் போலவும்.

ஆனால் அனைவரும் தன்னைப் பார்த்த பார்வையில் அப்படி இல்லையோ என்றும் நினைக்கத் தோன்றியது.

அந்த அளவிற்கு அனைவருமே நல்ல விதமாகப் பேசிவிட்டுப் போவதைப் போலத்தான் தெரிந்தது.

மிகவும் நல்லவர்களாக இருக்கப் போகத்தானே தான் ஒரு முறை செய்த உதவியை இன்னும் கூட மனதார உணர்ந்து அனைவரிடமும் சொல்கிறார்களென்று நினைக்கத் தோன்றியது.

எப்படியோ ஒரு வழியாக ஓரளவு அமைதியாக இருந்த அந்த அறைக்குள் சென்று அமர்ந்த பிறகுதான் மனதிற் குள் சற்று இதமாக உணர்ந்தாள்.

''வாடாம்மா, போய் டிபன் சாப்பிட்டுட்டு வந்துடலாம்.''



நிர்மலா வந்து அழைக்க, ''இன்னும் கொஞ்ச நேரம் போகட்டுமே ஆன்ட்டி,'' என்றாள்.

''சரிதான்,'' என்றவர், அந்த அறையின் இன்னொரு பக்கத்தில் தன் வயதையொத்த வயதுப் பெண்கள் சிலர் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, ''பூஜா!'' என்று அவர் களில் ஒரு பெண்ணை அழைத்தார்.

''என்ன ஆன்ட்டி?'' என்று அவள் உடனே எழுந்து வர, அவளை அபிநயாவிற்கு அறிமுகப்படுத்தி வைத் தார். அதேபோல அபிநயாவை அந்தப் பூஜாவிற்கும்.

அதேபோல அங்கிருந்த அனைவரையுமே பரஸ்பரம் அறிமுகப்படுத்தி வைத்தவர், ''பேசிட்டிருமா, வர்றேன்,'' என்று அபிநயாவிடம் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந் தார்.

மற்றவர்களுக்கு எப்படியோ அவர்கள் அனைவரும் வந்து பேசிய விதத்தில் அபிநயா ஒரு மாதிரியாக உணர்ந்தாள்.

அவர்கள் பேசியது அந்த அளவிற்குப் பட்டும் படா மலும், ஏதோ அழைத்துச் சொல்லி விட்டார்களே என் பதைப் போலவும் இருந்தது.

அதே நேரம் பந்தாவாக ஒரு பெண் அந்த அறைக்குள் வர, ''வாவ் தேஜா! வா வா,'' என்று அனைவரும் அவளை சந்தோஷமாக வரவேற்பதைக் கண்டாள்.

அவர்களுக்குள்ளான வெகு மும்முரமான பேச்சு சில நிமிடங்களில் முடிந்திருக்க, அதற்குப் பிறகு தான் அங்கு அமர்ந்திருந்த அபிநயாவைப் பார்த்தாள் அந்த தேஜாஸ்ரீ.

அதைக் கவனித்துவிட்டு அனைவரும் அபிநயாவை அவளுக்கு அறிமுகப்படுத்த, ''ஓ நீதானா அது?'' என்ற

பாவனையுடன் அளவிடுவதைப் போலத் தன்னைப் பார்த்தவளைத் தானும் பார்த்தாள் அபிநயா.

''ஆமா, உனக்கும் ஃபங்ஷனுக்கு இன்விடேஷன் குடுத்திருக்காங்களா?''

ஏளனத்துடன் அந்த தேஜா கேட்ட கேள்வியில் உண்மையிலேயே ஒரு மாதிரியாகி விட்டிருந்தாள் அபிநயா.

எந்த அர்த்தத்தில் இப்படியொரு கேள்வியைக் கேட்டாள்?

ஆனால் அதைப் பற்றி ஆராய்ந்து தெளிய வாய்ப்புக் கொடுக்காமல் அடுத்த கேள்வியையும் கேட்டிருந்தாள் அந்த தேஜாஸ்ரீ.

''இந்த மாதிரி ஒரு பங்ஷன் இதுக்கு முன்னாடி எப்பவாவது அட்டெண்ட் பண்ணியிருக்கியா?''

இது என்ன இப்படியொரு கேள்வி? அந்த அளவிற்கா தான் இவளுடைய கண்களுக்குத் தகுதியற்றவளாகத் தெரிகிறோம்.

அருகில் நின்றிருந்த இன்னொரு பெண், ''என்ன தேஜா ஏன் இப்படியெல்லாம் கேக்கற?'' என்று மெல்லிய குரலில் கேட்டது காதுகளில் விழுந்தது.

''ஏன் அப்படியென்ன தப்பாக் கேட்டுட்டேன்? ஏதோ ஒரு ஹெல்ப் பண்ணியிருக்காளேன்னு போனாப் போகுதுன்னு இன்வைட் பண்ணியிருக்காங்க, சரி.

''ஆனா அதுக்கு உடனே கிளம்பி வந்துட்றதா? அப்பிடி வந்தது மட்டுமா, எப்பிடியெல்லாம் கிளம்பி வந்திருக்கா பாருங்க, அதுலயும் என்ன மேக்கப்...''

''தேஜா...''



''ஏய் இருடி, உங்களுக்கெல்லாம் இன்னொன்னு தெரியுமா? இந்த மேடம தயா கூட நானே ரெண்டு தடவ வெளிய பாத்திருக்கேன். அதுக்கு என்ன பண்ணலாம், சொல்லுங்க?''

இப்பொழுது, ''அப்படியா?'' என்று அனைவரும் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றிருக்க, ''பின்ன?'' என்றாள் அந்த தேஜாஸ்ரீ.

நேரமாக ஆக, அவர்களுடைய கேலி எல்லையை மீற ஆரம்பித்திருக்க, இப்பொழுது, ''போதும். கொஞ்சம் நிறுத்தறீங்களா?'' என்று சத்தமாகச் சொல்லி விட்டிருந்தாள் அபிநயா.

ஏனோ அவர்களையெல்லாம் பார்க்க வயதுப் பெண்களைப் போலவே தோன்றவில்லை. ஒவ்வொரு பெண்ணும் ஒரு குட்டிப் பிசாசாகக் காட்சியளிக்க அந்த இடத்திலிருந்து எழுந்தே விட்டிருந்தாள்.

சரியாக அதே நேரம் யாரோ அந்த அறைக்குள் வர அனைவரும் கப்சிப்பென்று வாயை மூடிக் கொண்டு விட்டிருந்தனர்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள்தான். அறைக்குள் வந்த அந்தப் பெண்மணி வெளியே சென்று விட்டிருக்க, மீண்டும் அனைவரும் சேர்ந்து அபிநயாவைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தனர்.

முக்கியமாக அந்த தேஜாஸ்ரீ.

''ஆமாம், பணக்காரப் பசங்களையெல்லாம் பத்தி என்ன தெரியும் உனக்கு? இல்ல, நீயுமே கூட அப்படியே ஜாலிக்கு சுத்தறவளா?''

''தயா தான் ஃபர்ஸ்ட்டா, இல்ல இதுக்கு முன்னாடியே நிறையப் பேர் கூட அனுபவமிருக்கா? இல்ல, ஒரே சமயத்துலயே நிறையப் பசங்க கூட...''

''ஏய், என்னடி நீங்க, விஷயத்துக்கு வாங்க,'' என்ற தேஜாஸ்ரீ, ''ஒரு நாளைக்கு ஒருத்தங்கிட்ட எவ்வளவு வாங்குவ? ஐ மீன் உன் ரேட்...''

அபிநயாவிற்கு அவ்வளவு கோபம் வருமென்று அங்கிருந்த யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

கோபத்துடன் தேஜாஸ்ரீயைப் பார்த்தவள், ''நீ ஒரு நாளைக்கு எவ்வளவு வாங்குவியோ, ஏன்... உனக்கு இன்னுங்கூட நல்லாப் புரியற மாதிரியே சொல்றேன், ஒரு நைட்டுக்கு ஒருத்தங்கிட்ட எவ்வளவு வாங்குவியோ அவ்வளவேதான்!'' என்றாள்.

''ஏய் என்னடி?'' என்று அந்த தேஜாஸ்ரீ ஒரு அடி முன்னோக்கி எடுத்து வைத்திருக்க, ''சை! உன்ன மாதிரி ஒரு கேவலமான பொண்ண நான் லைஃப்ல இன்னொரு முறை பார்க்கக் கூடாதுன்னு அந்தக் கடவுள வேண்டிக் கறேன்,'' என்று விடுவிடுவென்று அந்த அறையை விட்டு வெளியே சென்று விட்டிருந்தாள்.

அந்த அறையை விட்டு மட்டுமல்ல, வீட்டை விட்டே.

அடுத்த நாற்பத்தைந்து நிமிடங்களில் தனது வீட்டிற்கே வந்து சேர்ந்திருந்தாள் அபிநயா.

அவளுடைய உள்ளம் எல்லையற்ற கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது.

சை! எவ்வளவு கேவலமான பெண்களென்று அருவருப்புடன் நினைத்தாள்.

அவர்களைப் போலவேதான் அனைவரும் இருப்பார்களென்று நினைத்து விட்டார்கள் போலிருக்கிறது.



இருந்திருந்து நிர்மலா ஆன்ட்டிக்குப் போய் இப்படிப்பட்ட கேவலமான பெண்களும் உறவா?

யாராக இருந்தால் என்ன, இனிமேல் அவர்களுடைய சகவாசமே வேண்டாம்.

போதும், இனிமேலாவது புத்தியுடன் திருந்திக் கொள்வோம்.

என்ன முயன்றும் அபிநயாவின் உள்ளம் அமைதியடைய மறுத்தது.

வெகுவாக முயன்று நீண்ட நேரத்திற்குப் பிறகே அதுவும் மிகவும் கொஞ்சம் நடப்பிற்கு வந்திருந்தாள்.

யாராவது அழைத்திருந்தால் என்று எரிச்சலுடன் ஹால் சோபாவில் போட்டு விட்டு வந்திருந்த மொபைலைக் கைப்பையிலிருந்து எடுத்துப் பார்த்தாள்.

பத்து மிஸ்டு கால்கள் வந்திருக்க, யாரென்று பார்த்தாள்.

தயானந்த்.

இப்பொழுது முன்னிலும் கோபமும், எரிச்சலும் அதிகமாக வந்திருக்க, ஒரு வினாடி கூடத் தயங்காமல் மொபைலை ஸ்விட்ச் ஆஃப் செய்து விட்டிருந்தாள்.

அதே நேரம் லேண்ட் லைனுக்கு அழைப்பு வர, மிகுந்த தயக்கத்துடன் ரிஸீவரைக் கையிலெடுத்தாள்.

எதுவும் பேசாமல் காதில் வைத்தவள், தாயின் குரலைக் கேட்ட பிறகுதான் பேசவே செய்தாள்.

சில நிமிடங்கள் பேசிவிட்டு ரிஸீவரை வைத்தவள், தாயும் தந்தையும் இனி இரவுதான் வருவார்களென்றால் அதுவரை தான் மட்டும் போரடித்துக் கொண்டிருப்பதா என்று எரிச்சலாக வந்தது.

பிடிக்கா விட்டாலும் தனிமையாக உணர வேண்டாமே என்று டி.வி.யை ஆன் செய்து கொண்டு அமர்ந்து விட்டிருந்தாள்.

பசி வயிற்றைக் கிள்ள அதற்குப் பிறகுதான் தான் இன்னும் சாப்பிட்டிருக்கவில்லை என்பதே நினைவிற்கு வந்தது.

நேராகச் சமையலறைக்குச் சென்றவள் காலையில் செய்திருந்த இட்லி நான்கு இருக்க இட்லிப் பொடியுடன் சேர்த்துச் சாப்பிட்டு முடித்தாள்.

இப்பொழுது எவ்வளவோ பரவாயில்லாததைப் போல உணர்ந்தாள்.

அனைத்தையும் ஒதுக்கிச் சமையலறையை ஒழுங்கு படுத்தலாமென்று பார்த்தவள், காலிங் பெல் ஒலியில் ஹாலுக்கு வந்தாள்.

யாராக இருக்குமென்று யோசித்துக் கொண்டே கத வருகே இருந்த கிரில் கண்ணாடியில் முகம் வைத்துப் பார்த்தாள்.

தயானந்த் நின்றிருக்க, இவனெங்கே இப்பொழுது வந்தானென்று நினைத்துக் கொண்டே கதவைத் திறந் தாள்.

நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, எங்கே அது அவனுக்கே கேட்டு விடுமோ என்னுமளவிற்குப் பயந்து போனாள்.

அதற்குள் கதவைத் திறந்தே இருந்தவள். ''வாங்க!'' என்று அழைத்தாள்.

உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் உள்ளே வந்த வனைத் தானும் அதே போலப் பார்த்தாள் அபிநயா.



''என்னாச்சு உனக்கு?''

அதே உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் கேட்ட வனை, எதுவும் பேசாமல் பார்த்தாள் அபிநயா.

''உக்காருங்க.''

''உன்னைத்தான்...''

''என்ன சாப்புட்றீங்க?''

''அறைஞ்சன்னா பல்லெல்லாம் காணாமப் போயிடும்...''

அபிநயா அந்த இடத்தை விட்டு உள்ளே வருவதற் காகத் திரும்பியிருக்க, அவளுடைய கையைப் பிடித் திருந்தான் தயானந்த்.

''கைய விடுங்க.''

''சொல்லு, ஏன் அப்பிடி ஓடி வந்த?''

''முதல்ல கைய விடுங்க.''

''முதல்ல பதில்...''

''சொல்ல முடியாது.''

இப்பொழுது தயானந்த்தின் பிடி அபிநயாவின் கையைப் பிடித்து இறுக்க, எனக்கொன்றும் இல்லை என்பதைப் போல எங்கோ பார்த்தாள் அவள்.

''பேசு...''

''அப்பக் கைய விடுங்க.''

இப்பொழுது தனது பிடியை விட்டிருந்தவன்,

''சொல்லு, ஏன் அப்பிடி வந்த?'' என்று கேட்டான்.

''பின்ன எப்பிடி வரணுங்கறீங்க?''

''ஒழுங்கா பதில் சொல்லு,'' என்றவன் சோபாவில் வந்து அமர்ந்திருந்தான்.

''ஒழுங்காதான் சொல்றேன். எனக்குத்தான் எதுவுமே பிடிக்கல.''

''என்னப் பாத்தா எப்பிடித் தெரியுது உனக்கு? உண்மையான காரணம் வேணும்.''

''அதுதான் காரணம். எனக்கு உங்கள யாரையுமே சுத்தமாப் பிடிக்கல.''

''யார் என்ன சொன்னாங்க?''

..............

''சொல்லு, அபி.''

.............

''சரிதான். நான் அம்மா கிட்டயும், தங்கச்சிகிட்டயும் கேக்கறேன்,'' என்று அவன் மொபைலை எடுத்திருக்க, உடனே, ''வேண்டாம். சொல்றேன்,'' என்றாள்.

''சொல்லு.''

................

''அவங்க... அந்த தேஜா...''

''ம், என்ன?''

..............

''சொல்றியா, இல்ல... அந்த தேஜாவுக்கே போன் பண்ணிக் கேட்டுக்கட்டுமா?''

ஒரு வழியாக அவர்கள் கேட்டதையெல்லாம் சொல்லியே விட்டிருந்தாள் அபிநயா.

சொல்லி முடித்தவளுக்குக் கண்களிலிருந்து அவளையறியாமலேயே கண்ணீர் வழிய ஆரம்பித்திருந்தது.



அந்த வினாடியில் தான் அபிநயா எவ்வளவு மென்மையானவள் என்பதைத் தயானந்தாலும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

தொடர்ந்து சில வினாடிகள் அமைதியாகக் கழிந்தன.

''ஸாரிமா...''

அப்படிச் சொன்ன தயானந்தை நிமிர்ந்து பார்த்தாள் அபிநயா.

''அவ எப்பவுமே அப்பிடிதான். யாருக்காகவும், எதுக்காகவும் யோசிக்கவே மாட்டா. காரணமே இல்லாம மத்தவங்களப் புண்படுத்தறதுதான் அவளோட குணம்.

.............

''உன்னன்னு மட்டுமில்...''

''அந்தத் தேஜா மட்டுமில்ல, அங்கிருந்த எல்லாருமே சேந்துதான் என்ன அப்படியெல்லாம் பேசினாங்க...''

''எல்லாத்துக்குமே சேத்துத்தான் நான் ஸாரி...''

''வேண்டாம்...''

.............

''நம்ம ஃப்ரண்ட்ஷிப்ப கட் பண்ணிக்கலாம்.''

''சரிதான்.''

வெகு கூலாகத் தயானந்திடமிருந்து வந்த வார்த்தைகளில் உடனே நிமிர்ந்தாள் அபிநயா.

''ரொம்ப சரியா சொன்ன. ஃப்ரண்ட்ஷிப்ப கட் பண்ணிக்கலாம்.''

''நீங்க இவ்வள...''

''ஃப்ரண்ட்ஷிப்ப மட்டும்தான்.''

அவன் மேலும் ஏதோ சொல்ல வருவதைப் போலிருக்க, அவனையே பார்த்தாள் அபிநயா.

"ஐ வாண்ட் யூ. பிகாஸ்..."

ஒரு வினாடி கூடத் தயங்காமல் கையை ஓங்கியிருந்தாள்.

ஆனால் அந்த வினாடியே அறைவதற்காக வந்த அவளுடைய கையைப் பிடித்திருந்தான், தயானந்த்.

"விடுங்க..."

கோபத்துடன் சொன்னவளை, "சொல்றத முழுசாப் புரிஞ்சுக்கிட்டுப் பேசு," என்றான்.

"சை! நீங்கெல்லாம் ஒரு மனுஷனா?"

"ஒன் செகண்ட் நான் என்ன சொல்ல வர்றேன்னு..."

பலமனைத்தையும் கொடுத்துத் தனது கையை இழுத்துக் கொண்டு விட்டிருந்தாள் அபிநயா

"தயவு செஞ்சு இங்கிருந்து போயிடுங்க." என்றவளுக்கு இப்பொழுது அழுகை வந்து விட்டிருக்க, மார்பிற்குக் குறுக்கே கைகளைக் கட்டியபடி நின்று பார்த்தான் தயானந்த்.

"ஏற்கெனவே நொந்து போயிருக்கேன். இதுக்கு மேலயும் எதுவும் வேண்டாம்..."

"நான் சொல்றதையும் கொஞ்சம்..."

"கேக்க முடியாது."

அழுகை நின்றிருக்க, இப்பொழுது கோபத்துடன் பார்த்தவளிடம், "புரிஞ்சுக்கோ அபி. உன்ன எப்ப ஃபர்ஸ்ட் டைம் பாத்தேனோ அப்பவே நான் என் மனச உங்கிட்ட இழந்துட்டேன். அதுக்கப்புறம் பார்த்த ஒவ்வொரு



முறையும் நான் உன்ன முழுமையா என்னவளாதான் பாக்கறேன்..."

"கிளம்புங்க."

"அபி..."

"ப்ரண்ட்ஷிப்புக்கு அர்த்தம் தெரியுமா உங்களுக்கு?"

"ஏன் தெரியாம?"

"அப்புறம் எப்பிடி இப்பிடியொரு வார்த்தைய சொல்ல உங்களால முடிஞ்சுது?"

"நீ அப்பிடிக் கேக்கறதுக்கு முன்னாடியே நான் உன்ன விரும்ப ஆரம்பிச்சுட்டேன். ஆனா அப்ப நான் சொல்லியிருந்தா நீ ஏத்துட்டிருப்பியா, சொல்லு?"

"இப்ப மட்டும் எனவாம்?"

"ப்ளீஸ் அபி. ட்ரை டு அண்டர்ஸ்டேண்ட் மி."

"உங்க வேஷம் கலஞ்சு போச்சு. கிளம்புங்க."

..........

"எனக்கு உங்களப் பாக்கவே பிடிக்கல. உங்கள மாதிரி ஒருத்தர நான் என் வாழ்க்கைல பாக்கவே இல்லேன்னு நினைக்கறேன."

"வேண்டாம்மா அவசரப்பட்டு எதையும்..."

"யாரு, நானா?"

ஏளனமாகக் கேட்டவளை நோக்கி, "அபி..." என்று ஒரு அடி எடுத்து வைத்திருந்தான் தயானந்த்.

ஆனால் அதைப் பார்த்த அபிநயா உடனே நான்கு அடி பின்னால் எடுத்து வைத்திருந்தாள்.

அபிநயாவின் கண்களில் தெரிந்த அந்தப் பயம் அவனை என்ன நினைக்க வைத்ததோ, அந்த வினாடியே கிளம்பி விட்டிருந்தான் தயானந்த்.

என்ன முயன்றும் அபிநயாவின் மனம் அமைதியடைய மறுத்தது.

அப்படியானால் அந்த தேஜா பேசியது கூட ஓரளவு உண்மையைத்தான்.

தயானந்தின் குணம் தெரிந்ததால்தான் தன்னை அப்படியெல்லாம் கேட்டிருக்கிறாள்.

என்ன வேஷம்!

மனதைப் பறி கொடுத்து விட்டானாம்.

அவனவளாகத் தன்னை நினைக்கத் தொடங்கி விட்டானாம்.



## 9

ஒரு மாதம் சென்றிருந்தது.

ஏனோ அபிநயாவிடம் இப்பொழுதெல்லாம் பழைய உற்சாகம் துளியும் இருக்கவில்லை.

ஏதோ கடமைக்காகவே அனைத்தையும் செய்தாள்.

அதற்குக் காரணமும் வேறு யாருமல்ல, தயானந்த்தான்.

என்னதான் அவனுடைய வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்காமல் அவனை அனுப்பி விட்டிருந்



தாலும், அதற்குப் பிறகு அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

தொடர்ந்து யோசித்துப் பார்த்தவளுக்கு அதற்குப் பிறகுதான் ஏன் அவன் உண்மையைச் சொல்லியிருக்கக் கூடாது என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அதாவது அந்தக் கோணத்திலும் யோசித்திருந்தாள்.

ஆனால் நிச்சயம் அவன் சொன்னது போலத்தான் என்றால் ஏன் அவன் தனக்கு மீண்டும் அழைத்திருக்கவில்லை.

ஒரு சில நாட்கள்தான்.

அந்த மாதிரி ஒரு சந்தேகம் வந்து விட்ட பிறகு, மீண்டும் தயானந்த்திடமிருந்து போன் காலை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆனால் ஒரு மாதத்திற்கு மேலேயே ஓடிப் போய் விட்டிருக்க, அவனிடமிருந்து எந்த அழைப்புமே வந்திருக்கவில்லை.

அதிலிருந்தே அன்று அவன் சொன்னது அனைத்துமே பொய்யென்பது தெளிவாகி விட்டிருந்தது.

ஆனாலும்...

வேண்டாம் மனமே வேண்டாம்.

ஏன் அந்த தேஜாவே கேட்கவில்லையா, பணக்காரப் பையன்களைப் பற்றி உனக்கு என்ன தெரியுமென்று.

எந்தக் கடவுளின் புண்ணியமோ, இந்த அளவிற்குத் தப்பித்தோம்.

இனி வரும் நாட்களிலாவது அவசியமின்றி மனதை அலைபாய விடாமல் புத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

''அபி.''

''என்ன மம்மி?''

''இன்னைக்கு ஒரு நாளைக்கு லீவு போடலாமேம்மா. நிறைய பெண்டிங் வொர்க்ஸ் இருக்கு. எல்லாத்தையும் முடிச்சுடலாமே.''

''இல்ல மம்மி, சன்டே பாத்துக்கலாம்.''

''சரி. இந்தா லஞ்ச் பாக்ஸ. எடுத்து வெச்சுக்கோ. மறந்துட்டுப் போயிடாத.''

''சரி மம்மி. எடுத்துக்கிட்டேன். ஈவினிங் பாக்கலாம்.''

''சரி, போய்ட்டு வா.''

''நீங்க வேணும்னா ஒண்ணு பண்ணுங்க.''

''என்ன?''

''கால் டேக்ஸிய வரச் சொல்லி வெளிய போய்ட்டு வாங்களேன். உங்க லீவ யூஸ்ஃபுல்லா பயன்படுத்திக்கலாமே.''

''இல்லமா. இன்னும் ரெண்டு நாள்தான இருக்கு. சன்டேல பாத்துக்கலாம். விடு.''

''சரி மம்மி,'' என்ற அபிநயா, சென்று காரில் ஏறி அமர்ந்திருந்தாள்.

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பேசினாள்.

''ஹலோ, சொல்லுங்க.''

எதிர்ப் பக்கத்தில் அந்த தேஜாஸ்ரீ பேச முதலில் மொபைலை வைத்துவிடத்தான் நினைத்தாள்.



எடுத்த உடனேயே வைத்திருந்தால் எப்படியோ. ஆனால் தொடர்ந்து பேசியவளால் அப்படி வைத்து விட்டிருக்க முடியவில்லை.

அவள் சொன்ன செய்தி அத்தகையதாக இருந்தது.

அந்த தேஜாஸ்ரீ பாட்டுக்கு ஏதேதோ சொல்லிக் கொண்டே போக, அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவோ, சந்தேகம் கேட்கவோ கூட அபிநயாவால் முடிந்திருக்கவில்லை. அதாவது அவள் அதற்கெல்லாம் விட்டிருக்கவில்லை.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் அவள் மொபைலை வைத்தும் இருக்க, அந்த வினாடியே தயானந்துக்கு அழைத்தாள்.

முழு ரிங் போய் கட்டானதே தவிர, தொடர்பு கிடைத்திருக்கவில்லை,

ஒரு முறையல்ல, அதே போலப் பல முறையும்.

சில வினாடிகள் மட்டுமே யோசித்திருப்பாள்.

உடனே காரைத் தயானந்தின் வீட்டிற்கு ஓட்டி வந்திருந்தாள்.

வீட்டின் முன்பாக இரண்டு கார்கள் நிறுத்தப்பட்டிருக்க, சற்று தள்ளித் தனது காரை நிறுத்தினாள். காம்பவுண்டுக்குள்தான்.

கடவுளே! விபத்து அது இதென்று அந்த தேஜாஸ்ரீ ஏதேதோ சொன்னாளே. எங்கும் செல்ல முடியாமல் வீட்டிலிருக்கிறான் என்று வேறு.

தயானந்திற்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாதென்று கடவுளை வேண்டிக் கொண்டாள் அபிநயா.

ஆனாலும் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண் டது.

அதற்குள் வீட்டிற்குள்ளேயே வந்திருந்தவள், யாரா வது தென்படுகிறார்களா என்று கண்களால் தேடினாள். சில வினாடிகள் காத்திருக்கவும் செய்தாள்.

ஆனால் யாரும் வீட்டிலிருப்பது போன்ற சுவடே தெரியாததில், என்னுடைய அறை முதல் மாடியில் வலது பக்கமென்று தயானந்த் எப்பொழுதோ சொன்ன நினைவில் வீட்டிற்கு இடையில் இருந்த அந்த மாடிப் படிகளில் வேகமாக ஏறி மேலேயும் சென்று பார்த்தாள்.

இங்கும் யாரும் இருப்பது போலவே தெரியவில் லையே...

இன்னொரு முறை கூட தயானந்த்திற்கு அழைத்துப் பார்த்தால் என்ன என்று நினைத்தவள் உடனே கைப் பைக்குள்ளிருந்த தனது மொபைலை வெளியே எடுக்கப் போனாள்.

''வா.''

பின்னாலிருந்து வந்த குரலில் விழுந்தடித்துக் கொண்டு திரும்பியிருந்தாள்.

அங்கு தயானந்த்தே நின்றிருக்க, கண்ணிமைக்கும் நேரத்தில் கண்களால் அவனை ஆராய்ந்து முடித்திருந் தாள்.

அப்படிப் பார்த்தவளுக்குத் தோற்றத்தில் எந்த வித்தி யாசமும் தெரிந்திருக்கவில்லை.

அதற்குப் பிறகுதான் நன்கு நிமிர்ந்து தயானந்த்தின் முகத்தைப் பார்த்தாள். அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.



எங்கே வந்தாயென்று கேட்டு விடுவானோ?

ஆறடிக்கும் மேலாக நிமிர்ந்து நின்றிருந்த தயானந்த் தின் தோற்றம் ஏனோ அத்தனை நாட்களுக்குப் பிறகு தோழமையுணர்வைக் கொடுக்கவில்லை, மாறாக ஒரு விதப் பயத்தையும் படபடப்பையுமே கொடுத்தது.

''வா, உக்காரு.''

''நான்...''

''எதுவானாலும் உக்காந்து பேசலாம்.''

''இல்ல, உங்களுக்கு...''

ஏனோ எதையுமே அபிநயாவால் முழுமையாகப் பேச முடிந்திருக்கவில்லை, எதுவோ அவளைத் தடுத்தது.

''உன்னால நின்னுட்டிருக்க முடியுமோ என்னவோ, ஆனா என்னால முடியாது.''

அப்படிச் சொன்னவனை உடனே நிமிர்ந்து பார்த்தாள்.

அதற்கு மேலும் நின்று கொண்டிருக்க வேண்டாமே என்று அபிநயா உடனே அமர்ந்து விட்டிருக்க, தானும் அவளுக்கு எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்திருந் தான் தயானந்த்.

அப்பொழுது அவள் ஒரு வித்தியாசத்தைக் கவனித்தாள்.

முதலில் கையை ஊன்றிச் சற்றுக் கவனத்துடன் சில வினாடிகளுக்குப் பிறகே அவன் அமர்ந்ததைக் கண்டாள் அபிநயா.

அவனால் நிற்க முடியாது என்று வேறு ஏதோ சொன் னானே.

அப்படியானால் அந்த தேஜாஸ்ரீ உண்மையைத்தான் சொல்லியிருக்கிறாள்.

''உங்களுக்கு ஏதோ ஆக்ஸிடெண்ட்னு...''

''ம்.''

''கேள்விப்பட்டேன். அதான் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்,'' என்று மென்று விழுங்கினாள் அபிநயா.

............

''அப்படியா?''

''சரிதான். இப்ப ஓரளவு சரியும் ஆயிடுச்சு.''

''எப்பிடி...''

''ஒரு நிமிஷம்,'' என்று சற்றுத் தள்ளி ஒரு மர ஸ்டூலின் மீதிருந்த இன்டர்காம் ரிஸீவரைக் கையில் எடுத்திருந்தவன், ''என் ரூம்க்கு பிஸ்கட்ஸ், டீ கொடுத்தனுப்ப முடியுமா... ம். இப்பவே,'' என்று விட்டு மீண்டும் ரிஸீவரை அதனிடத்தில் வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

அதாவது தனக்கு எதிரே அமர்ந்திருந்த அபிநயாவைப் பார்த்தான்.

''இன்டஸ்ட்ரிக்குள்ள மெஷின் ஓடிட்டிருக்கும் போது ஒரு சின்ன விபத்து.''

''ஓ. இப்ப எப்படியிருக்கு?''

''பரவாயில்ல. அடிபட்டும் கூட ஒரு மாசத்துக்குப் பக்கம் ஆச்சு. லாஸ்ட் ஒன் வீக்காதான் வீட்டுக்குள்ள இங்க ரூம்க்குள்ளயே நடக்க ஆரம்பிச்சிருக்கேன்.''

''இன்னும் எத்தன நாளைக்கு ரெஸ்ட்ல இருக்கணும்?''

''சரியாத் தெரியல. ஆனா இன்னும் ஒரு மாசத்துக்கே இருக்கணும்னு நினைக்கறேன்.''



''அந்த அளவுக்கா...''

''மூணு இடத்துல ஃப்ரேக்சர். அதில்லாம சில இடத்துல அடியும் கூட...''

''பெய்ன் இருக்கா?''

''ரொம்பவே.''

''கொஞ்சம் பாத்து இருந்திருக்கலாமே.''

''பாத்துப் பேசாம இருந்திருக்கலாம். ஆனா அஞ்சாறு பேர் உயிரக் காப்பாத்தி யிருக்க முடியாது. இது என்ன வெறும் காயம்தான, சில மாசங்கள்ல முழுமையா குணமாயிடும்.''

அதே நேரம் வேலைக்காரப் பெண் ட்ரேயைக் கொண்டு வந்து வைக்க, ''நாங்க எடுத்துக்கறோம். நீ போ,'' என்று அனுப்பி விட்டிருந்தான் தயானந்த்.

''பிஸ்கட்ஸ் எடுத்துக்கோ.''

''இல்ல, பரவாயில்ல...''

''வீட்டுக்கு வர்றவங்கள வரவேற்று உபசரிக்கறது தான் தமிழர் பண்பாடு. முக்கியமா இந்த வீட்டோட பழக்கம். கிளம்பச் சொல்றது கிடையாது...''

அதைச் சொல்லும் போது தயானந்த்தின் குரலில் தெரிந்த விரக்தி அபிநயாவிற்குப் புரியவே செய்தது.

அன்று கடைசியாக அவன் தனது வீட்டிற்கு வந்த போது தான் நடந்து கொண்ட விதத்தை அவன் சொல்லிக் காட்டுகிறான் என்பதும்.

அதற்குப் பிறகு சில வினாடிகள் அங்கு அமைதி நிலவியது.

''எனக்கு அடிபட்டது உனக்கு எப்படித் தெரிஞ்சது?''

''தேஜாஸ்ரீ. இப்ப நான் டியூட்டிக்கு கிளம்பும்போது தான் போன் வந்தது.''

''ஓ. எடுத்துச் சாப்பிடு...''

அவன் சொல்கிறானே என்று ஒரு பிஸ்கட்டை மட்டும் எடுத்துக் கொண்டவள், தானே ஃப்ளாஸ்க்கில் இருந்த டீயை இரண்டு கப்களில் ஊற்றினாள்.

அதில் ஒரு கப்பை எடுத்துக் கொண்டு போய்த் தயானந்திற்குக் கொடுத்துவிட்டு வந்தவள் மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

''ஆன்ட்டி எப்படியிருக்காங்க?''

''நல்லார்க்காங்க.''

''கீழ நான் வரும்போது பாக்கல...''

''அம்மாவும், அப்பாவும் ஏதோ வேண்டுதல்னு கோவிலுக்குப் போயிருக்காங்க. திரும்ப இன்னும் ரெண்டு நாள் ஆகும்.''

அடுத்த சில நிமிடங்களில், ''நான் கிளம்பறேன்,'' என்று மெல்லிய குரலில் சொன்னாள் அபிநயா.

அதற்குத் தயானந்த்திடமிருந்து எந்தப் பதிலும் வந்திருக்காததில், எதுவும் பேசாமல் அவனையே பார்த்தாள்.

.............

''சரி கிளம்பு. டியூட்டிக்கு லேட்டாயிடப் போகுது.''

''இல்ல. இன்னைக்கு நான் போகப் போறதில்ல,'' என்று நினைத்துக் கொண்டவள், அதை வெளியே சொல்லவில்லை.

ஆனாலும் அந்த வினாடியே எழுந்து விட்டிருந்தாள்.



''ஹெல்த்த பாத்துக்கோங்க.''

அப்படிச் சொன்ன தன்னை எதுவும் பேசாமல் பார்த்த தயானந்த்தையே தானும் பார்த்தாள் அபிநயா.

அடுத்த சில வினாடிகளில் மீண்டுமொரு முறையும் சொல்லிக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள்.

''என்னமா திரும்பி வந்துட்ட?''

தாய் கேட்க, ''ஆமாம்மா. எனக்குமே இன்னைக்கு வேலை செய்யற இன்ட்ரஸ்ட் இல்ல. அதான் வந்துட்டேன்,'' என்றாள்.

''அப்ப வெளிய போலாமா?''

''ஈவினிங் போலாமே.''

''கரெக்ட். நானும் அப்படிதான் நினைச்சேன்.''

தன்னறைக்கே வந்து சேர்ந்திருந்தவள், முதலில் சென்று உடையை மாற்றினாள்.

அதற்குப் பிறகு அப்படியே படுக்கையிலும் விழுந்திருந்தாள்.

தயானந்த்தின் முகமே மீண்டும் மீண்டும் வந்து தொல்லை செய்ய, கடவுளே என்ன இது என்று மனதிற்குள் வித்தியாசமாக உணர்ந்தாள்.

அதிலும் அவன் பார்த்த அந்தப் பார்வைதான் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது.

ஏன் அப்படிப் பார்த்தான்?

அந்தப் பார்வையில் என்ன இருந்தது?

ஆனால் அந்தப் பார்வையில் தவறாக எதுவும் இருக்கவில்லை என்பதில் மட்டும் அவளுக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை.

மறுநாளே தயானந்த்தை அழைத்துப் பேச வேண்டும் போல மனம் பரபரத்தாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அன்று முழுவதும் கம்பெனியிலும் கூட கடமைக்குத் தான் வேலைகளைச் செய்ய முடிந்ததே தவிர, காரணமே இல்லாமல் அடிக்கடி மனம் சலித்துக் கொண்டதை அவளால் சுத்தமாகத் தடுக்க முடிந்திருக்கவில்லை.

ஒரு வழியாக மாலை ஆறு மணிக்கு வீடு வந்தவள், ''மம்மி, காபி,'' என்று சோபாவில் அமர்ந்து விட்டிருந்தாள்.

''என்னமா இன்னைக்கு அதிசயமா வந்ததும் வராதது மாகக் காபி கேக்கற? பேஸ் வாஷ், டிரஸ் சேஞ்ச் எதுவும் பண்ணலையா?''

தாய் கேட்க, ''நீங்க குடுங்க. நான் ஒன்னாவே என் ரூமுக் குப் போய் அதையெல்லாம் பண்ணிக்கறேன்.'' என்றாள்.

அதே வினாடி யதேச்சையாகக் காற்றுக்கு ஆடிய காலண்டரைத் திரும்பிப் பார்த்தாள் அபிநயா.

அன்றைய தேதியை வட்டமிட்டிருந்தது கண்களில் பட, எழுந்து அருகில் சென்றாள்.

ஒரு ஞாயிறன்று தயானந்த்துடன் தான் வெளியே லஞ்ச்சுக்குச் சென்று விட்டு வந்து குறித்து வைத்தது நினைவிற்கு வந்தது.

அப்படியானால் இன்றுதான் அவனுடைய பிறந்த நாளா?

அது மறக்கக் கூடாதென்றுதானே தனது டைரியில் எழுதி வைத்ததோடல்லாமல், காலண்டரிலும் குறித்து வைத்திருக்கிறோம்.



பிறகு எப்படி இப்படி மறந்து போனோம்.

சரிதான். இப்போதாவது நினைவிற்கு வந்ததே.

''அபி, இந்தா காபி,'' என்று தாய் கொண்டு வந்த காபியை அருகில் சென்று வாங்கிக் கொண்டாள்.

''சாப்பிடவும் ஏதாவது எடுத்துக்கோ.''

''வர்றேன் மம்மி,'' என்றவள், அடுத்த சில வினாடி களில் தன் அறைக்கே வந்து விட்டிருந்தாள்.

என்ன கட்டுப்படுத்தியும் தயானந்த்திற்கு அழைத்துப் பேச வேண்டும் என்ற எண்ணமே உடலையும், உள்ளத் தையும் பரபரக்கச் செய்தது.

அந்த வினாடியே தனது மொபைலை எடுத்துத் தயா னந்த்திற்கு அழைத்து விட்டிருந்தாள்.

உடனே தொடர்பு கிடைத்து விட, சில சம்பிரதாய வார்த் தைகளுக்குப் பிறகு பிறந்த நாளுக்காக வாழ்த்தினாள்.

ஆனால் எதிர்ப்புறத்தில் அவனுடைய வார்த்தை களைக் கேட்டவளுக்கு இது என்ன, இப்படிச் சொல் கிறான் என்றிருந்தது.

நான் சந்தோஷமாக முக்கியமாக நிம்மதியாக இல்லை, அதனால் உன் வாழ்த்துக்கும் அவசியமில்லை என்று விட்டிருந்தான்.

அப்படிச் சொல்லிவிட்டவனிடம் அதற்கு மேல் எதை யும் பேசத் தோன்றாது போய் விட அவனிடம் சொல்லிக் கொண்டு உடனே போனை வைத்து விட்டிருந்தாள்.

ஏன் அப்படிச் சொன்னான்?

என்ன காரணமாக இருக்கும்?

சில வினாடிகளிலேயே அபிநயாவிற்கு அனைத்தும் புரிந்து விட்டிருந்தது.

அதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பிரமாதமாக மூளையெதுவும் தேவைப்பட்டிருக்கவில்லை.

அதாவது அவனுடைய காதலைத் தான் ஏற்றுக் கொள்ளாததுதான் காரணம் என்பது தெளிவாகப் புரிந்தது.

அதோடு அன்று அவன் வீட்டிற்கு வந்தபோது தான் நடந்து கொண்ட விதத்திற்காகவும்.

அந்த மாதிரியெல்லாம் அவனை யாரும், எப்பொழுதும் அவமதித்திருக்க மாட்டார்கள் என்பதால் அது அவனுடைய தன்மானத்திற்குப் பெரிய அடியாக இருந்திருக்கும் என்பதையும்.

ஏன் நேற்றுக் காலையில் அதை அவனே சொல்ல வேறு செய்தானே.

தான் தயானந்த்தைப் பார்த்த நாளிலிருந்து இன்று வரை நடந்ததனைத்தையும் மனதிற்குள் ஆராய்ந்து பார்த்தாள் அபிநயா.

அவன் பழகும் விதத்திலிருந்து ஏன் பார்க்கும் பார்வை வரை கூட அனைத்துமே மிகவும் நாகரிகமாக இருக்குமே.

விளையாட்டிற்கு என்று கூட எந்த விதத்திலும் அவன் துளியும் எல்லை மீறி நடந்து கொண்டதில்லையே.

கோடி கோடியாகப் பணம் இருந்தும் கூடத் தனக்கென்ன வந்ததென்று பார்க்காமல் தனது உயிரைப் பணயம் வைத்துத் தனது ஊழியர்களைக் காப்பாற்றத் துணிந்தானே, அதற்கு எவ்வளவு பரந்த மனம் இருக்க வேண்டும்.

தான் வேண்டாமென்று சொல்லி விட்டிருந்த வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து, மீண்டும் தன்னைத் தொல்லை செய்யாமல் இத்தனை நாளும் பேசாமல் இருந்தானே.



ஏன் செய்நன்றியை மறக்காது நினைவில் வைத்திருப்பதும்கூட எவ்வளவு பெரிய குணம்!

வெகு நேரம்வரை ஏதேதோ யோசித்துக் கொண்டு அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் அபிநயா.

மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்து விட்டிருந்தவள் மீண்டும் அவனை மொபைலில் அழைத்து, ''நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்,'' என்றாள்.

..............

''இல்ல. அத நேர்லதான்...''

..............

''இல்ல. நீங்க ஸ்ட்ரெய்ன் பண்ண வேண்டாம். காலைல நானே வர்றேன்.''

............

மேலும் சிறிது நேரம் கூடப் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தவள், அதற்குப் பிறகே மொபைலை வைத்தாள்.

எப்பொழுதுமே தயானந்த்துடைய குரல் ஆழ்ந்து தான் ஒலிக்கும் என்றாலும், இப்பொழுது இன்னும் கூடக் கணீரென்று ஒலிப்பதைப் போல உணர்ந்தாள்.



## 10

அன்று அதிகாலையிலேயே எழுந்து கிளம்பியிருந்தாள் அபிநயா.

எப்பொழுதும் படுக்கையை விட்டு எழும் நேரத்திற்குக் கிளம்பியே வந்து விட்டிருந்த மகளை ஆச்சரியத்துடன் பார்த்தார் வளர்மதி.

''என்ன மம்மி?''

''என்ன இவ்வளவு நேரத்துல கிளம்பிட்ட?''

''ஆமாம் மம்மி. வேறொரு இடத்துக்குப் போய்ட்டுப் போகணும்.''

''டிபன் செஞ்சுடட்டுமா?''

''ம்கூம், காபி மட்டும் போதும். இன்னைக்குக் காலை டிபன், மதியச் சாப்பாடு எல்லாமே கம்பெனி கேண்டீன்ல பாத்துக்கறேன்.''

அடுத்த பத்து நிமிடங்களில் கிளம்பியே விட்டிருந்தாள்.

ஏனோ அவளுடைய கட்டுப்பாட்டையும் மீறி அவளுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

காரை ஸ்டார்ட் செய்வதற்கு முன்னர் மீண்டுமொரு முறையும் கூட தயானந்த்திற்கு அழைத்துப் பேசினாள்.

நானே இப்பொழுது உனக்கு அழைக்கலாமென்றுதான் இருந்தேன். அப்படியே ஆபீஸிற்கு வந்துவிடு என்று அவன் முகவரி சொன்னதில் காரை அவனுடைய கம்பெனிக்கு விட்டாள்.

நெடுஞ் சாலையிலேயே அவனுடைய கம்பெனி இருந்ததால் அதிகம் சிரமப்படாமல் ஏன் மிகவும் எளிதாக எடுத்த சிறிது நேரத்திலேயே அங்கு சென்று அடைந்திருந்தாள்.

சொன்னது போலத் தன்னைக் கண்டதும் தயானந்த் இறங்கி வர, தானும் இறங்கி அவனை நோக்கி வந்தாள் அபிநயா.

அதற்குள் அருகிலேயே வந்து விட்டிருந்தவனிடம், ''குட்மார்னிங்!'' என்றாள்.



''வெரி குட்மார்னிங்!'' என்று பதிலுக்குப் புன்னகை செய்தவனிடம், ''ரொம்ப நேரம் வெயிட் பண்ண வெச்சுட்டேன் போலிருக்கு.'' என்று கேட்டாள்.

''ம்கூம், நானும் வந்து ரெண்டு நிமிஷம்தான் ஆச்சு.''

''உங்களுக்கு உடம்புக்குப் பரவாயில்லையா?''

''ஓரளவு முன்னேற்றம் இருக்கு. வா,'' என்று அவன் நடக்க ஆரம்பித்திருக்க, தானும் அவனுடன் நடந்தாள் அபிநயா.

அதே நேரம் ஆங்காங்கே நின்றிருந்த செக்யூரிட்டிகள் தயானந்த்திற்கு சல்யூட் அடிக்க, அவனும் அதைச் சிறு புன்னகை கலந்த தலையசைவுடன் ஏற்றுக் கொள்வதைக் கண்டாள்.

''எனக்காகத்தான் இங்க கார நிறுத்தினீங்களா?''

''ஏன் அப்படிக் கேக்கற?''

''இல்ல, நீங்க உள்ள போயே இறங்கி இருக்கலாமே. இவ்வளவு தூரம் நடக்கற ஸ்ட்ரெய்ன் மிச்சமாயிருக்கும் இல்லையா?''

''நான் எப்பவுமே கார இங்க நிறுத்திட்டு நடந்து போறதுதான் வழக்கம். அதான் அப்படியே இறங்கிட்டேன்.''

''ஆனா நடக்கக் கொஞ்சம் கஷ்டமா இருக்கும் போலிருக்கே.''

''ம். கொஞ்சம். அதுகூட ஒரு தேவதை கூட வர்றதுனால சிரமமாத் தெரியல.''

அவன் தன்னைக் குறிப்பிட்டுத்தான் சொல்கிறான் என்பது அபிநயாவிற்கும் புரியவே செய்தது.

அப்படிச் சொன்னதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து அவனுடைய பார்வையையும் சந்திக்க நேர்ந்தவளுக்கு

முகம் சூடாகி லேசாகச் சிவந்தும் விட்டிருக்க, வேறு பக்கம் பார்ப்பது போலத் திரும்பிக் கொண்டாள்.

அப்படிப் பார்க்கத் தொடங்கியவளுக்கு அதற்குப் பிறகுதான் கம்பெனியின் பிரமாண்டம் கவனத்தில் விழுந்தது.

அபிநயாவும் ஓரளவு எதிர்பார்த்துத்தான் இருந்தாள் என்றாலும், தான் வேலை செய்யும் கம்பெனியைப் போலப் பல மடங்கு பெரிதாக இருந்த அவர்களுடைய கம்பெனியைப் பார்த்து அப்படியே மலைத்து நின்று விட்டிருந்தாள்.

காலை ஏழு மணி என்பதால் அப்பொழுதுதான் ஊழியர்களும் வேலைக்கு வரத் தொடங்கியிருந்தார்கள்.

அப்படி வந்தவர்கள் அனைவருமே மரியாதையுடன் காலை வணக்கம் சொல்ல, தானும் அவர்களுக்குத் தலையை மட்டும் அசைத்து விட்டுப் போகாது பதில் வணக்கம் சொன்னவனை மனதிற்குள் சற்று ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

ஒரு சிலர் மிகவும் அக்கறை கலந்த மரியாதையுடன் தயானந்த்தின் உடல் நலம் பற்றி விசாரித்ததையும் கண்டாள்.

அடுத்த சில நிமிடங்களில் இருவரும் எம்.டி.யின் அறைக்கு அதாவது தயானந்த்தின் அறைக்கு வந்திருந் தனர்.

''உக்காரு,'' என்று அபிநயாவிற்கு இருக்கையைக் காட்டியவன், பிறகு தனது வேலைகளில் மும்முரமாகி விட்டிருந்தான்.



ஒரு இருபது நிமிடங்களில் அவசர வேலைகள் அனைத்தையும் முடித்திருந்தவன், அதற்குப் பிறகே மீண்டும் அபிநயாவைப் பார்த்தான்.

''போரடிக்க வெச்சுட்டேனா?'' என்ற குரலில்தான் தானும் நிமிர்ந்து தயானந்தைப் பார்த்தாள் அபிநயா.

''ம்கூம், நான் மும்முரமா மேகஸின்ஸ் படிச்சுட்டிருக்கேன். நான் ஏதாவது ஹெல்ப் பண்ண முடியும்னா சொல்லுங்க.''

''அவசர வேலைகளை முடிச்சுட்டேன்,'' என்று நன் றாகத் திரும்பி ஆசுவாசமாக அமர்ந்தவன், ''இங்க வா,'' என்று தனக்கு முன்னே இருந்த இருக்கைக்கு அபி நயாவை அழைத்தான்.

அதே நேரம் தனக்கு அருகில் கொண்டு வந்து வைக் கப்பட்டிருந்த ட்ரேயில் உள்ள ஃப்ளாஸ்க்கில் இருந்து இரண்டு கப்களில் காபியை ஊற்றியவன், ஒன்றை அபிநயாவிற்குக் கொடுத்துவிட்டு, மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான்.

''சொல்லு. என்ன விஷயம்?''

திடீரென்று அவன் கேட்ட கேள்வியில் சற்றுத் தடு மாறித்தான் போனாள் அபிநயா.

..............

அபிநயாவின் நிலை புரிய அவள் நடப்பிற்கு வரட்டு மென்று தானும் கையிலிருந்த காபியைக் குடித்தபடியே கம்ப்யூட்டரில் தனது கவனத்தை செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான் தயானந்த்.

மீண்டும் சிறிதுநேரம் கழித்தே தனக்கு எதிரே இருந்த வளைத் திரும்பிப் பார்த்தான். அதை எதிர்பார்த்திருந்த அபிநயாவும் அதே நேரம் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

என்ன என்பதைப் போல அவன் பார்த்த பார்வையில், ''இன்னொரு நாள் சொல்லட்டுமா?'' என்று மென்று விழுங்கினாள் அபிநயா.

''என்னமா, எதுவா இருந்தாலும் சொல்லு.''

தயானந்த்தின் மென்மையான குரலில் மேலும் சற்று அதிகமாகவே தயக்கம் வந்து விட்டிருந்தது என்றும் கூடச் சொல்லலாம்.

''அபி...''

''நான்...''

''ம், சொல்லு...''

''நீங்க அன்னைக்கு வீட்டுக்கு வந்திருந்தப்ப சொன்னீங்களே...''

''ம்.....''

''எனக்கும் உங்களப் பிடிச்சிருக்கு.''

''அபி....''

..................

''யூ மீன், நீயும்...''

''ம், நானும் உங்கள விரும்பறேன்.''

அப்படிச் சொன்ன தன்னைத் தயானந்த் பார்த்த பார்வையில், முகம் இரத்த நிறம் கொண்டுவிட அப்படியே குனிந்து கொண்டு விட்டிருந்தாள் அபிநயா.

''என்னமா...''

.............

''அபி, இங்க பாரு...''

என்ன முன்றும் அபிநயாவால் தனக்கு எதிரே இருந்தவனை நிமிர்ந்து கூடப் பார்க்க முடிந்திருக்கவில்லை.



அதைத் தயானந்த்தாலும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

''அபி...'' என்று தனது மேஜையில் கைகளை ஊன்றி எழப் போனவன், ''மே ஐ கமின்?'' என்ற குரலில் மீண்டும் அமர்ந்து, ''யெஸ் கமின்,'' என்றான்.

''ஹாய் தயா...''

இவள் எங்கே இந்த நேரத்தில்?

அதற்குள் அவனுக்கு அருகிலேயே வந்து விட்டிருந்த தேஜாஸ்ரீ, ''என்ன தயா இது, ஆபீஸ் வர்ற அளவுக்கே முழுமையா க்யூர் ஆயாச்சா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ம், அதெல்லாம்...''

அதே நேரம் திரும்பி அபிநயாவைப் பார்த்தாள். ''நான் சொல்லித்தான் உனக்கும் தயாவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆனது தெரியும் இல்லையா?'' என்று இயல்பான குரலில் கேட்டாள்.

அபிநயா தலையை ஆட்ட, ''உக்காரு,'' என்றான் தயானந்த்.

இருவருக்குமே தேஜாஸ்ரீயின் அப்போதைய வரவு பிடித்திருக்கவில்லை. முக்கியமாக அபிநயாவிற்கு.

அன்று புதுமனை புகுவிழாவின் போது அவள் பேசிய மட்ட ரகமான வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. அப்படியெல்லாம் பேசிவிட்டு எதுவுமே நடக்காதது போல இவ்வளவு சாதாரணமாகப் பேச அவளால் எப்படி முடிகிறது என்றும்.

ஒருவேளை அனைத்துமே நடிப்போ?

''சரி. நான் கிளம்பறேன் தயா,'' என்ற தேஜாஸ்ரீயிடம், ''எதுக்கு வந்த, இப்ப எதுக்குக் கிளம்பறேங்கற?'' என்று கேட்டான் தயானந்த்.

''அது...''

''என்ன, சொல்லிடு. நீயெல்லாம் தயங்கறதப் பாத்தா எனக்குப் பயமா இருக்கு...''

''அது... எனக்கு டொனேஷன் ஒண்ணு வேணும். அதான்.''

''அதான கேட்டேன்,'' என்றவனிடம், ''என்ன தயா, தர முடியுமா?'' என்று கேட்டாள்.

''இதோ,'' என்று பர்ஸை எடுத்தவனிடம்,

''நோ நோ. எனக்குக் கொஞ்சம் பெரிய தொகையா...'' என்று மென்று விழுங்கியவள், ''வேண்டாம்பா. நான் அங்கிள் இருக்கும் போதே வந்து பாத்துக்கறேன்,'' என்று கிளம்பப் போனாள்.

''அப்ப சரி.''

''ஆனா இன்னைக்கு ஹேன்ட் ஓவர் பண்ணியாக ணுமே...'' என்று தயங்கியவள்,

''நீ குடேன். ஒரு நாலு மட்டும்,'' என்று மென்று விழுங்கினாள்.

''எவ்வளவு, நாலாயிரமா?''

''ஹலோ லட்சம், நாலு லட்சம்.''

''நீ எவ்வளவு போட்டிருக்க?''

''ஆறு லட்சம். அதுக்கு மேல இல்லப்பா. இருந்திருந்தா நானே போட்டிருப்பேன், ஹாட் கேஷ்தான் வேணும்னு இல்ல. செக்கா குடுத்தாக் கூடப் போதும் தயா...''



..............

''என்ன, குடுக்க முடியுமா?''

''சான்ஸே இல்ல.''

''ப்ளீஸ் தயா...''

''நீ ஒண்ணு பண்ணு. மதியம் அப்பா வந்துடுவார். நீ அவருகிட்டயே பேசிக்கோயேன்.''

''ஏன் நீ நினைச்சா நாலென்ன, நாப்பது லட்சம் கூடக் குடுக்கலாமே. ஏன் சொல்றேன்னா லாஸ்ட் மன்த் தான் நான் அங்கிள்கிட்ட டொனேஷனா ஒரு அமௌண்ட் வாங்கினேன்.''

''அதனாலதான் அவருகிட்டயே பேசிக்கோன்னு சொல்றேன்.''

''போப்பா, அப்ப நான் கிளம்பறேன்.''

''சரிதான். திரும்பவும் பாக்கலாம்,'' என்று தயானந்த் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. தேஜாஸ்ரீ அந்த அறையை விட்டுச் சென்றே விட்டிருந்தாள்.

இந்த மாதிரி விஷயங்களிலெல்லாம் ஊக்கப்படுத்த வேண்டாமென்று தந்தையிடம் சொல்லி வைத்துவிட வேண்டுமென்று மனதிற்குள் குறித்து வைத்துக் கொண் டான்.

ஒரு சில வினாடிகளில் நடப்பிற்கு வந்திருந்தவன், மீண்டும், ''அபி...'' என்று எழப் போனான்.

ஆனால் சரியாக அதே நேரம் அனுமதியுடன் அவ னுடைய பி.ஏ. உள்ளே வர, இப்பொழுது இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டிருந்தது.

ஆனாலும் முயன்று தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டனர்.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில், ''ஹெல்த்தப் பாத்துக்கோங்க. நாம திரும்பவும் பாக்கலாம்,'' என்று கிளம்பியே விட்டிருந்தாள் அபிநயா.



## 11

மீண்டும் பார்க்கலாமென்று சொல்லிவிட்டு வந்தது தான், பதினைந்து நாட்களுக்கு மேலாகியும் இருவரும் சந்தித்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு தயானந் தொழிலில் மிகவும் பிஸியாகி விட்டிருந்தான். ஆனால் போனில் மட்டும் தினமும் தவறாது அழைத்துப் பேசிக் கொண்டிருந்தான்.

அதுவும் கூட அதிகபட்சம் இரண்டு நிமிடங்களே. ஏன், பெரும்பாலான நாட்களில் ஒரு சில வினாடிகள் மட்டுமே பேசினான்.

ஏன் இதைக் கூடப் பேசா விட்டால்தான் என்னவாம் என்று விரக்தியுடன் நினைத்துக் கொள்வாள் அபிநயா.

ஒருவேளை தான் செய்ததை மனதில் வைத்துக் கொண்டுதான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறானோ என்று கூடத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

போகப் போக அப்படித்தான் என்ற முடிவுக்கே மனதிற்குள் வந்து விட்டிருந்தாள்.

அந்த எண்ணம் வந்து விட்டதற்குப் பிறகு முன்பு ஒரு மாதம் உணர்ந்ததை விடவும் கூட மிகவும் மனம் வெறுத்துப் போய் விட்டிருந்தாள் அபிநயா.



காரணமே இல்லாமல் அகப்பட்டவர்களின் மீதெல்லாம் கோபப்படத் தோன்றியது.

சும்மா சும்மா அழுகை வந்தது.

நாம் நம் பாட்டுக்குச் சும்மாதானே இருந்தோம், எதற்காக மனதிற்குள் ஆசையை விதைத்துவிட்டு இப்படியெல்லாம் வதைக்கிறானென்று தனிமையில் அழுதும் தீர்த்தாள்.

இதே நிலை தொடர்ந்தால், இனிவரும் நாட்களில் எப்படிச் சமாளிக்கப் போகிறோமென்று நெஞ்சு நிறையப் பயமும் வந்து விட்டிருந்தது.

மேலும் ஒரு வாரமும் கூடச் சென்று விட்டிருந்தது.

அதிலும் கடந்த சில நாட்களாக தயானந் அழைத்தே இருக்காததில் மேலும் மனம் நொந்து போய் விட்டிருந்தாள் அபிநயா.

சரிதான் நாமே அழைத்துப் பேசலாம் என்றாலும் வேலைப் பளுவில் பேசுவானா என்று தயக்கமாக இருந்தது.

வேலை முடிந்து வந்த மகளை ஆராயும் பார்வை பார்த்தார் வளர்மதி.

இல்லை, இவளிடம் அந்தப் பழைய உற்சாகம், சுறுசுறுப்பு எதுவுமே இல்லை.

''என்ன மம்மி பாக்கறீங்க?''

''இல்ல, கொஞ்ச நாளாவே டல்லா இருக்கியே!''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே. ஒருவேள வொர்க் லோட் டபுளாகியிருக்கு. அதனால உங்களுக்கு அப்பிடித் தெரியுதோ என்னவோ!'' என்றாள்.

''அப்படியா? ஆனா சம்பளம் ஒண்ணும் அதிகமான மாதிரி தெரியலயே.''

''ஆமாம்மா. அது வருஷத்துக்கொரு முறைதான அதிகமாகும்...''

''முடிஞ்சாப் பாரு. இல்லேன்னா ரிஸைன் பண்ணிடுமா. கொஞ்ச நாளைக்கு வீட்லயாவது ஜாலியா இரு. அதுக்கப்புறம் கல்யாணம்னு முடிவாயிட்டா நம்ம கைல ஒண்ணும் இல்லை...''

''நீங்க வேற மம்மி, ஒரு நாள் லீவ் வந்தாலே செம போரிங்கா இருக்கு,'' என்று சிரித்து வைத்தவள், ''காபி வேணும் மம்மி. நான் போய் டிரஸ்ஸ மாத்திட்டு வந்துட்றேன்,'' என்று நகர்ந்தாள்.

என்னதான் தாயிடம் ஏதேதோ சொல்லிச் சமாளித்து விட்டிருந்தாலும் இனி வரும் நாட்களை நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு அபிநயாவைப் பயம் வந்து பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

அன்று ஞாயிறு வார விடுமுறை நாள் என்பதால் நேரம் கழித்துத்தான் படுக்கையை விட்டே எழுந்தாள் அபிநயா.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சமையலறைக்குச் சென்று காபி கலந்து எடுத்து வந்திருந்தாள்.

அன்று தாய் வேலைக்குச் சென்றிருக்க, தந்தை அபிஷியல் பயணமென்று மூன்று நாள் வேலையாக வெளியூர் சென்று விட்டிருக்க, வீட்டில் அபிநயா தான் மட்டும் தனியாகத்தான் இருந்தாள்.

எப்பொழுதும் போல இது என்ன இப்படி உப்பு சப்பே இல்லாத வார விடுமுறை நாளென்று சலிப்பு ஏற்படாததோடு, தான் அப்போதிருந்த மனநிலையில் சற்று நிம்மதியாகக் கூட உணர்ந்தாள்.



அந்த அளவிற்குக் கடந்த சில நாட்களாகப் பெற்றவர்கள் தன்னைக் கவனித்து விட்டு விசாரித்ததில் வெறுத்துப் போய் விட்டிருந்தாள்.

காபியைக் குடித்து முடித்தவள், தன்னறையில் இருக்கும் டி.வி.யை ஆன் செய்து விட்டு அறையை ஒதுக்கி வைக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

என்ன திசை திருப்பியும் மீண்டும் பழையபடி சோர்ந்து போய் விட்டிருந்த மனதை நினைத்து அழுகைதான் வந்தது.

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு தயானந்த் அழைக்க, உடனே அட்டெண்ட் செய்து பேசத் தொடங்கி விட்டிருந்தாள்.

...........

''நிஜமாவா சொல்றீங்க?''

............

''சரிதான். நான் ரெடியா இருப்பேன்,'' என்றவள், மேலும் சிறிது நேரத்திற்குப் பிறகே போனை வைத்தாள்.

அதாவது வைக்க தயானந்த் விட்டிருந்தான்.

அவன் சொன்ன நேரத்திற்குள் கிளம்பத் தயாராக அமர்ந்துவிட வேண்டுமென்று உடனே ஹீட்டரை ஆன் செய்துவிட்டுக் குளிக்கப் போனாள்.

குளித்துவிட்டு வந்தவள், கவனத்துடன் பார்த்துப் பார்த்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

ஒருவழியாக ஒப்பனைகள் அனைத்தும் முடிந்திருக்க, கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்று ஏதோ அதிசய மாகத் தனது தோற்றத்தில் தனக்கே திருப்தி ஏற்பட் டிருந்ததில் மனதிற்குள் சற்று நிம்மதியாக உணர்ந்தாள்.

தயானந்த் சொல்லியிருந்த நேரத்திற்குள் குளித்தே முடித்திருந்தவள், உண்டேன் என்று பெயர் செய்து விட்டு அவனுடைய வரவிற்காகக் காத்திருக்கலானாள்.

சொன்னது போல அவனும் வந்து விட்டிருக்க, சந் தோஷமாக இதோ வந்துட்டேன் என்று வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

மனம் அதன் பாட்டுக்குத் துள்ள, முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

பாதையில் கவனமாகப் பூங்காவின் ஓரமாக நடந்து சென்றவள், தன்னருகில் வந்து நின்ற தயானந்த்தின் காரில் திரும்பிப் பார்த்தாள்.

அதே சமயம் தயானந்த் புன்னகையுடன் கார் கதவைத் திறந்து விட்டிருக்க, தானும் சந்தோஷமாக ஏறி அமர்ந்து கொண்டு கதவை மூடினாள்.

மீண்டும் காரை ஸ்டார்ட் செய்திருந்தவன், ''இப்படி யெல்லாம் வந்துட்டுக் கடைசில என்னத் தப்பு சொல்லக் கூடாதுமா,'' என்றான்.

அப்படிச் சொன்னவனை அபிநயா திரும்பிப் பார்க்க, ''இப்படிப் பார்த்தாலும்தான்,'' என்றான்.

..............

''என்ன மேடம் அப்பிடிப் பாக்கறீங்க? நானே என்ன ரொம்பவும்...''

தயானந்த் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை, அபி நயாவின் கண்கள் அழுகையில் கலங்கி விட்டிருந்தன.



அதைப் பார்த்த தயானந்த்தும் பதறித்தான் போய் விட்டிருந்தான்.

''அபி... என்னாச்சுமா? ஏன் கண் கலங்கற?''

..............

''உன்னத்தான் அபி.''

அப்பொழுதும் அபிநயா அவனுக்குப் பதில் சொன்னாள் இல்லை.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் தன்னை வெகு வாகச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்திருந்தவள், ''உங் களுக்கு இப்ப உடம்புக்குப் பரவாயில்லையா?'' என்று கேட்டாள்.

''பரவாயில்ல.''

''அப்ப பழையபடி நல்லா ஆயிட்டிங்களா?''

''கிட்டத்தட்ட. ஆனாலும் பழையபடி ஹார்ட் வொர்க் பண்றதுக்கு இன்னும் சில நாள் ஆகலாம்,'' என்றான்.

''எப்படியோ இந்த அளவுக்கு நல்லா ஆயிடுச்சே!'' என்று சந்தோஷமாகச் சொன்னவள், ''ஆன்ட்டி எப்படி யிருக்காங்க?'' என்று கேட்டாள்.

''அவங்களுக்கு முழுமையா சரியாயிடுச்சு. உன்னத் தான் நிறைய முறை கேட்டுட்டாங்க.''

''எனக்கும் கொஞ்ச நாளா ஆன்ட்டியப் பாக்கலாம் போலவேதான் இருக்கு,'' என்றவள், ''அங்கிள், உங்க தங்கை அவங்க ரிலேடீவ்ஸ் எல்லாரும் நல்லார்க்காங் களா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி வரைக்கும் எல்லாரும் ஃபைன்.''

தயானந்தின் கேலியில் லேசாகச் சிரித்து வைத்தாள் அபிநயா.

சிறிது நேரத்தில் ஒரு வீட்டின் முன்பாகக் காரை நிறுத்தி இறங்கிக் கொண்டான்.

தானும் அவனுடன் இறங்கியிருந்த அபிநயா, ''இது யார் வீடு?'' என்று கேட்டாள்.

''நம்மளோடதுதான். ஆனா இப்ப கம்பெனியோட குடோனா யூஸ் பண்ணிட்டிருக்கோம்.''

''ஓ,'' என்றவள், ''ஆனா இப்ப யாரும் இல்ல போலிருக்கு?'' என்று கேட்டாள்.

''அது சரிதான்.''

தயானந்த்தைத் தொடர்ந்து அவனுடன் தானும் வீட்டிற்குள் அதாவது அந்த குடோனுக்குள் வந்திருந்தாள் அபிநயா.

உள்ளே வந்திருந்தவன் நேராகச் சென்று அங்கிருந்த ஃபேன்களின் ஸ்விட்ச்களைத் தட்டி விட்டான்.

''வா, உக்காரு,'' என்றவன், அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தான்.

''இல்ல. பரவாயில்ல.''

''முதல்ல உக்காரு.''

தயானந்த்தின் அந்தக் குரலில் உடனே தானும் சென்று அதே சோபாவின் மற்றொரு முனையில் அமர்ந்திருந்தாள் அபிநயா.

''இதெல்லாம் நியாயமா?''

தயானந்த் கேட்க, புரியாமல், ''எது?'' என்று கேட்டாள்.

''இவ்வளவு டிஸ்டன்ஸ் மெயிண்டெய்ன் பண்றது?''



''தயா...''

''என்னமா?''

''நான்... வந்து...''

''ம், சொல்லு.''

''நான் அன்னைக்கே உங்க ஆபீஸ்ல வெச்சு யோசிக்காம அப்பிடிச் சொல்லிட்டேன்.''

''எப்பிடி?''

..........

''ம், என்ன சொல்ல வந்தியோ அத முழுசா சொல்லு.''

''நான் ஒண்ணும் உங்கள விரும்பல...''

திடீரென்று தயானந்த் அப்படிச் செய்வானென்று அபிநயா கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை, அந்த வினாடியே வேகமாக எழுந்து சென்று கதவைத் தாழிட்டு விட்டு அவளுக்கு அருகில் மிக அருகில் வந்து நின்றிருந்தான்.

அப்படி வந்து நின்றதோடு மட்டுமல்லாமல் தனது இரண்டு கைகளாலும் அபிநயாவின் இரண்டு தோள் பட்டைகளையும் பிடித்துத் தூக்கியும் நிறுத்தியிருந்தான்.

''ம், இப்ப சொல்லு.''

அவனுடைய மூச்சுக்காற்று தன்மேல் விழுமளவிற்கு வந்து நின்றிருந்தவனின் அருகாமையில், அதற்கு மேல் எதுவுமே தோன்றாது போய்விட அப்படியே குனிந்து கொண்டு விட்டிருந்தாள் அபிநயா.

அவளுடைய நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொள்ள, ஏதோ எண்ணப் போக்கில் மீண்டும் அவளுடைய கண்கள் கலங்கத் தொடங்கி விட்டிருந்தன.

''ம். என்னமா?''

...........

''சொல்லு அபி.''

''நான்...''

''ம்.''

''நான் ஒண்ணும் உங்கள விரும்பல. அன்னைக்கு யோசிக்கற...''

அந்த வினாடியில் அவளை மேலும் தனக்கு மிக அருகில் இழுத்திருந்தவன், அவளுடைய இதழ்களைத் தனது இதழ்களால் சிறைப் பிடித்திருந்தான்.

அதை ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட எதிர்பார்த் திருக்காத அபிநயா, அவனிடமிருந்து தன்னை விடு வித்துக் கொள்ள வெகுவாக முயன்றாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகளே.

கொஞ்சம் கொஞ்சமாகத் தன் வசம் இழக்கத் தொடங்கி யிருந்தவள், ஒரு கட்டத்தில் அப்படியே முழுமையாகத் தொய்ந்து போய்த் தானும் அவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டு விட் டிருந்தாள்.

அபிநயாவின் நிலையை உணர்ந்து கொண்ட தயானந்த் தின் நிலை பற்றியோ சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

அவளை மேலும் வாகாகத் தன்னருகில் இழுத்துத் தனது மார்போடு மிருதுவாக அணைத்துக் கொண்டு விட்டிருந் தான்.

அப்படி இருவரும் எவ்வளவு நேரம் இருந்தார்களோ, முதலில் தான் இருக்கும் நிலையை உணர்ந்து



தயானந்திடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றது அபிநயா.

ஆனால் அதற்கு விடாமல், ''அபி...'' என்று அவளை மேலும் தன்னருகில் இழுத்து அணைத்துக் கொள்ள, பழையபடி மீண்டும் தன் வசமிழந்து அவனுடைய மார் பில் வாகாக முகம் புதைத்துக் கொண்டு விட்டிருந்தாள் அபிநயா.

மீண்டும் அவர்கள் இருவரும் நடப்பிற்கு வந்தபோது, வெகு நேரம் கடந்து விட்டிருந்தது.

தனது பிடியை எடுத்துக் கொண்டதும் நிற்க முடி யாமல் தள்ளாடியவளைத் தானே தனது மார்பில் சாய்த்த வாறு அழைத்துக் கொண்டு போய் சோபாவில் அமர வைத்துத் தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

''என்னடா?''

''தயா...''

''ம்.''

''நீங்க ஒண்ணும் கட்டாயத்துக்கு, ஐ மீன் வேற மாதிரி எண்ணத்...''

அபிநயா கேட்க, வருவது என்னவென்று அவனாலும் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் சற்று முன்பு போல இப்பொழுது கோபம் வந்திருக்கவில்லை.

மாறாகச் சிரிப்புத்தான் வந்தது.

''அசடு, அந்த மாதிரி எண்ணம் இருந்திருந்தா இதோட உன்ன விட்டிருப்பேனா?'' என்றவன், லேசாக நடுங்கிக் கொண்டிருந்த அவளுடைய பூவுடலைப் பற்றி அருகில் இழுத்து எல்லையற்ற காதலுடன் அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

.............

''என்னடா, எம்மேல நம்பிக்கையில்லையா?'' என்று கேட்டவனிடம், ''ஸாரி தயா,'' என்றாள்.

''கொஞ்ச நாளா நீங்க எங்கூட... அதாவது போன்ல கூப்புடாததால கொஞ்சம் கன்ஃப்யூஸ் ஆயிட்டேன், அதான்.''

''அதுக்கும் மேல தேஜாஸ்ரீ மாதிரி ஆளுங்க...'' என்றவன், ''சரிதான். ஆனா இப்ப உன் பயம் தெளிஞ்சுடுச்சு இல்லையா?'' என்று கேட்டான்.

ஏன், அதற்கு மேல் தனது அத்தை, தந்தை...

''ஆமாம் தயா,'' என்றவள், ''ஆமா ஏன் நீங்க கொஞ்ச நாளா எங்கூட சரியாப் பேசவே இல்ல?'' என்று கேட்டாள்.

''பிஸினஸ்ல ஒரு சின்னப் பிரச்சனமா. அதுலயும் லாஸ்ட் த்ரீ வீக்ஸ் ரொம்பவுமே ப்ராப்ளம்தான்.''

''இப்ப பிஸினஸ் எப்படியிருக்கு?''

''பரவாயில்ல. இப்ப திரும்பவும் ஸ்டேண்ட் ஆயிடுச்சு.''

''என்ன தயா?''

''எவ்வளவு நாளைக்கப்புறம் இன்னைக்குத்தான் நாம மீட் பண்ண முடிஞ்சிருக்கு. எதுக்கு இப்பிடிப் பேசறதுக்காகக் கஷ்டப்பட்டு விஷயத்தத் தேட்ற?''

பின்னர் எதைப் பற்றிப் பேசுவதாம் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட அபிநயாவிற்கு, தயானந்த்தின் அந்த சரசமான பார்வையில் நெஞ்சிற்குள் பட்டாம்பூச்சிகள் பறக்கத் தொடங்கி விட்டிருந்தன.

''அபி.''



''ம்.''

''நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன், தெரியுமாம்மா?''

அப்படிச் சொன்னவனை நிமிர்ந்து பார்த்தவள், ''நானும் உங்ககிட்ட அதே கேள்வியக் கேக்கலாமாக்கும்,'' என்றாள்.

''ஓ, அப்ப நீ எவ்வளவு சந்தோஷமா இருக்கேன்னு தான் கொஞ்சம் சொல்றது.''

அப்படிக் கேட்டவனின் தோள் வளைவில் சாய்ந்து கொண்ட அபிநயா, ''இப்படியே என் உயிர் போய்ட்டாக் கூட நான் சந்தோஷப்படுவேன்!'' என்றாள்.

''பாத்தியா, இப்படித்தான் உளறக் கூடாதுங்கறது. நான் வாழப் போறதப் பத்திப் பேசினா நீ ஏதேதோ பினாத்திட்டிருக்க.''

''ஏன் தயா கோபப்பட்றீங்க? நாம வாழ்க்கைல ஒண்ணு சேர முடியுங்கற நம்பிக்கை எனக்கு ஏனோ ரொம்பவும் குறைவாத்தான் இருக்கு.''

''ஏன்?''

''ஏன்னா நீங்க பெரிய பணக்காரர்...''

''சரி.''

''என்ன விட எல்லா விதத்துலயும் இன்னும் பெட்டரான பொண்ணு கிடைச்சா என்ன மறந்துட மாட்டிங்கன்றதுல என்ன நிச்...''

''அறைஞ்சு பல்லக் கழட்டிடுவேன்.''

''அட்டா, ஐயாவுக்கு என்ன கோபம் வருது!'' என்று சிரித்தவள், ''ஏன் அப்படியென்ன நான் இல்லாததக் கேட்டுட்டேன்?'' என்று மீண்டும் கேட்டாள்.

''சரிதான். வாய மூடு.''

''ஆனா...''

''என்ன, சொல்லு.''

''தேஜா மட்டுமில்ல, இன்னும் சிலர் கூட...''

''ம், என்ன?''

காதல் என்றெல்லாம் ஒன்றும் இல்லாத போதே தனது அத்தையும் தந்தையும் சொன்னதுதான் அப்பொழுது அவளுக்கு நினைவிற்கு வந்தது.

அதை அப்படியே அவனிடம் சொல்லவும் செய்தாள்.

''நீ அவங்க மகனக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொன்ன கோபத்துலதான் அப்படிச் சொல்லியிருப்பாங்களா இருக்கும்.''

''அப்ப டாடி?''

''அவருக்கும் நம்ம அக்கா மகனுக்கு மகளக் குடுக்க முடியலையேங்கற ஆதங்கமா இருக்கும்.''

''மொத்தத்துல நான் அந்த மாதிரி டைப் கிடையாதுன்னு சொல்ல வர்றீங்க. அப்பிடித்தான?'' என்று வந்த சிரிப்பை முழுமையாக மறைத்துக் கொண்டு கேட்டாள் அபிநயா.

''ஒரேயடியா அப்பிடித்தான்னும் சொல்லிட முடியாது. அதுலயும் இந்த மாதிரி தனிமையும் நெருக்கமும் கிடைச்சா...'' என்றவனின் பார்வை ஒரு மாதிரியாகத் தன் மேல் விழ, அவன் சொன்னது தனது கவனத்தில் விழாதது போல வேறு பேச்சுக்குத் தாவியிருந்தாள் அபிநயா.

''ஆன்ட்டி இன்னைக்குத்தான் வர்றாங்களா?''



''ஆமாம்,'' என்றவன், ''ஆனா ஒன்ன மட்டும் இப்பவே முடிவா சொல்லிடறேன்,'' என்றான்.

''என்ன?''

''எனக்கு ஒவ்வொரு சன்டேவும் இதே மாதிரி இருந்தாகணும்!'' என்றவனின் பார்வை தன் மேல் விழுந்த விதத்தில், ''ம்கூம். முடியவே முடியாது,'' என்று பட்டென்று சொல்லி விட்டிருந்தாள் அபிநயா.

''அதையும் பாக்கத்தானே போறேன்.''

''சரிதான், பாத்துடலாம்...'' என்பதற்குள் தயானந்த் மீண்டும் தன்னை நெருங்கி வர, அவனுடைய கைகளுக்குச் சிக்காமல் உடனே எழுந்து இரண்டு அடி எடுத்து வைத்திருந்தாள் அபிநயா.

தொடர்ந்து தானும் அவளைப் பிடிப்பதற்காக எழுந்து விட்டிருந்த தயானந்திற்கு, அதற்குப் பிறகுதான் தன்னுடைய நிலை நினைவிற்கு வந்தது.

யோசிக்காமல் சட்டென்று எழுந்த வேகத்தில் ஏற்கெனவே எலும்பு முறிவு ஏற்பட்டிருந்த இடத்தில் வலி உயிர் போக, பல்லைக் கடித்துக் கொண்டு மீண்டும் அமர்ந்து விட்டிருந்தான்.

தயானந்த்தின் வேதனை புரிய, அபிநயாவின் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

''ஸாரி தயா,'' என்று அருகில் வந்திருந்தாள்.

ஆனால் அதற்குள் பெருமளவு வலி சரியாகி விட்டிருக்க, ''ஏய் என்னாச்சு?'' என்று புன்னகையுடன் அபிநயாவைப் பார்த்தான்.

அதற்குள் தயானந்த்தை நெருங்கி அவனது கழுத்தில் தனது கைகளைப் போட்டிருந்த அபிநயா, மீண்டும். ''ஸாரி, தயா,'' என்றாள்.

''ஸாரி மட்டும் கேட்டுட்டாப் போதுமா?''

''அப்புறம் வேற என்ன பண்ணணும்?''

''அந்த வலியக் காம்பன்ஸேட் பண்ணியாகணும்.''

''எப்பிடி?''

''அது உனக்குத்தான தெரியணும்,'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே எம்பி அவனுடைய கன்னத்தில் இதழ் பதித்திருந்தாள் அபிநயா.

''போதுமா?''

''ம்கூம்.''

''இன்னும் என்...'' என்று அபிநயா ஏதோ சொல்ல வருவதற்குள்ளேயே, ''இந்த மாதிரி...'' என்று மீண்டும் அவளைத் தன்னருகில் இழுத்திருந்தான் தயானந்த்.

அடுத்த சில நிமிடங்களுக்குள் அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு விட்டிருந்தாள் அபிநயா. வெட்கத்தில் அவளுடைய முகம் இரத்த நிறம் கொண்டு விட்டிருந்தது.

உடனே அங்கிருந்து கிளம்பியிருந்தவர்கள் வெளியே கொஞ்சம் பர்ச்சேஸை முடித்துக் கொண்டு அப்படியே மதிய உணவையும் முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்த போது நேரம் மதியம் மூன்று ஆகியிருந்தது.

தயானந்த், அபிநயா இருவருமே அன்று மிகவும் சந்தோஷமான மனநிலையில் இருந்தனர்.

அதிலும் அபிநயாவைப் பற்றியோ சொல்ல வேண்டிய அவசியமே இருக்கவில்லை.

தயானந்த் சொன்ன ஒரு ஜோக்கிற்கு விழுந்து விழுந்து சிரித்தவள் அதே புன்னகையுடன் தனது வீட்டு வாசலில் வந்து நின்றிருந்த காரிலிருந்து இறங்கிக் கொண்டாள்.



''வீட்டுக்கு வந்துட்டுக் கிளம்பலாமே.''

அபிநயா அழைக்க, ''அப்புறம் நிஜமாவே இறங்கி வந்துடுவேன்,'' என்றான் தயானந்த்.

''வாங்கன்னுதான கூப்புட்றேன்,'' என்று புன்னகையுடன் மீண்டும் அழைத்தவளிடம், ''இல்லமா, இன்னொரு நாள் வர்றேன்,'' என்று அடுத்த சில வினாடிகளில் கிளம்பியே விட்டிருந்தான்.

தான் ஏன் இன்றைக்குச் சிரித்துக் கொண்டே இருக்கிறோமென்று நினைத்துக் கொண்டே வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தாள் அபிநயா.

அதற்குப் பிறகுதான் வீடு திறந்திருந்ததை, அதாவது தந்தை வந்து விட்டிருந்ததைக் கவனித்தாள்.



## 12

வெளியே வாசலில் நின்று தனது மகளும் அந்த தயானந்த்தும் அவ்வளவு நேரமும் பேசிச் சிரித்ததை ராகவனும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

நாலு பேர் வரப்போக இருக்கும் தெருவில் அப்படியா நின்று பல்லைக் காட்டிக் கொண்டிருப்பது, அதுவும் ஒரு அன்னிய ஆடவனுடன்.

மகளுக்கல்லவா புத்தியிருக்க வேண்டும்.

என்ன முயன்றும் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போய்விட, அதை வீட்டிற்குள் வந்த மகளிடம் வெளிப்படையாகவே காட்டினார் ராகவன்.

''ஹாய் டாடி, எப்ப வந்தீங்க?'' என்று அதே புன்னகையுடன் வந்த மகளிடம், ''ஏன், என்ன இந்த நேரத்துக்கு எதிர்பார்த்திருக்க மாட்ட இல்ல? என்று கோபமாகக் கேட்டார்.

ஏன் தந்தை இப்படிக் கேட்கிறார்?

''என்ன, பேசு?''

''டாடி...''

''அப்படியென்ன உனக்கு அவ்வளவு திமிர்?'' என்று கேட்ட தந்தையைப் புரியாது பார்த்தாள் அபிநயா.

''அப்படியா நடு ரோட்ல நின்னு வெக்கமில்லாம ஒரு ஆம்பள கூடப் பேசிச் சிரிப்ப?''

சாதாரணமாகச் சில வார்த்தைகள் பேசினோம்தான், ஆனால் அதற்கு ஏன் தந்தை இவ்வளவு கோபப்படுகிறார்?

''குடும்ப மானம் மரியாதையக் காத்துல பறக்க விட்டே ஆகணும்னு முடிவு பண்ணிட்டயா?''

..............

''என்ன ஒண்ணுமே தெரியாத பாப்பா மாதிரி முழிக்கிற? அப்ப நீ இன்னும் அவனோட சகவாசத்த விடல இல்ல?''

.............

''பேசு.''

தந்தையின் கர்ஜனைக் குரலில், ''நீங்க நினைக்கற மாதிரியெல்லாம் ஒன்று...'' என்று ஏதோ சொல்ல வந்த மகளின் கன்னத்தில் பளாரென்று ஒரு அறை கொடுத்திருந்தார் ராகவன்.



''என்ன எதித்துப் பேசறியா? இன்னொரு முறை இந்த மாதிரி நடந்துக்கிட்ட, அப்புறம் கொன்னு போட்டுட்டு தான் மறு வேலை.''

...........

''நானும் இத்தனை நாள் முட்டாள்தனமா பேசாம இருந்துட்டேன். ஆனா இனிமேல் அப்படி இருக்க மாட்டேன். நாளைக்கே உங்க அத்தையக் கூப்புட்டுப் பேசிக் கிருஷ்ணனுக்கு உன்ன நிச்சயம் பண்ற வேலையப் பாக்கறேன். உங்க அத்தையும் தினமும் கேட்டுட்டே தான் இருக்காங்க...''

''என்னால அந்தக் கிருஷ்ணனக் கல்யாணம் பண்ணிக்க முடியாது.''

''உன் சம்மதத்த இங்க யாரு கேட்டாங்க?''

''என்னப்பா ஜோக்கடிக்கறீங்க! என் விருப்பமில்லாம எனக்குக் கல்யாணம்...''

''வேண்டாம். மேலமேல என் கோபத்தக் கிளறாத.''

''நீங்க சொல்றதுக்கு என்னால ஒத்துக்கவே முடியாது.''

''அதையும் பாக்கறேன்,'' என்ற தந்தை அந்த வினாடியே தனது அத்தைக்கும் அழைத்துப் பேச, கண்ணீருடன் அவரையே பார்த்தபடி நின்று விட்டிருந்தாள் அபிநயா.

...........

''ஆமாம். நான் முடிவே பண்ணிட்டேன். இப்பவே சுதாரிச்சுக்கலேன்னா அப்புறம் சந்தி சிரிச்சுப் போகும். காலைல வீட்டுக்கு வா. எல்லாத்தையும் நேர்ல பேசி முடிவு பண்ணிக்கலாம்,'' என்று அவர் போனை வைக்கவும், தயானந்த் வீட்டிற்குள் வரவும் சரியாக இருந்தது.

அவனைக் கண்டதும் அழுகை இன்னும் அதிகமாகி விட்டிருக்க, முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

முயன்று சில வினாடிகளில் அழுகையை முழுமையாகக் கட்டுப்படுத்திக் கொண்டவள், ''வாங்க!'' என்று மெல்லிய குரலில் வரவேற்றாள்.

அதே நேரம் ராகவனும் தயானந்த்தை வரவேற்று அமரச் சொல்லி உபசரித்தார்.

''உன் ஐ.டி. கார்ட்!'' என்று அபிநயாவிடம் சொல்லிக் கொண்டே அவளுடைய ஐடெண்டிஃபிகேஷன் கார்டை அவன் டீபாயின் மீது வைக்க, ''நானே உங்கள அழைச்சுப் பேசலாம்னுதான் நினைச்சுட்டிருந்தேன், தம்பி,'' என்றவரைப் பார்த்தான் தயானந்த்.

''எங்களுக்கெல்லாம் சொத்து சுகம் வேணும்னா அவ்வளவா இல்லாம இருக்கலாம். ஆனா மானம் மரியாத நிறையவே இருக்கு.''

திடீரென்று அப்படிச் சொன்னவரைப் பார்த்தான் தயானந்த். அதேசமயம் அழுகையை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டிருந்த அபிநயாவின் முகமும் அவனுடைய கவனத்தில் படவே செய்தது.

''என்ன தம்பி பாக்கறீங்க? இனிமேல் என் பொண்ணு இருக்கற பக்கமாகக் கூடத் திரும்பிப் பாக்காதீங்க. ஏன் சொல்றேன்னா அவளுக்குக் கல்யாணம் நிச்சயமாகப் போகுது.''

''அபிநயாகிட்ட கேட்டீங்களா?''

''அவகிட்டயா, அவசியமே இல்ல.''

''என்ன இப்பிடி சொல்றீங்க?''



''பின்ன என்ன சொல்லணுங்கறீங்க?'' என்று கேட்ட ராகவனைப் பார்த்தான் தயானந்த்.

''பொண்ணப் பெத்தவங்களா மகளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கறது உங்க கடமதான். ஆனா அதுக்கப்புறமான வாழ்க்க...''

''அதெல்லாம் நல்லாதான் இருப்பா, இருந்தாகணும்.''

எதையும் சொல்லிவிட வேண்டாமே என்பதைப் போலத் தன்னைப் பார்த்த அபிநயாவின் பார்வையை ஒரு வினாடி சந்தித்தான் தயானந்த்.

''எதுக்கும் உங்க மகளோட சம்மதத்தத் தெரிஞ்சுக்கிட்டு அதுக்கப்புறம் முடிவு பண்ணலாமே.''

''அதெல்லாம் அவசியமில்ல, தம்பி.''

''நானும் அபியும் ஒருத்தருக்கொருத்தர் விரும்பறோம்...''

தயானந்த் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. ''அதான பாத்தேன்!'' என்று ஏளனமாகச் சிரித்தார் ராகவன்.

''ஏன் தம்பி இந்த மாதிரியெல்லாம்? போங்க. போய் உங்க லெவலுக்கு ஏத்த மாதிரி ஒரு பொண்ணாப் பாத்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருங்க. எங்களையும் நிம்மதியா இருக்க விடுங்க.''

''நான் உங்க பொண்ணு அபிநயாவ மனசார விரும்பறேன் ஸார், அவளும்தான்.

''முதல் முறையாய் பாத்தப்பவே எனக்கு மனைவியா ஒருத்தி வர முடியும்னா அது உங்க மகள் அபிநயாதான்னு முடிவு பண்ணிட்டேன்.

''என் வீட்டப் பொறுத்த வரைக்கும் என் விருப்பத்துக்கு எப்பவுமே என் பேரண்ட்ஸ் தடையா இருக்க மாட்டாங்க.

''திடீர்னு சொன்னதுனால உங்களுக்கும் அதிர்ச்சியா இருக்கலாம். எதுக்கும் யோசி...

''எப்பிடி பாத்தாலும் யோசிக்கறதுக்கு ஒன்னுமே இல்லேங்கறது வேற விஷயம். நீங்க எதிர்பாக்கற பதில் எங்கிட்டிருந்து எப்பவுமே வரப் போறதில்ல. என் மகளுக்கு ஏற்கெனவே மாப்பிள்ளை தயாரா...''

''முடியாதுப்பா. என்னால அந்தக் கிருஷ்ணனக் கல்யாணம் பண்ணிக்கவே முடியாது.''

''உன் சம்மதத்த இங்க யாரு கேட்டாங்க.''

மேலும் ஏதோ சொல்ல வந்த மகளை, ''வாய மூடிட்டு உள்ள போ,'' என்று கோபத்துடன் அதட்டினார் ராகவன்.

''இல்ல டாடி...''

''போன்னு சொல்றேனில்ல...'' என்று மீண்டும் அதே குரலில் சொன்னவர், உடனே திரும்பி தயானந்தத்தைப் பார்த்தார்.

''உங்கள மாதிரிப் பணக்காரப் பசங்களுக்கு எம்மக ஒருத்திதானா தம்பி? போங்க. போய் வேற யாரையாவதப் பாத்துட்டுப் போங்க,'' என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டு லேசாகச் சிரித்த தயானந்த், ''நாளைக்கே உங்க மகளப் பொண்ணு கேக்க அப்பா, அம்மாவோட வர்றேன்,'' என்று எழுந்திருந்தான்.

''ஏன் தம்பி விளையாடறீங்க? அப்பிடியே நான் என் மகள உங்களுக்குக் குடுத்தாலும் அவளோட சந்தோஷமான வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம்?''



''என்னக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நிச்சயம் உங்க பொண்ணு சந்தோஷமா நிம்மதியா இருப்பா. அத என்னால உறுதியா சொல்ல முடியும்,'' என்றவன், ''நாளைக்குப் பாக்கலாம்,'' என்று வெளியே வந்து விட்டிருந்தான்.

அவன் வாசலில் காலை வைக்கவும், வளர்மதி - அபிநயாவின் தாய் - உள்ளே வரவும் சரியாக இருந்தது.

புன்னகையுடன் தயானந்த்திடம் சில வார்த்தைகள் பேசியதோடு மட்டுமல்லாமல், அவன் கிளம்பி விட்டிருந்த பிறகே வீட்டிற்குள் வந்த மனைவியைப் பார்த்தார் ராகவன்.

இன்னும் கூடச் சற்று நன்றாகப் பேசியிருக்கலாமோ என்று தோன்றினாலும், கடுகடுவென்றிருந்த கணவனின் முகம் அவரை அப்படிச் செய்ய வைத்திருந்தது.

எதுவும் பேசாமல் தன்னைப் பார்த்த மனைவியை, ''என்ன பாக்கற?'' என்று எரிச்சலுடன் கேட்டார் ராகவன்.

''அபி எங்க?''

''ம், உள்ள இருப்பா.''

''ஏன் கோபமா இருக்கீங்க?''

''பின்ன, உம்மக நடந்துக்கற லட்சணத்துக்குச் சிரிச்சுட்டேவா இருக்க முடியும்.''

என்ன நடந்திருக்கும், கணவன் ஏன் இப்படிப் பேசுகிறார்..?

''என்னங்க, என்னா...''

''பேசாம உள்ள போ. எனக்கு வர்ற கோபத்துக்கு யார என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது.''

''என்ன நடந்தது, சொல்லுங்க?''

''ம், நாளைக்குக் காலைல கிருஷ்ணனுக்கும், உம் பொண்ணுக்கும் நிச்சயதார்த்தம்...''

''என்னங்க இப்பிடி சொல்றீங்க, அபிக்குத்தான் விருப்ப மில்லையே!''

''எனக்கு வர்ற கோபத்துக்கு அறைஞ்சு தள்ளிடுவேன், நீயெல்லாம் ஒரு அம்மாவா? இனி உம்பொண்ணு அந்தப் பையங்கூட ஓடிப் போற வரைக்கும் பேசாம சும்மா...''

''போதுங்க.''

''என்னடி போதும்.''

''அநியாயத்துக்கு வாய்க்கு வந்ததையெல்லாம் பேசாதீங்க.''

''யாரு. அப்பிடிப் பேசறது நீயா, நானா?

''இப்ப வந்துட்டுப் போறானே அந்தப் பையனும், உம்மகளும் ஒருத்தருக்கொருத்தர் விரும்பறாங்களாம்.

''ரோட்ல நின்னுக்கிட்டு அப்பிடியொரு சிரிப்பு. அவன் ஆம்பள. பத்தாததுக்குப் பணக்காரன் வேற. இவளுக்கு எங்க போச்சு புத்தி?''

''ஏய் அபி...''

கணவனின் கோபமும், கர்ஜனையும் வளர்மதியின் நெஞ்சிலும் குளிரைப் பரப்பி விட்டிருந்தது.

அதேபோல மற்றொரு முறையும் அவர் மகளை அழைத் திருக்க, தந்தையின் அந்தக் குரலில் ஹாலுக்கு வந்தே விட்டிருந்தாள் அபிநயா.

''நாளைக்கு மட்டும் உன்னக் கேட்டு அந்தப் பையன் வந்தான்னு வெச்சுக்கோ, அப்புறம் நடக்கறதே வேற.''

''ஏன் இப்பிடியெல்லாம் பேசறீங்க?''

''போதுண்டி. வாய மூடு. நீ உம் பொண்ண வளத்து வெச்சிருக்கற லட்சணத்துக்கு என்னக் கேள்வி கேக்க உனக்கெல்லாம் என்ன தகுதியிருக்கு?''



''அதெல்லாம் அபியப் பத்தி எனக்கும் தெரியுங்க. அதோட அவளோட லிமிட் அவளுக்கும்...''

கடுங் கோபத்துடன் தன்னை உறுத்து விழித்த கணவனின் பார்வையைச் சந்தித்தார் வளர்மதி.

''நீங்க உங்க மகள அந்தத் தம்பிக்குக் குடுக்கறீங் களோ இல்லையோ, அதப்பத்தி எனக்குத் தெரியாது. ஆனா அந்தக் கிருஷ்ணனுக்குக் குடுக்கக் கூடாதுங்க.''

''அப்பிடித்தான் குடுப்பேன். அதெல்லாம் நாளைக்குக் காலைல எல்லாத்துக்கும் தயாராக் கிளம்பியே வரச் சொல்லிட்டேன்.''

சற்றும் மனச்சாட்சியே இல்லாமல், வீம்புக்காகப் பேசிய கணவனைச் செய்வதறியாது பார்த்தார் வளர்மதி.

சில வினாடிகள்தான்.

''உடனே நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்க,'' என்றார்.

''கேக்க முடியாது.''

''என்னாலயும் அந்தக் கிருஷ்ணனக் கல்யாணம் பண்ணிக்க முடியாது!'' என்று தீர்க்கமாகச் சொன்ன மகளைக் கோபத்துடன் திரும்பிப் பார்த்தார் ராகவன்.

''சரிதான். அதயும் பாத்துடலாம்,'' என்ற கணவனிடம், ''அன்னைக்கு உங்க அக்கா வந்து என்னவெல்லாம் பேசிட்டுப் போனாங்கன்னு தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டார் வளர்மதி.

''அதையெல்லாம் என்னால கூட உங்ககிட்ட சொல்ல முடியாது. அந்த அளவுக்கு வாய் கூசற வார்த்தைகள், அப்பிடியிருக்கும் போது அபியால எப்பிடி அத அதுவும் உங்ககிட்ட சொல்ல முடியும்?''

''அப்பிடி யெல்லாம் பேசினது மட்டுமல்ல, சாபமும் வேற குடுத்துட்டுப் போயிருக்காங்க.

''சாதாரணமா நம்ம மகள உங்க அக்கா மகனுக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்திருந்தா இனி எப்பிடியோ, ஆனா இவ்வளவுக்கப்புறம் அவங்களுக்குக் குடுத்தீங் கன்னா நிச்சயம் அபிய நல்லபடியா வெச்சுக்க மாட்டாங்க.

''அதுலயும் சும்மாவே உங்க அக்காவுக்குக் கூர் நாக்கு.

''உன்னப் பத்தி எங்களுக்கும் தெரியும்னு இவள வார்த்தைகளால குத்திக் கிழிப்பாங்க. இப்பவும் வேற வழியில்லாம தான் உன்னக் குடுத்திருக்காங்கன்னு கொடுமப் படுத்துவாங்க.

''நாம வெச்சுட்டிருக்கறதோ ஒரே பொண்ணு. அவளுக் கும் தான் படிப்பு, அழகு, குணம்னு எதுல குறைவு?''

''உன் சமாதானமெல்லாம் எனக்குத் தேவையில்ல. நான் முடிவு செஞ்சது செஞ்சதுதான்.''

பட்டென்று சொன்ன கணவனை எரிச்சல் கலந்த வேதனையுடன் பார்த்தார் வளர்மதி.

''என் உயிரே போனாலும் நான் அந்தக் கிருஷ்ணனக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்!'' என்ற மகளை சரிதான், சொன்னதையே எத்தனை முறைதான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பாய் என்பதைப்போலப் பார்த்தார் ராகவன்.

''ஏன், உங்க அக்காவப் பத்தி நீங்களே எத்தன தடவ சொல்லியிருக்கீங்க. வேண்டாங்க. தயவுசெஞ்சு இப் பவே அவங்களக் கூப்புட்டு நாளைக்கு வர வேண்டாம்னு சொல்லிடுங்க...''



''முடியாது.''

''குரங்கு கைல பூமாலையக் குடுக்கற மாதிரி, அவங்க குடும்பத்துக்கு அபியக் குடுக்க வேண்டாமே. சொன் னாக் கேளுங்க.

''இதெல்லாம் உங்க அக்காவோட போதனதாங்கறது எனக்கு மட்டும் என்ன தெரியாதுன்னா நினைச்சுட்டிருக் கீங்க...''

''தெரிஞ்சுடுச்சல்ல, சந்தோஷம். அப்பிடியே வெச் சுக்கோ!'' என்று ஏளனத்துடன் சொன்ன கணவனைப் பார்த்த வளர்மதி, ''அபி இருக்காளேன்னு பாக்கறேன்,'' என்று லேசாத் தயங்கிவிட்டுப் பிறகு பரவாயில்லை யென்று சொல்லவே செய்தார்.

''ஏன், நமக்குக் கல்யாணமான புதுசுல என்னக்கூட எப்பிடியெல்லாம் தப்பு சொன்னாங்க. உங்களவிடவும் ரெண்டு மடங்கு சம்பளம் அதிகமா வாங்கறேங்கற ஒரே ஒரு காரணத்த வெச்சுக்கிட்டு உங்ககிட்ட என்னப்பத்தி எந்த அளவுக்கு இல்லாததையும் பொல்லாததையும் சொன்னாங்க.

''அவங்க சொன்னதையெல்லாம் கேட்டுக்கிட்டு நீங்களும் என்ன எப்பிடியெல்லாம் கொடுமப்படுத்தி யிருப்பீங்க. அதே கஷ்டத்த என் மகளும் படக் கூடா துங்கற ஒரே காரணத்துக்காகத்தான் இப்பவும்கூட அதை யெல்லாம் சொல்ல வேண்டியதாயிடுச்சு.

''போதுங்க. வேற என்ன வேணும்னாலும் சொல் லுங்க. அதுக்கான முழு உரிமை எங்கள எல்லார விடவும் கூட உங்களுக்குத் தான் அதிகமா இருக்கு. ஆனா அந்தக் கிருஷ்ணனுக்கு நம்ம மகளக் குடுக்கணுங்கற எண் ணத்தக் கூட இத்தோட மறந்துடுங்க...''

''நானும் உங்ககிட்ட இத்தன நாளும் ஒரு விஷயத்த மறைச்சுட்டேன்,'' என்று பெற்றவர்களைப் பார்த்த அபிநயா, பிறகு அதற்கு மேல் எதையும் சொல்ல முடியாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

மிகுந்த தயக்கத்திற்குப் பிறகு மீண்டும் வாயைத் திறந்திருந்தவளால் என்ன முயன்றும் அவள் சொல்ல வந்ததை முழுமையாக ஏன் தொடங்கவே முடிந்திருக்க வில்லை.

''என்னமா?'' என்று கேட்ட மனைவியிடம், ''சொல்ல விஷயம் இருந்தாதான சொல்லுவா?'' என்று ஏளன மாகச் சிரித்தார் ராகவன்.

மூன்று வருடங்களுக்கு முன்பு ஒருமுறை தான் அத்தை வீட்டிற்குச் சென்றிருந்த போது யாருமில்லாத தனிமை யில் அத்தை மகன் அதாவது அந்தக் கிருஷ்ணன் தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்ததும், பெரும் போராட்டத்திற்குப் பிறகு ஒரு வழியாகத் தான் தப்பி வந்ததும் நேற்று நடந்ததைப் போல நினைவிற்கு வந்தது அபிநயாவிற்கு.

கொஞ்சம் விட்டுக் கொஞ்சம் மட்டுமே என்றாலும் மிகுந்த தயக்கத்துடன் தான் சொல்ல வந்ததைக் கடைசியாகச் சொல்லியே முடித்திருந்தாள் அபிநயா.

ஏன் அதே மூன்று வருடங்களுக்கு முன்பு தொடர்ந்து வந்த அந்தப் பத்து நாட்களும் பேயறைந்தாற் போல மகள் தனது அறையை விட்டே வெளியே வராதிருந்ததும், என்னவென்று விசாரித்த போது காரணமே இல்லாமல் அழுது மழுப்பியதும் சற்று முன்னர் நடந்தது போல ராகவனுக்கும் நினைவிற்கு வந்தது.



அதேபோல வளர்மதிக்கும்.

வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும் உள்ளுக்குள் நெஞ்சு கொதித்தது ராகவனுக்கும், வளர்மதிக்கும்.

ஆனால் இருவராலுமே தங்களுடைய மகளுக்கு முன்பாக அதை வெளியே காட்ட முடிந்திருக்கவில்லை.

அதிலும் ராகவனின் நிலையோ ''திருடனுக்குத் தேள் கடித்தது'' போல ஆகிவிட்டிருந்தது.

எதையும் சொல்ல முடியாது உணர்ச்சி துடைக்கப் பட்ட முகத்துடன் எங்கோ பார்த்தார். கணவனின் நிலை வளர்மதிக்கும் புரியவே செய்தது.

ஏன் அவருக்கும் அந்த நாட்களில் நடந்ததுதான் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

ஏன், அதற்குப் பிறகு வந்த நாட்களில் என்ன முயன்றும் எப்படி அழைத்தும் மகள் ஒரேயடியாக அவளுடைய பெரிய அத்தையின் வீட்டிற்கு வர மறுத்து விட்டதும்.

எனது உயிரே போனாலும் சரிதான், அப்படிப்பட்ட ஒருவனுக்கு எனது மகளைக் கொடுக்க நான் ஒரு போதும் விட மாட்டேனென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார் வளர்மதி.

பார்ப்பதற்கு ஒன்றுமே தெரியாத அப்பாவி போல இருந்து கொண்டு என்ன காரியம் செய்யத் துணிந்திருக் கிறான் ராஸ்கல் என்று உள்ளம் கொதித்தது.

''என்ன மன்னிச்சுடுங்க. நானும் இத சொல்ல வேண் டாம்னுதான் இருந்தேன்,'' என்று முயன்று வரவழைத்த குரலில் சொன்ன அபிநயா, சில வினாடிகளுக்குப் பிறகு மீண்டும் தானே வாயைத் திறந்தாள்.

''அன்னைக்கு மட்டும்தான்னு இல்ல. அதுக்கு முன்னாடியும் ஏன் இன்னைக்கு வரைக்கும் கூட அவனும்

அவனோட பார்வையும்...'' என்றவள், அதற்குப் பிறகு அருவருப்புடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

என்னதான் தூங்க முயற்சி செய்தாலும் அன்று இரவு அந்த வீட்டில் யாருக்குமே தூக்கம் வந்திருக்கவில்லை.

ஒரு அவசர வேலையாகத் திடீரென்று வெளியூர் செல்ல வேண்டியிருப்பதால் நாளை வர வேண்டாம், வீட்டில் யாரும் இருக்க மாட்டோம் என்று மட்டும் தனது அக்காவிற்கு எப்பொழுதோ போனில் அழைத்துச் சொல்லிவிட்டிருந்தார் ராகவன்.

பாவம் மகள் என்று இப்பொழுது அவருக்கு உள்ளம் உருகியது. கோபத்தில் கையைக் கூட நீட்டி விட்டோமே என்று வேதனையாகவும் இருந்தது.

ஆனால் தான் கையை நீட்டியது இன்று மட்டுமா என்ன, அன்றும் ஒரு நாள் அப்படித்தானே முட்டாள் தனமாகக் கோபப்பட்டு அடித்து விட்டோமென்றும். ஏன் விவரம் தெரிந்த நாளிலிருந்து வேறு எதற்காகவுமே அவர் மகளை வார்த்தையால் கூடக் கடிந்து கொண்டதில்லையே, ஏன் அப்படிக் கடிந்து கொள்ளும் அளவிற்கு மகளுமே நடந்து கொண்டதில்லையே.

சற்றும் தகுதியில்லாதவர்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு மகளை ஏன் மனைவியையுமே கூட எந்த அளவிற்குக் கேவலமாக நடத்தியிருக்கிறோமென்று நினைத்து நினைத்து மாய்ந்து போனார் ராகவன்.

இனித் தனது அக்காவை எப்பொழுது பார்க்க நேர்ந்தாலும் மகளை உனது மகனுக்குக் கொடுக்க முடியாது என்பதை அடித்துச் சொல்லிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டார்.



அந்த முடிவுக்கு மனதிற்குள் வந்து விட்ட பிறகே அவரால் சற்றேனும் மனம் நிம்மதியடைய முடிந்தது.



13

''நமக்குன்னு ஒரு டிக்னிட்டி இருக்கு!'' என்ற தந்தையைப் பார்த்தான் தயானந்த்.

''இருக்கலாம்பா. ஆனா என் பதில்ல எந்த மாற்றமும் இல்ல.''

''அப்ப இதுதான் உன் முடிவு. இல்லையா?''

''ஆமாம்.''

''சரிதான். உலகத்துல எத்தன அப்பாக்களுக்குத் தங்களோட குழந்தைகளால பெரும கிடைச்சுடுது?''

அப்படிச் சொன்ன ராகவேந்திரனைத் தாய் மகன் இருவருமே எதுவும் பேசாமல் பார்த்தனர்.

''நாளைக்குக் காலைல எத்தன மணிக்கின்னு டைம் மட்டும் சொல்லு. அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போய்ட்டு வந்துடலாம். ஆனா ஒன்னு, உனக்காகப் பெத்தவனோட கடமைங்கற ஒரு காரணத்துக்காக மட்டும்தான் நான் வரச் சம்மதிச்சிருக்கேன். அதுக்கு மேல எந்த விதமான உரிமைகளையும் எங்கிட்ட எதிர்பாத்துட வேண்டாம்.''

கணவனின் அந்த வார்த்தைகள் நிர்மலாவைக் கதி கலங்கச் செய்து விட்டிருந்தன.

அதைவிடக் கணவனின் வார்த்தைகளை இனி மகன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்பதே அவருடைய பயத்திற்கான முக்கியக் காரணமாக இருந்தது.

சும்மாவே மகன் மிகவும் ரோஷக்காரன். தன்னை யாரும் ஒரு வார்த்தை சொல்லிவிடக் கூடாதென்பதில் எப்பொழுதும் உறுதியாக இருப்பவன்.

அதற்காக எந்த அளவிற்குச் சிரமத்தை எதிர்கொள்ளவும் தயங்காதவன்.

அபிநயா தனக்கு மருமகளாக வருவதில் நிர்மலா வுக்கு மிகுந்த சந்தோஷமே.

ஆனால் எந்த ஒரு சிறு விஷயத்திலும் கூட சரிசம மான அந்தஸ்தை எதிர்பார்க்கும் கணவனை நினைத்த தில் அந்த சந்தோஷமெல்லாம் இருந்த இடம் தெரி யாமல் காணாமல் போய் விட்டிருந்ததையும் கண்டார்.

அதேபோல ஒன்றை நினைத்து விட்டால் அதை முடிக் காமல் தூங்கிப் பழக்கப்படாத மகனுடைய குணத்தை நினைத்தும்.

ஏற்கெனவே முடிவு செய்தது போல அடுத்த நாள் காலை யில் அபிநயாவைப் பெண் கேட்டுத் தயானந்தின் குடும் பம் அவளுடைய வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றது.

தயானந்த் காலையில் நேரத்திலேயே தனக்கு அழைத் துச் சொல்லியிருக்க, தான் அதைத் தாயிடம் சொல்லி விட்டிருந்தாள் அபிநயா.

மனைவியின் மூலம் விஷயத்தை அறிந்து கொண்ட ராகவனும் முதல்நாளைப் போல அவசரப்பட்டு எதையும் சொல்லி விட்டிருக்கவில்லை.

அந்த அளவில் வளர்மதியும், அபிநயாவும் மனதிற் குள் சற்று நிம்மதியாக உணர்ந்தனர்.



ஆனாலும் வீட்டிற்கு வருபவர்களிடம் முகத்திலடித் தது போல எதையாவது சொல்லி விடுவாரோ என்ற பயம் மட்டும் இருவருக்குமே உள்ளுக்குள் இருந்தது.

ஆனாலும் அதை அவர்கள் இருவருமே வெளிப்படுத் திக் கொள்ளவில்லை. அப்படித்தான் என்று உறுதியாகச் சொல்ல முடியாத ஒன்றை நினைத்து நாம் மனதைக் குழப்பிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அடுத்தவரை யும் ஏன் பயப்படுத்த வேண்டுமென்று பேசாமல் இருந்து விட்டிருந்தனர்.

வீட்டிற்கு வந்த தயானந்தின் குடும்பத்தைத் தானே எழுந்து சென்று முன்னின்று வரவேற்றார் ராகவன்.

ஆனாலும் சந்தோஷம் என்பது மட்டும் அவருடைய முகத்தில் துளியும் இருக்கவில்லை. அதே நிலையில் தான் தயானந்தின் தந்தை ராகவேந்திரனும் இருந்தார் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

ஆனால் அவர்கள் இருவரைத் தவிர மற்ற அனை வருக்குமே மனதிற்குள் சந்தோஷமும், ஒருவித நிம்மதி யும் இருக்கவே செய்தன.

தொடர்ந்து வந்த ஒரு மாதத்தில் தயானந்த் அபிநயா வின் திருமணம் நிச்சயிக்கப்பட்டுத் திருமணமும் இனிதே நடந்து முடிந்தது.

திருமணம் முடிந்து ஒரு வாரத்தில் வரவிருக்கும் திருமண வரவேற்பைப் பெரிய அளவில் ஏற்பாடு செய்து கொள்ளலாமென்று ஏற்கெனவே முடிவு செய்து விட்டிருந்த படியால் அதற்கு வந்து செல்லலாமென்று திருமணத்திற்கு வராதவர்களும் இருக்கவே செய்தார்கள்.

ஆனாலும் கூட சில ஆயிரத்திற்கும் மேலேயே கூட திருமணத்திற்கு வந்திருந்தார்கள்.

என்னதான் தொடக்கத்தில் மகனிடம் தனது ஆதங் கத்தைக் காட்டியிருந்தாலும் போகப் போக இயல்பான மனநிலைக்குத் திரும்பி விட்டிருந்தார் ராகவேந்திரன்.

எந்த ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் ஏதோ ஒரு குறை இருக்கத்தான் செய்யும். மருமகள் பிரமாதமாக அமைந்து விட்டிருக்கும் பொழுது மற்றதை நாமும்தான் ஏன் பெரிது படுத்த வேண்டுமென்று விட்டு விட்டிருந்தார்.

சாஸ்திரப்படி முதல் நாள் இரவு பெண் வீட்டில் இருந்து விட்டு, அதற்கு அடுத்த நாள் புதுமணமக்கள் இருவரும் தயானந்தின் வீட்டிற்குக் கிளம்பி வந்திருந்தனர்.

தன் வீட்டில் தயானந்த் மிகவும் இயல்பாக இருந்தது போலத்தான் அபிநயாவிற்குத் தோன்றியது.

ஆனால் என்ன முயன்றும் அவளால் தனது புகுந்த வீட்டுச் சொந்தங்களுக்கு மத்தியில் அப்படி இருக்க முடியவில்லை. ஏன், மிகவும் சிரமப்பட்டுப் போனாள் என்றும் கூடச் சொல்லலாம்.

தனது அத்தையைத் தவிர ஏதோ போனால் போகிறது என்பதைப் போல மற்ற அனைவரும் தன்னிடம் பேசிய விதத்தில் மனதிற்குள் ஒரு மாதிரியாக உணர்ந்தாள்.

தனது அத்தைக்கு உதவியாகக் கிச்சனில் நின்று கொண்டிருந்த அபிநயா 'மம்மி' என்ற அழைப்புடன் வந்த தனது நாத்தனாரின் வருகையில் புன்னகையுடன் திரும்பினாள்.

ஆனால் அதற்குத் தனது நாத்தனாரிடம் எந்த ஒரு சிறு எதிரொலியும் இல்லாததில் கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.



முயன்று வேறு பக்கம் பார்ப்பதைப் போலத் திரும்பித் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

''வா சுமி.''

''அப்புறம் மம்மி...''

''ம். சொல்லுமா.''

''ஒன்னுமில்ல மம்மி. அப்புறமா சொல்றேனே...''

தான் இருப்பதால்தான் கணவனின் தங்கை தயங்கு கிறாள் என்பது புரிய, ''இதோ ரெண்டு நிமிஷத்துல வர் றேன் அத்தே,'' என்று அங்கிருந்து சென்று விட்டிருந்தாள் அபிநயா.

''அப்பாடா! ஏதோ இந்த அளவுக்காவது புத்தியிருக்கே!'' என்ற நாத்தனாரின் எரிச்சல் கலந்த குரலும், அதற்கு, ''கொஞ்சம் மெதுவாப் பேசு சுமி,'' என்ற தனது அத்தை யின் பதிலும் காதுகளில் விழுந்து தேய்ந்தது.

சொல்லிவிட்டுச் சென்றதை விடவும் கூட ஐந்து நிமிடங்கள் கழித்தே மீண்டும் வந்தாள் அபிநயா.

ஆனாலும் அப்பொழுதும் தனது அத்தையும், நாத்த னாரும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

தன்னைக் கண்டதும், ''அபி, இங்க வாம்மா,'' என்று அழைத்த தனது அத்தையின் குரலில் அருகில் வந்தாள் அபிநயா.

''சொல்லுங்க அத்தெ,'' என்று அருகில் வந்திருந்த வளிடம், ''இந்தாம்மா, இந்தக் கிழங்க சரியா இந்த அள வுல கட் பண்ணிக் குடு,'' என்று வேகவைத்த உருளைக் கிழங்குகள் அடங்கிய தட்டையும் கத்தியையும் தனது மருமகளிடம் கொடுத்தார் நிர்மலா.

''நான் சொல்றேனேன்னு சங்கடப்பட வேண்டாம்,'' என்ற தனது நாத்தனாரின் குரலில், ''சொல்லுங்க,'' என்று அவளைப் பார்த்தாள் அபிநயா.

''என்ன சேலயக் கட்டிட்டிருக்க நீ. இந்த வீட்ல வேலக் காரங்கதான் இந்த மெட்டீரியல்ல உடுத்துவாங்க. இனிமேல் இதையெல்லாம் டிஸ்போஸ் பண்ணிடு. இந்தக் குடும்பத்துக்குன்னு ஒரு அந்தஸ்து இருக்கு. இல்லன்னா இதக்கூட சொல்லமாட்டேன்,'' என்றவள், ''அண்ணாகிட்ட சொல்லி கொஞ்சம் நல்லதா சிலத எடுத்துக்கோ,'' என்றாள்.

சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் அபிநயா.

''உங்க மகன்கிட்ட நீங்களும்தான் கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க மம்மி,'' என்று சுமிதா அங்கிருந்து நகர, ''நீ ஒன்னும் தப்பா எடுத்துக்காதமா. அவ சின்னப் பொண்ணு. இன்னும் எப்படிப் பேசணுங்கற விவரமெல்லாம் ஒன்னும் தெரியறதே இல்ல,'' என்றார்.

''அப்புறம் அபி...''

''சொல்லுங்க அத்தெ...''

''துணி மட்டுமில்ல, நகைகளும் கூடக் கொஞ்சம் நீ மாத்திக்கிட்டாப் பரவாயில்ல. நான் வேணும்னா எடுத்துத் தர்றேன்.''

''இல்ல அத்தெ. எங்கிட்டயே நிறைய இருக்கு...''

''வைரத்துல வெச்சிருக்கியா?''

''மத்தது எப்பிடியோ, ஸ்ட்ரெட் மட்டுமாவது வைரத்துல போடணும். அப்பதான் பரவாயில்லாம இருக்கும்...''

''நிர்மலா!''

''வாங்கமா,'' என்று தனது தாயை வரவேற்றவர், அபிநயாவிடம், ''சரிமா நீ உன் வேலயப் பாரு,'' என்றார்.

''தயாவ எங்க காணல?''



''கம்பெனிக்குக் கிளம்பிட்டாம்மா.''

''இன்னைக்கேவா?''

''அதுசரி. என்னமா? ஏன் கேக்கறீங்க?''

''ரெண்டு பேரையும் கோவிலுக்குப் போய்ட்டு வரச் சொல்லலாமேன்னு பாத்தேன்,'' என்றவர், ''வேலக்காரங்க எல்லாரும் எங்க? உம்மருமககிட்ட வேல வாங்கிட்டிருக்க?'' என்று மகளிடம் கேட்டார்.

''இருந்தாங்கமா. அவங்களக் கட் பண்ணச் சொன்னா அவங்க இஷ்டத்துக்கு செய்வாங்க. புரிய வைக்கறதும் கஷ்டம்.''

''ஓ, சரிதான். அப்புறம் சமையல் எல்லாம் செய்வியாம்மா?'' என்று அவர் தன்னைப் பார்த்துக் கேட்க, ''ஓரளவுக்கு பாட்டி,'' என்றாள் அபிநயா.

''ஏன், உன் வீட்ல வேலைக்கு ஆளுங்க இருக்காங்களா?'' என்று நித்யவள்ளி அதாவது தனது அத்தையின் தாய் கேட்க, ''இல்ல பாட்டி,'' என்றாள்.

''பின்ன எப்பிடிப் பழகாமப் போன? ஓ, ஒரே பொண்ணுங்கறதால செல்லமா?''

''அதெல்லாமி...''

''இனிமேல் எல்லா வேலையும் பழகிக்கோ. ஒரு ஆள் சம்பளமாவது மிச்சமாகும்,'' என்ற தாயை, ''சரிமா, நீங்க உக்காருங்க. உங்களுக்குக் காபி கலக்கறேன்,'' என்றார் நிர்மலா.

''நீ ஏன் செய்யற? இனிமேல் எல்லாப் பொறுப்புகளையும் உன் மருமககிட்டயே குடுத்துடு,'' என்ற தாயிடம், ''அது சரிதான்,'' என்று சிரித்து வைத்தார்.



# 14

''டாடி!''

''வா சுமி!''

''என்ன இன்னைக்கே அண்ணாவ ஆஃபீஸ் அனுப் பிட்டீங்க?''

''யாரு நானா, அவன் போகச் சொன்னாப் போவானா? இல்ல, இருக்கச் சொன்னாத்தான் இருப்பானா?''

''அது சரிதான்.''

''என்னடாம்மா, மாப்பிள்ளை கிளம்பிட்டாரா?''

''ஆமா டாடி, அவருக்கு இங்க ஒன்னுமே பிடிக்கல. இனிமேல் அவரு ஏன் அவங்க வீட்ல எல்லாருமே இங்க வர்றது கூட சந்தேகம் தான்.''

''ஏன்?''

''என்ன ஏன்னு கேக்கறீங்க? எல்லாம் தயாண்ணா பண்ணியிருக்கற காரியம்தான். இருந்திருந்து இந்த அண்ணா ஏன் இப்பிடி செஞ்சார்...''

''அதையேம்மா இப்பப் பேசற. தேவையில்லாத மன வருத்தம்தான் மிஞ்சும். அவன் செஞ்சிருக்கற காரி யத்துனால இன்னும் எத்தன பேர் இங்க நம்ம வீட்டுக்கு வராமப் போயிடுவாங்களோன்னு நினைச்சாலே பயமா இருக்கு.''



''எது எப்பிடியோ டாடி, ஆனா இனிமேல் நாம நிறையப் பேர இழக்க வேண்டி வரும்.''

''அது சரிதான். ஆனா இனிமேல் அதையெல்லாம் பேசிப் பலனில்ல...''

அதேநேரம் தயானந்த் உள்ளே வர, தந்தையும், மகளும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

உடனே, ''வாங்கண்ணா,'' என்றாள் சுமிதா.

''அப்புறம் மேடம் ரொம்பப் பெரிய ஆளாயிட்டீங்க போலிருக்கு?'' என்ற அண்ணனைப் பார்த்தாள்.

ஏன் இப்படிக் கேட்கிறாரென்று அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ''என்னால யாரும் சிரமப்பட வேண்டாம்,'' என்றான் தயானந்த்.

அதற்குப் பிறகுதான் அவ்வளவு நேரமும் தாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைத் தயானந்த் கவனித்து விட்டிருக்கிறான் என்பதே இருவருக்கும் புரிந்தது.

''ஸாரிண்ணா!'' என்று சிறிதாகி விட்ட குரலுடன் சொன்ன தங்கையின் கன்னத்தில் 'அசடு' என்று செல்ல மாகத் தட்டினான் தயானந்த்.

அதேநேரம் நிர்மலாவும் ஹாலுக்கு வர, தான் ஏற் கனவே முடிவு செய்து விட்டிருந்ததைச் சொன்னான் தயானந்த்.

''என்னப்பா இப்பிடி சொல்ற?'' என்று பெற்றவர்கள் இருவரும் பதற, ''என்னாலதான அண்ணா...'' என்று அழுகையுடன் கேட்டாள் சுமிதா.

''அப்பிடியெல்லாம் இல்லமா,'' என்று தங்கையைப் பார்த்துச் சொன்னவன், ''இந்த விஷயத்துல என்ன யாரும் கம்பல் பண்ணாதீங்க,'' என்று ஒரேயடியாகச் சொல்லி விட்டிருந்தான்.

சொன்னதோடு மட்டுமல்லாமல், அன்று இரவே தங்களுடைய இன்னொரு வீட்டிற்கு. ''எப்ப நினைச்சாலும் நீங்களும் வாங்க. நாங்களும் வர்றோம்,'' என்று மனைவியுடன் கிளம்பி விட்டிருந்தான் தயானந்த்.

தாய் அழைக்க நின்று அவரைத் திரும்பிப் பார்த்தான்.

''எங்க மேல உனக்குக் கோபம் இல்லையா கண்ணா?''

''அவசியமில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காதீங்கமா,'' என்று தாயின் கைகளைப் பற்றிச் சொன்னவன், ''என்ன கிளம்பலாமா?'' என்பதைப் போல மீண்டும் மனைவியைப் பார்த்தான்.

அருகில் நின்றிருந்த தனது மருமகளிடமும், ''யாராவது ஏதாவது சொல்லியிருந்தாலும் மனசுல வெச்சுக்காதமா,'' என்று உணர்ந்து சொன்னார் நிர்மலா.

''அச்சச்சோ! என்ன அத்தே நீங்க?'' என்றவள் மீண்டுமொரு முறையும் கூட அவரிடம் சொல்லிவிட்டுக் கணவனுடன் கிளம்பி விட்டிருந்தாள்.

''அப்புறம் அம்மா...''

மகன் ஏதோ சொல்ல வர, ''என்னப்பா?'' என்று அருகில் வந்தார் நிர்மலா.

''ஒரு நாலு சூட்கேஸ்ல வேண்டியதையெல்லாம் எடுத்து எங்க ரூம்ல வெச்சிருக்கோம். நாளைக்கு டிரைவர் கிட்டக் குடுத்தனுப்பிடுங்க.''

''சரிப்பா.''

புகுந்த வீட்டுச் சொந்தங்கள் அனைவரும் வெளியே நின்று விடை கொடுக்கக் கணவனுடன் புறப்பட்ட அபிநயாவிற்கு ஏதோ ஒரு இனம் கண்டு கொள்ள முடியாத தவிப்பு வந்து பற்றிக் கொண்டுவிட்டதைப் போலிருந்தது.



மனைவியும் ஏறி அமர்ந்து கதவை மூடியிருக்க மீண்டும் ஒரு தலையசைவுடன் காரை ஸ்டார்ட் செய்திருந்தான் தயானந்த்.

மெயின் கேட்டில் நின்றிருந்த செக்யூரிட்டியின் சல்யூட்டை ஒரு சிறு புன்னகையுடன் வாங்கிக் கொண்டவன், அடுத்த சில நிமிடங்களில் காரை நெடுஞ்சாலையில் விட்டிருந்தான்.

அந்த நேரத்தில் சாலை மிகவும் கிளியராக இருக்க, சீரான வேகத்தில் காரைச் செலுத்திக் கொண்டே தனது இடது கையால் மனைவியின் கையைப் பற்றினான் தயானந்த்.

கணவனின் தொடுகையில் உடல் சிலிர்த்துப் போனாள் அபிநயா.

''அபி!''

''ம்.''

''ஏதாவது பேசு.''

''உன்னத்தான்...''

''ஏன் டல்லாத் தெரியறீங்க?''

மனைவியின் அந்தக் கேள்வியில் திரும்பி அவளைப் புன்னகையுடன் பார்த்தவன், ''அத நான் கேக்கணும்,'' என்றான்.

''நானெல்லாம் நல்லாதான் இருக்கேன்.''

''சும்மா சொல்லாத.''

''நிஜம் தயா.''

''அப்ப யாருமே எதுவும் சொல்லலயா, ஆச்சரியமா இருக்கு.''

''பாவம், அத்தே. ஏன் இப்பிடி...''

''ம். கேளு.''

''நாம அங்கயே இருந்திருக்கலாமே.''

சில வினாடிகள் அங்கே அமைதி நிலவியது. அது நிமிடங்களாகவும் நீண்டது.

கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகம் தன்னை என்னவோ செய்ய, அதற்கு மேல் அபிநயாவும் எதையும் பேசாமல் அமர்ந்து விட்டிருந்தாள்.

''கொஞ்ச நாளைக்கு நாம ரெண்டு பேர் மட்டும் தனியா இருக்கலாம்மா, உனக்கு நீ எனக்கு நான்னு...''

தன்னைப் பார்த்த கணவனின் பார்வையில் முகம் சிவந்து போனாள் அபிநயா.

''அபி...''

கணவனின் அழைப்பில் மீண்டும் அவள் நிமிர்ந்து பார்க்க, ''பேசுடா,'' என்றான்.

''என்னாலதான் உங்களுக்கும் சிரமம் தயா...''

''உளறாத.''

அடுத்த சில நிமிடங்களில் தயானந்த் தனது வீட்டின் முன்பாகக் காரை நிறுத்தியிருக்க இருவரும் இறங்கினார்கள்.

கணவன் முன்னே சென்று வீட்டைத் திறந்திருக்க, கையிலிருந்த சில பைகளுடன் தானும் அவனுடன் உள்ளே வந்தாள்.

நேராகத் தனது கையிலிருந்த கவர்களைக் கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டு வந்தவள், கணவன் சோஃபாவில் அமர்ந்திருப்பதைக் கண்டாள்.



''வா, உக்காரு.''

கணவன் அழைக்க, தானும் சென்று அதே சோஃபாவில் அமர்ந்தாள்.

''வீட்ட சுத்திக் காட்டட்டுமா?''

''ம்.''

''வா,'' என்று எழுந்தவன், முதலில் சென்று ஹால் மெயின் கதவைத் தாழிட்டு விட்டு வந்தான்.

அந்த வீடும் பெரிய அளவில் நிறைய அறைகளைக் கொண்டதாக இருக்க, வீட்டைக் கணவனுடன் ஆசையாகப் பார்த்தாள் அபிநயா.

''பிடிச்சிருக்கா?''

''ரொம்ப. இது எப்பக் கட்டினது?''

''ரெண்டு வருஷமாச்சு.''

''இங்க செக்யூரிட்டி வேலைக்குன்னு யாருமே இல்லையா?''

''இருக்காங்க. வார விடுமுறைக்காகப் போயிருக்காங்க. நாளைக்கு வந்துடுவாங்க.''

''ஓ, வீடு ரொம்ப சுத்தமா குடியிருக்கற மாதிரி இருந்ததாலதான் கேட்டேன்.''

''அப்புறம் வீட்டு வேலைக்குக் காலைல வரச் சொல்லிட்டு ஈவினிங் போகச் சொல்லிடலாமாம்மா?''

''அதுகூட வேண்டாம் தயா. நானே செஞ்சுக்கறேன்.''

''நோ நோ. நான் கேக்கற அர்த்தமே வேற,'' என்று தன்னை நெருங்கிய கணவனிடமிருந்து லாவகமாக விலகி நின்று சிரித்தாள்.

''ம். இதுக்காகத்தான் கேட்டேன், நாம மட்டும் தனியா இருந்தா ஓடிப் புடிச்சுகூட விளையாடலாமே.''

''ஸார் இன்னைக்கு படு சந்தோஷமா இருக்கீங்க போலிருக்கு?''

''பின்ன இந்த நாளுக்காக எவ்வளவு நாளா எத்தனை ஆவலாக் காத்திருக்கேன்...''

''ம்கூம், நான் நம்ப மாட்டேன்.''

மெல்லிய குரலில் புன்னகையுடன் சொன்ன மனைவியிடம், 'ஏன்?' என்று கேட்டான் தயானந்த்.

அவ்வளவு ஆசை இருப்பவனாக இருந்திருந்தால் நேற்று ஏன் அருகில் கூட வந்திருக்கவில்லையாம்...

''ம், பேசுங்க மேடம்.''

தான் மனதிற்குள் நினைத்ததைத் திக்கித் திணறி ஒரு வழியாகக் கேட்டே விட்டிருந்தாள் அபிநயா.

மனைவியின் வெட்கமும், முகச் செம்மையும் தன்னை என்னவோ செய்ய, 'அபி' என்று அருகில் நெருங்கி வந்திருந்தான்.

ஆனால் அப்பொழுதும் தனது கைகளுக்குச் சிக்காமல் நகரப்போன மனைவியை இரண்டு எட்டில் பிடித்திருந்தான்.

மனைவியைத் தனது கைகளுக்குள் சிறைப்பிடித்திருந்தவன், அவளுடைய கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தான்.

''அபி...''

''ம்.''

''ஏன் நேத்து நீ எக்ஸ்பெக்ட் பண்ணிட்டிருந்தியா? ம்...''

கணவனின் அருகாமையும், மூச்சுக் காற்றும் தன்னை என்னவோ செய்ய, அவளையறியாமலேயே அவனுடைய மார்பில் சாய்ந்து முகம் புதைத்துக் கொண்டாள்.



அதற்குமேல் கணவன் பேசியதெல்லாம் அவளுடைய காதுகளுக்குள் கூட சென்றிருக்கவில்லை. அதாவது கேட்கும் நிலையில் அவள் இருக்கவில்லை.

மனைவியின் நிலை புரிய, அபி என்று அவளுடைய முகத்தை நோக்கிக் குனிந்தான் தயானந்த்.



## 15

காலையில் தான் படுக்கையை விட்டு எழுந்தபோது மனைவி அருகில் இல்லாததைக் கண்டான் தயானந்த்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தான்.

ஐந்தரை எனக் காட்டியது.

இந்த நேரத்தில் எங்கே எழுந்து சென்றிருப்பாள் என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, கையில் காபி ஃப்ளாஸ்க் டம்ளர்கள் அடங்கிய ட்ரேயுடன் வந்தாள் அபிநயா.

''குட்மானிங் தயா.''

''மானிங்மா. ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந்துட்ட?''

''ஹலோ டைம் பாருங்க.''

''ஆமா. ஃபைவ் தர்ட்டி, அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா? அப்ப ஐயா தினமும் எத்தன மணிக்கு எழுந்திருப்பீங்க? எக்ஸர்ஸைஸ் எல்லாம் பண்ற பழக்கமே இல்லையா?''

அதேநேரம் எழுந்து மனைவியின் அருகிலேயே வந்து நின்றிருந்த தயானந்த், "அப்ப இந்த நாள் ஸ்பெஷல் இல்லையா? உனக்கு எல்லா நாள் மாதிரியும்தானா?" என்று ஆழ்ந்த குரலில் மெதுவாகக் கேட்டான்.

கணவனின் கேள்வியும் பார்வையும் தன்னை என்னவோ செய்ய, அப்படியே குனிந்து கொண்டு விட்டிருந்தாள் அபிநயா.

"நைட் நாம தூங்க ஆரம்பிக்கும் போது நேரம் என்னன்னு தெரியுமா?" என்று அதே குரலில் கணவன் கேட்க, என்ன முயன்றும் அபிநயாவால் தன்னை இயல்பாகக் காட்டிக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

உதட்டைக் கடித்து அவளுடைய லேசான உடல் நடுக்கத்தைக் கட்டுப்படுத்த முயன்ற மனைவியை 'வா' என்று அப்படியே தனது மார்போடு அணைத்தபடி கட்டிலுக்கு அழைத்துக் கொண்டு போனான்.

"ஃப்ரீயா இருடா. இங்க நான் மட்டும்தான இருக்கேன்," என்றவன், "இன்னும் கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கு," என்றான்.

குனிந்து கீழே பார்த்தபடி இருந்த மனைவியின் முகவாயை மிருதுவாகத் தொட்டுத் தூக்கினான் தயானந்த்,

"என்னடா, ஏன் ஒரு மாதிரி..."

"ம்கூம்..." என்ற அபிநயா, அதற்குமேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது கணவனை இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

மீண்டும் அபிநயா படுக்கையை விட்டு எழுந்தபோது மணி ஏழுக்கும் மேல் ஆகியிருந்தது. அதாவது அப்பொழுதுதான் எழ விட்டிருந்தான் அவளுடைய கணவன்.



அடுத்த பத்து நிமிடங்களில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்த தயானந்த், "அபி, காபி," என்றான்.

"இதோ..." என்று சில வினாடிகளில் இரண்டு கப்களில் ஊற்றிய அபிநயா ஒன்றைக் கணவனுக்குக் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

சற்றுத் தள்ளி அமரப் போன மனைவியின் கையைப் பிடித்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

"ம்கூம், நீ பண்றதெல்லாம் எனக்குப் பிடிக்கல," என்ற கணவனைப் புன்னகையுடன் பார்த்தாள் அபிநயா.

"என்ன பிடிக்கல?"

"ம்... புரியாமதான் கேக்கறியா? இல்ல..."

"ஆமாம் தயா, சொல்லுங்க."

"எங்கிட்ட டிஸ்டன்ஸ் மெயின்டெய்ன் பண்ணினா அத நான் ஒத்துக்கவே மாட்டேன்."

"அதுக்காக காபி குடிக்கும் போது கூட..."

"அப்ப காபி குடிக்காத. இல்ல என் காபியவே நீயும் ஷேர் பண்ணிக்கோ."

"அது சரிதான்," என்று சிரித்தவள், "இன்னைக்கு நீங்க ஆஃபீஸ் போகணுமா தயா?" என்று கேட்டாள்.

"நீ என்ன சொல்றியோ அதுப்படி செய்யறேன். சொல்லு. போகவா, வேண்டாமா?"

"போய்ட்டு வாங்க."

"ம்கூம். மாட்டேன்."

"அப்புறம் ஏன் கேக்கறீங்களாம்?"

"ம், நீ என்ன சொல்வேன்னு பாக்கலாம்னுதான்."

"அப்ப நான் என்ன சொன்னாலும் கேட்டுக்குவீங்களா?"

''ஷ்யூர்.''

''அப்புறம் வார்த்த மாறக் கூடாது...''

''சொல்லு. அப்புறம் பாரு.''

''ஆஃபீஸ் போக வேண்டாம். எங்கூடவே இருந்துக் கோங்க.'' என்ற தன்னை ''அபி...'' என்று காதலுடன் நெருங்கிய கணவனின் தொடையில் நறுக்கென்று கிள்ளினாள்.

''ஷ்...''

''என்ன வலிக்குதா? அப்பிடியாவது சொன்னபடி கேக்கறீங்களான்னு பாக்கலாம்...''

''இனி நான் உன் பக்கத்துல வந்தா அப்புறம் என்னன்னு கேளு.''

''அடடா, ஐயாவோட சவாலாக்கும். அதையும் தான் பாக்கறேனே!'' என்று கிண்டலாகச் சிரித்த மனைவியை எதுவும் பேசாமல் பார்த்தான் தயானந்த்.

''என்ன ஸார் பாக்கறீங்க? முடியாதில்ல?'' அடுத்த சில வினாடிகளில் காபியைக் குடித்து முடித்திருந்த தயானந்த், குளிப்பதற்காக எழுந்து சென்றான்.

கணவனைத் தொடர்ந்து அபிநயா தானும் எழுந்து சென்று சமையல் வேலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

ஃப்ரிட்ஜில் மாவு இருக்க, முதலில் இட்லியை ஊற்றி வைத்துவிட்டுப் பிறகு சட்னியை அரைத்து வைத்தாள்.

அடுத்ததாகக் கொஞ்சம் பொங்கலையும் செய்தவள், அதில் முந்திரிப் பருப்பை நெய்யில் பொன் நிறமாக வறுத்துத் தூவி விட்டாள்.

இரவு அத்தை வைத்துக் கொடுத்த இனிப்புகள் நிறைய இருக்க, அதையும் பரிமாறுவதற்குத் தயாராக எடுத்து வைத்தாள்.



தன்னுடைய கைவண்ணம் எப்படியிருக்குமோ என்று சற்றுப் பயமாகத்தான் இருந்தது.

சரிதான், உண்டு பார்த்துவிட்டுக் கணவனே சொல்லட்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகியும் கணவன் சாப்பிட வராதிருக்க, என்னவென்று சென்று பார்க்கலாமா என்று தோன்றியது.

ஆனால் அதே நேரம் கணவன் டைனிங் ஹாலுக்குள் வர, ''சாப்பிடலாம் வாங்க,'' என்று அழைத்தாள்.

கணவன் வந்து அமர, பரிமாறினாள் அபிநயா.

சாதாரணமாகக் கணவன் உண்ட அளவில் சற்று நிம்மதியாக உணர்ந்தாள்.

ஏன் அப்படித்தான் நன்றாக இருக்கிறதென்று ஒரு வார்த்தை சொன்னால் குறைந்து போய் விடுவாராக்கும் என்றும் நினைக்கத் தோன்றியது.

ஆனால் அதற்குப் பிறகுதான், ஓ தான் பேச வேண்டு மென்று ஐயா எதிர்பார்க்கிறாராக்கும் என்று புன்னகையுடன் நினைக்கத் தோன்றியது.

பேசுவதற்காக வாயைத் திறக்கப் போனவள் மீண்டும் வேண்டாமென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

கணவனைப் பார்க்கப் பாவமாக இருக்க, உள்ளம் உருகிப் போனது அபிநயாவிற்கு.

சரிதான், ஐயாவுக்குக் கோபம் எத்தனை நேரத்திற்குத் தாக்குப் பிடிக்கும் என்பதையும் பார்த்து விடலாமென்று பேசாமல் இருந்து விட்டிருந்தாள்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

எட்டு நாற்பத்தைந்து.

அதே நேரம் கணவன் அலுவலகத்திற்குக் கிளம்பி விட்டிருந்தது தெரிந்தது.

ஒரு வார்த்தை சொல்லி விட்டுச் செல்வானென்று எதிர்பார்த்த அபிநயாவிற்குக் கணவன் தான் இருக்கும் திசையைக் கூடத் திரும்பிப் பார்க்காது கிளம்பி விட்டிருந்தது ஏமாற்றத்தையே கொடுத்தது.

சரிதான், ஆஃபீஸ் சென்றதும் மொபைலுக்கு அழைக்கத்தானே போகிறானென்று புன்னகையுடன் மீண்டும் தனது வேலைகளில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

சிறிது நேரம் சென்றிருக்கும்.

ஹாலில் இருந்த லேண்ட்லைன் போனுக்கு அழைப்பு வர, ஓ ஐயா அதற்குள் அலுவலகம் போய்ச் சேர்ந்துவிட்டாராக்கும் என்று நினைத்துக் கொண்டே சென்று ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தாள்.

''ஹலோ...''

''சரிதான், ஒன்னும் பிரச்சனையில்ல. நாளைக்கு வாங்க.'' என்றவள் தொடர்ந்து வந்த சில வினாடிகளில் ரிஸீவரை அதனிடத்தில் வைத்திருந்தாள்.

அப்பொழுது அழைத்திருந்தது வேலைக்காரி.

இங்கு வருவதற்காகக் கிளம்பி விட்டிருந்தவளுக்கு திடீரென்று வேறு ஏதோ முக்கியமான தவிர்க்க முடியாத வேலை வந்து விட்டதாகவும் அதை முடித்துக் கொண்டு வந்து சேர மதியத்திற்கு மேலாகி விடுமென்றும் வருத்தத்துடன் சொன்னதில், சரிதானென்று மறுநாள் வரச் சொல்லி விட்டிருந்தாள் அபிநயா.



சும்மா என்றால் எப்படியோ கணவனின் அழைப்பை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தவளுக்கு மதியத்திற்கு மேலாகியும் அவன் அழைத்திருக்காததில் ஏமாற்றமே மிஞ்சியது.

சரிதான், நாமாவது அழைத்துப் பேசலாமென்று மொபைலை எடுத்திருந்தவளை எதுவோ தடுக்க, பிறகு வேண்டாமென்று வைத்து விட்டிருந்தாள்.

அவன் தான் சவாலில் ஜெயிக்க வேண்டுமா, நாம் கூடாதா என்று பேசாமல் இருந்து விட்டிருந்தாள்.

காலையில் செய்த டிஃபனே நிறைய இருக்க, இனி தனக்காகத் தனியாகச் செய்து கொண்டு இருக்கா விட்டால் என்னவென்று மதியமும் அதையே உண்டாள். அதாவது பெயர் செய்தாள்.

உனது கணவனுக்கும் உனது மாமாவிற்குக் கொடுத்தனுப்பும் போது மதிய உணவை நானே கொடுத்து அனுப்பி விடுகிறேனென்று காலையில் அத்தை அழைத்துச் சொன்னதில் மனதிற்குள் எவ்வளவோ இதமாக உணர்ந்தாள் அபிநயா.

டிரைவரிடம் உனக்கும் மதிய உணவைக் கொடுத்து அனுப்பி விடுகிறேனென்று அவர் எவ்வளவு சொல்லியும் மறுத்து விட்டிருந்தாள்.

எப்படியோ மதியமும் தனது உணவைச் சாப்பிடும் தண்டனை கணவனுக்கு இல்லையே, அதுவே போதும் என்றிருந்தது.

பேசி இரண்டு நாளாயிற்றே என்று தனது தாய்க்கும் அழைத்துப் பேசினாள்.

பிறகு சென்று இரவு டிஃபனுக்கு அனைத்தையும் தயாராக எடுத்து வைத்தாள்.

காலையில் டிரைவர் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன துணிகளை எடுத்து வாட்ரோபில் அடுக்கி வைத்தாள்.

அப்படியே ஆங்காங்கே லேசாகக் கலைந்து கிடந்த பொருட்களை ஒதுக்கி வைத்தாள்.

தூக்கம் வராவிட்டாலும் சிறிது நேரம் சும்மா சென்று படுத்துக் கொண்டிருந்து விட்டு எழுந்து வந்தாள்.

எப்படியோ நேரம் மாலை ஐந்தாகி விட்டிருந்தது.

நேராகச் சென்று கை, கால் முகம் கழுவிக் கொண்டு வந்து பூஜையறையில் விளக்கேற்றி வைத்தவள் பிறகு சென்று காபி கலந்து குடித்தாள்.

மீண்டும் ஆறு மணிக்குச் சமையலறைக்குச் சென்றவள், அடுத்த ஒரு மணி நேரத்தில் டிஃபன் வேலையை முடித்துப் பரிமாறுவதற்குத் தயாராக டைனிங் டேபிளின் மீது எடுத்து வைத்தாள்.

கசகசவென்றிருக்க, சென்று ஃப்ரஷ்ஷாகக் குளித்து விட்டு வந்து தன்னை அழகாக அதிகப்படியாகவும் தெரியாத வண்ணம் அலங்கரித்துக் கொண்டு கணவனின் வருகைக்காகக் காத்திருக்கலானாள்.

கணவன் அழைக்கவில்லையே என்று தான் எதிர்பார்ப்பதைப் போல அவனும் எதிர்பார்த்திருக்கலாமோ என்று தோன்றியதில் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

காலையில் அவன் ஆசையுடன் அருகில் வந்ததுதான் நினைவிற்கு வந்தது.

கடவுளே! அப்படியானால் நாமல்லவா முதலில் அழைத்துப் பேசியிருக்க வேண்டுமென்று மனம் அடித்துக்



கொள்ள, அதற்குப் பிறகு நெஞ்சு நிறைந்த ஆவலுடன் கணவனின் வரவை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் அபிநயா.

வெளியே சாலையில் ஏதாவது கார் சத்தம் கேட்டாலும் போதும், ஆவலுடன் ஓடிச் சென்று பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள்.

இப்படி ஒரு முறையல்ல, பல முறை நடந்து முடிந்த பிறகே கணவனின் கார் காம்பவுண்டுக்குள் நுழைவதைக் கண்டாள்.

அடுத்த சில வினாடிகளில் கணவன் உள்ளேயும் வந்திருக்க, எழுந்து அவனருகில் சென்றாள்.

கணவன் வந்ததும் தன்னிடம் தான் வருவான், ஆசையாகப் பேசுவான் என்றெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவளுக்குத் தான் இருக்கும் பக்கமாகக் கூட அவன் திரும்பிப் பார்த்திருக்காததில் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

''தயா!'' என்று அருகில் சென்றவளுக்குக் கணவன் தன்னைக் கண்டு கொள்ளாமலே சென்றது அவளுக்கிருந்த ஆதங்கத்தை மேலும் அதிகப்படுத்தியிருந்தது.

குளித்து விட்டு அரை மணி நேரத்தில் ஹாலுக்கு வந்த கணவனை, ''வாங்க சாப்பிடலாம்,'' என்று அழைத்தாள்.

''உங்களதான் தயா, சாப்பிடலாம்...''

''எடுத்து வை.''

'எல்லாம் தயாரா இருக்கு.''

தொடர்ந்து சில வினாடிகளில் வந்து சாப்பிட அமர்ந்த கணவனுக்குப் பரிமாறிவிட்டுப் பிறகு தானும் அப்படியே அமர்ந்து கொண்டாள்.

ஏனோ காலையிலிருந்து இருந்த எதிர்பார்ப்பு இப்பொழுது அவளை விட்டுச் சுத்தமாக அகன்றிருந்தது. வீராப்பும்.

முழுத் தவறும் தன் மீது தானென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

கணவன் சாப்பிட்டு விட்டு எழுந்து சென்றிருக்க, தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் தானும் உண்டு முடித்திருந்தாள் அபிநயா.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் அனைத்தையும் ஒதுக்கி வைத்திருந்தவள் மிகுந்த தயக்கத்துடன் ஹாலுக்கு வந்தாள்.

தான் எதிர்பார்த்தது போலக் கணவன் தன்னைத் துளியும் கண்டு கொள்ளாததில் அவனருகில், அதாவது கொஞ்சம் தள்ளித்தான் சென்று அமர்ந்தாள்.

அப்பொழுதும் அவன் தன்னைத் திரும்பிப் பார்க்காததில், தயா என்று அழைத்தாள்.

மேலும் சில முறையும் கூட அழைத்தவள் அதற்கும் பலன் இல்லாததில் இப்பொழுது கணவனை நெருங்கி அமர்ந்திருந்தாள்.

''தயா!''

''இங்க பாருங்க தயா!''

கணவனின் முகவாயைப் பற்றித் தனது பக்கமாகத் திருப்பியவள், ''எங்கூடப் பேச மாட்டீங்களா?'' என்று கேட்டாள்.

''ப்ளீஸ்... ஏதாவது சொல்லுங்களேன்.''

''எம்மேல தான் தப்பு. அத நான் ஒத்துக்கறேன். அதுக்கு நீங்க எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் குடுங்க.



சந்தோஷமா ஏத்துக்கறேன். ஆனா தயவுசெஞ்சு பேசாம மட்டும் இருக்காதீங்க.''

அதற்கும் கணவனிடமிருந்து எந்த எதிரொலியும் இல்லாது போனதில், மீண்டும் அவளுக்குக் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, மீண்டும் கணவனை நோக்கித் திரும்பினாள்.

''நீங்க பேசாதத என்னால தாங்கிக்க முடியல தயா...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவளால் தொடர்ந்து அதைச் சொல்லக் கூட முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்குக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அழுகை வந்து விட்டிருக்க, அதே நேரம் திரும்பித் தனது மனைவியைப் பார்த்தான் தயானந்த்.

''நடிக்காத!''

கணவனின் அந்த வார்த்தையில் அதிர்ந்து போய் விட்டிருந்தவள், ஏன் இப்படிச் சொல்கிறான் என்று புரியாமல் பார்த்தாள்.

''தயா...''

''போதும். பேசாத.''

''என்ன வார்த்த சொல்லிட்டீங்க தயா. இப்பிடியெல்லாம் எங்கிட்டப் பேச உங்களால எப்பிடி முடியுது தயா...

''காலைலிருந்து நிறைய தடவ உங்களுக்குக் கூப்புட்றதுக்காகப் போனக் கைல எடுத்தேன் தயா, ப்ராமிஸ்...''

இப்பொழுது கணவன் எழுந்தே சென்று விட்டிருக்க, துடித்துப் போனாள்.

அவனைத் தொடர்ந்து சென்று பேச மனம் விரும்பினாலும், கால்கள் தரையிலேயே வேரோடி விட்டதைப் போல உணர்ந்தாள்.

ஆனால் கண்ணீர் மட்டும் அதன் பாட்டுக்கு வழிந்து கொண்டே இருந்தது.

எவ்வளவு நேரம் அப்படிச் சென்றிருந்ததோ, மீண்டும் கணவனிடம் சென்று பேசிப் பார்க்கலாமென்று எழுந்தாள்.

இன்னும் என்னவெல்லாம் சொல்லி விடுவானோ என்று பயமாகவும் இருந்தது.

தங்களுடைய அறைக்கு வந்திருந்தவள், கணவன் அவனுடைய ஆஃபீஸ் டேபிளில் அமர்ந்து எதையோ பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

மிகுந்த தயக்கத்துடன் அவனருகில் சென்றிருந்தவள், ''எங்கூட இனிமேல் பேசவே மாட்டீங்களா?'' என்று ஆதங்கத்தை உள்ளடக்கிய குரலில் கேட்டாள்.

''ப்ளீஸ் தயா, பேசுங்க.''

''என்ன பேசணும்?''

பட்டென்று கேட்ட கணவனைப் பார்த்தவளுக்கு, இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்வதென்று நினைக்கத் தோன்றியது.

மீண்டும் அழுகை வந்துவிடும் போலிருக்க, உதட்டைக் கடித்துத் தன்னை ஓரளவு சமாளித்துக் கொள்ள முயன்றபடி கணவனைப் பார்த்தாள்.

''ம், சொல்லு,'' என்று தன்னைப் பார்த்த கணவனிடம், ''இப்பிடிக் கேட்டா நான் என்ன சொல்லட்டும்...'' என்று முடிக்காமலே பார்த்தாள்.

''இனிமேல் இப்பிடியெல்லாம் பண்ண மாட்டேன் தயா...''

''எப்பிடி?''



....

''ம் சொல்லு. அப்பிடியென்ன தப்புப் பண்ணின? நாந்தான் பெரிய தப்புப் பண்ணிட்டேனோன்னு எனக்கு இப்ப பயமா இருக்கு...''

அப்படிச் சொன்ன கணவனின் வார்த்தைகளில் மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, அந்த வேதனை அப்படியே அவளுடைய கண்களிலும் எதிரொலித்தது.

இனியும் நான் என்ன சொன்னால் உங்களுடைய கோபம் குறையும் என்பதைப் போலப் பார்த்து விட்டு நகர்ந்தாள் அபிநயா.

மனைவியின் அந்தப் பார்வையும் ஆதங்கமும் அவனையும் என்னவோ செய்திருக்க, சற்றே எம்பி மனைவியின் கையைப் பிடித்திருந்தான் தயானந்த்.

ஆவலும் அழுகையுமாகத் திரும்பிப் பார்த்த மனைவியைச் சட்டென்று அருகில் இழுத்திருந்தவன், அப்படியே வெறி கொண்டாற்போல அவளுடைய முகமெங்கும் முத்தமழை பொழிய ஆரம்பித்திருந்தான்.

கணவனின் அந்த மாற்றத்தில் அபிநயா தானும் திக்குமுக்காடித்தான் போனாள்.

அப்படியே அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கதறித் தீர்த்தாள்.

மனைவியின் அழுகை நிற்பதற்காகத் தானும் அவளை அணைத்தபடி காத்திருந்த தயானந்த்தின் கண்களும் கூட லேசாகக் கலங்கி விட்டிருந்தன.

அதேநேரம் நிமிர்ந்து தனது கணவனைப் பார்த்த அபிநயாவிற்கும் உள்ளம் உருகிப் போய்விட்டிருந்தது.

தயா என்று கணவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கியவள், ''ஐ லவ் யூடா!'' என்று அழுகையில் உதடு துடிக்க அவனுடைய இதழ்களில் இதழ் பதித்தாள்.

"சாரிமா..."

தொடர்ந்து மேலும் ஏதோ சொல்ல வந்த கணவனின் இதழ்களைத் தனது கைகளால் மறைத்தவள், வேண்டாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

"வேண்டான்டா, எனக்கே என்னப் புரிய வெச்சதுக்கு நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்...

"அபி..."

"ஆமாம் தயா. என்னால உங்கள முழுமையாப் புரிஞ்சுக்க முடியுது. எம்மேல இருக்கற அன்புனாலதான...?"

அதற்கு மேல் பேசத் தனது மனைவியைத் தயானந்த் விட்டிருக்கவில்லை.

அப்படியே அவளை அருகில் இழுத்து இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

## 16

நான்கு நாட்கள் சென்றிருந்தன.

கணவனும் மனைவியும் அப்படியே நகையும் சதையுமாகப் பின்னிப் பிணைந்து போயிருந்தார்கள்.

தொடர்ந்து சில மணி நேரங்கள் கூட இருவராலுமே பேசிக் கொள்ளாது இருக்க முடிந்திருக்கவில்லை.

அடுத்தநாளே வேலைக்காரி வந்து விட்டிருந்ததில், செய்வதற்கு அவ்வளவாக வேலையென்று எதுவுமில்லா



மல் அபிநயாவும் இப்பொழுதெல்லாம் பெரும்பான்மை நேரம் சும்மா இருக்க நேர்ந்தது.

அதற்கெல்லாம் சேர்ந்து கணவனை மொபைலில் அழைத்துப் பேசிப் பேசியே ஒரு வழி செய்து விட்டிருந்தாள்.

ஆனால் அவளுடைய கணவன் தயானந்த்தோ தனது மனைவியையும் மிஞ்சுவதாக இருந்தான்.

அவளை விடவும் அதிகமாக அழைக்கவும் பேசவும் செய்தான்.

இப்படிச் செய்வதற்குப் பதிலாகப் பேசாமல் வீட்டில் என்னுடன் கூடவே இருந்து விடுங்களென்று அபிநயாவும் தனது கணவனைக் கேலி பேசியே ஒரு வழி செய்து விட்டிருந்தாள்.

அதற்கு அவனும் ரிஷப்ஷனுக்காகத்தான் பார்க்கிறேன் இல்லையென்றால் இன்னும் ஒரு வாரத்திற்கு முன்னரே அதாவது திருமணம் முடிந்த கையோடு ஹனிமூனுக்கு டிக்கெட் புக் செய்திருக்கமாட்டேனாக்கும் என்று ரோஷத்துடன் மனைவியை மடக்கினான்.

"அம்மா!"

வேலைக்காரியின் அழைப்பில், "என்ன வள்ளி?" என்று திரும்பினாள் அபிநயா.

"நைட் என்ன டிஃபன் செய்யறதுங்கமா?"

"சொல்ல மறந்துட்டேன் பாரு, எங்களுக்கு நைட்டுக்கு டிஃபன் வேண்டாம் வள்ளி."

"ஏம்மா, வெளிய..."

"ஆமாம், அத்தே வீட்டுக்குப் போறோம்."

"சரிங்கம்மா," என்று திரும்பப் போனவளை அபிநயா அழைக்க, "சொல்லுங்கமா," என்று மீண்டும் அருகில் வந்தாள் வள்ளி.

''உனக்கு ஏதாவது செஞ்சுக்கோ.''

''இல்லைங்கமா. எனக்கு மதியம் பண்ணினதே இன்னும் இருக்கு.போதும்.''

''சரி. அப்புறம் உன் இஷ்டம்,'' என்ற அபிநயாவிடம், ''நான் ஒன்னு சொல்லட்டுங்களாம்மா?'' என்று தயக்கத்துடன் கேட்டாள்.

''என்ன வள்ளி, சொல்லு?''

''நீங்க ரொம்ப அழகாத் தெரியறீங்கமா...!''

''என்ன திடீர்னு இப்பிடி சொல்ற?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அபிநயா.

''என்னவோ தெரியலைங்கமா. நாளுக்கு நாள் எங் கண்ணுக்கு நீங்க ரொம்பவும் அழகா என் கண்ணே பட்டுடும் போலத் தெரியறீங்கமா.''

''ஓ, சரிதான். சந்தோஷம்.''

''உண்மைய தாங்கமா சொல்றேன்.''

''சரி வள்ளி, தேங்க்ஸ்!'' என்று புன்னகையுடன் சொன்னாள் அபிநயா.

''சிரிச்சா இன்னும் பிரமாதமாத் தெரியறீங்கமா.''

''அடடா, என்ன எனக்கு இன்னைக்கு ரொம்பவும் ஐஸ் வைக்கற. பணம் ஏதாவது...''

''அச்சச்சோ! என்னமா நீங்க!'' என்று கேட்ட வள்ளியின் குரலில்,''சும்மா விளையாட்டுக்குத்தான் அப்பிடிக் கேட்டேன் வள்ளி. டேக் இட் ஈஸி!'' என்று மீண்டும் புன்னகையுடன் சொன்னாள் அபிநயா.

அன்று கணவன் சற்று நேரத்திலேயே வந்து விட்டிருக்க, அபிநயா தானும் தயாராகக் கிளம்பியிருந்தாள்.



''அபி...''

''வர்றோங்க,'' என்றவள் சில வினாடிகளில் டிஃபன் ப்ளேட்டுடன் கணவனை நோக்கி வந்தாள்.

''அதெல்லாம் எதுவும் வேண்டாம்மா.''

''கொஞ்சம்...''

''ம்கூம், டீ மட்டும் ஒரு கப் குடு.''

''இதோ எடுத்துட்டு வர்றேன்.''

''குளிச்சுட்டு வந்துட்றேம்மா. இன்னொரு கால் மணி நேரம் கழிச்சே எடுத்துட்டு வா. போதும்.''

''சரிங்க.''

சொன்னது போல குளித்துவிட்டுக் கிளம்புவதற்குத் தயாராக வந்த கணவனுக்கு டீ கொண்டு வந்து கொடுத்து உபசரித்தாள் அபிநயா.

''உனக்கு?''

''நான் ஆச்சு.''

''இன்னும் கொஞ்சம்.''

''ம்கூம்.''

''சரி. இதுலயாவது கொஞ்சம்...'' என்று தான் குடித்துக் கொண்டிருந்த கப்பைக் காட்டிக் கணவன் கேட்க, மெல்லிய குரலில், ''போடா...'' என்றாள்.

தான் அப்படிச் சொன்னதில் கணவனின் பார்வை மாற, முகம் சிவந்து போனாள்.

ஆனாலும் சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்திருந்தாள்.

''என்ன, அங்க வீட்டுக்கு நாளைக்குப் போய்க்கலாமா?''

''ஹலோ அத்தே ரெண்டு தடவ போன் பண்ணிட் டாங்க.''

''சரி விடு,'' என்று சலித்துக் கொண்ட கணவனைப் பார்த்ததில் சிரிப்புத்தான் வந்தது அபிநயாவிற்கு.

''அப்புறம் அபி.''

''என்ன தயா, சொல்லுங்க.''

''அங்க வீட்டுக்கு சுமி ரிலேட்டிவ்ஸ் எல்லாரும் வந் திருக்காங்க...''

''ஓ அப்பிடியா?''

வெகுளித்தனமாகக் கேட்ட மனைவியைப் பார்த்தவன், ''அவங்க யோசிக்காம ஏதாவது பேசிட்டாக் கூடத் தப்பா எடுத்துக்காதமா,'' என்றான்.

''அச்சச்சோ! என்ன தயா நீங்க, இதக்கூட எங்கிட்ட சொல்லணுமா? அதுவும் நீங்க...''

ஆதங்கத்துடன் கேட்ட மனைவியைப் பார்த்தவ னுக்கு, ''அவர்களுடைய குணத்தைப் பற்றித் தெரியப் பாவம் இதுவரை அவளுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்க வில்லையே!'' என்று நினைக்கத் தோன்றியது.

தொடர்ந்து வந்த பத்து நிமிடங்களில் வீட்டை விட் டுக் கிளம்பியிருந்தவர்கள், அடுத்த இருபது நிமிடங் களில் அவர்களுடைய அந்த வீட்டைச் சென்றடைந் திருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்து வந்தது போலவே அனைத்துச் சொந்தங்களும் இருந்தார்கள்.

யாரும் அழைத்துச் சொல்லும்வரை வைத்துக் கொள் ளாமல் தானே சென்று அனைவரிடமும் சந்தோஷமாகப் பேசினாள் அபிநயா.



ஆனால் அதற்கு அவ்வளவாக மதிப்புக் கிடைத்திருக் காததில் மனதிற்குள் ஒரு மாதிரியாக உணர்ந்தாள்.

ஆனாலும் அதைத் துளியும் வெளிப்படுத்திக் கொண் டாள் இல்லை.

மனைவியின் நிலை தயானந்தத்திற்கும் புரியவே செய்தது. அதோடு அதை ஈடு செய்வதற்காக அனை வரும் தன்னிடம் பல மடங்கு அக்கறையுடனும், மரி யாதையுடனும் பேசியதையும்.

ஆனால் உடனே தன்னிடம் இவர்கள் அனைவரும் எப்பொழுதுமே நன்றாகத்தானே பேசுவார்கள் என்றும் நினைத்துக் கொண்டான்.

தன்னை அத்தை அழைக்க அவருடன் சென்றாள் அபிநயா.

''இந்தாமா, இந்த டிஃபனைக் கொண்டு போய் எல் லாருக்கும் குடு,'' என்று தனது அத்தை பீங்கான் ப்ளேட் களில் பரிமாற, தானும் அவருக்கு உதவி செய்தாள்.

அடுத்த சில நிமிடங்களில் தனது அத்தை சொன்னது போலச் சென்று அனைவருக்கும் கொடுத்துவிட்டு வந்திருந்தாள் அபிநயா.

''நீயும் எடுத்துக்கோம்மா.''

''சரி அத்தே, உங்களுக்கு?''

''எனக்கு வேண்டாம்மா.''

''உங்களுக்கு இப்ப உடம்புக்குப் பரவாயில்லையா அத்தே?''

''ஆமாம்மா. மருந்து கூட டோஸேஜ் பாதியாயிடுச்சு.''

''அப்புறம் ஏன் அத்தே பாக்கறதுக்கு மெலிஞ்ச மாதிரி கொஞ்சம் டல்லாத் தெரியறீங்க.''

''வயசாயிடுச்சல்ல,'' என்று சிரித்த நிர்மலா, ''நீ ரொம்ப அழகா இருக்கடாம்மா,'' என்றார்.

அதே நேரம் அங்கு வந்த தனது நாத்தனார் சுமிதா கட்டாயத்திற்குப் பேச, சிரித்த முகத்துடன் அவளுடன் பேசினாள் அபிநயா.

''நீங்களும் டிஃபன் எடுத்துக்கோங்க,'' என்று அபிநயா சொல்ல, ''இல்ல வேண்டாம்,'' என்று மறுத்து விட்டிருந் தாள் சுமிதா.

''அப்புறம்...''

ஏதோ சொல்ல வந்துவிட்டுப் பிறகு தயங்கிய சுமி தாவிடம், ''என்ன சொல்லுங்க?'' என்று கேட்டாள்.

''நான் சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்கக் கூடாது.''

''இல்ல. சொல்லுங்க.''

''ஏற்கெனவே உன் மேல யாருக்கும் நல்ல ஒபீனியன் கிடையாது. ஐமீன் நான் டோட்டலா சொல்றேன். அப் பிடியிருக்கும் போது இப்பிடித் தனிக்குடித்தனம் வேற போய் உக்காந்துக்கிட்டா உன்ன எல்லாரும் இன்னும் தப்பாப் பேச மாட்டாங்களா?''

அவள் கேட்டது தவறாகத்தான் பேசிக் கொண்டிருக் கிறார்கள் என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருந்தது.

ஏன் இந்த அளவிற்கு யோசித்துக் கேட்பவளுக்கு அவளுடைய அண்ணனின் குணம் தெரியாதாமா என்று நினைக்கத் தோன்றியது.

ஏன், ஒன்றை நினைத்து விட்டால் அதை யாருக்காக வும் எந்த நேரத்திலும் மாற்றிக் கொள்ளாத குணமென்று தனது கணவனைப் பற்றி அத்தையே நிறைய முறை சொல்லியிருக்கிறாரே.



அப்படியிருக்கும் போது அது அவனுடைய தங்கை யான இவளுக்கு மட்டும் எப்படித் தெரியாமல் போனதாம்?

அல்லது வேண்டுமென்றே தன்னைப் புண்படுத்த வேண்டுமென்பதற்காகவே கேட்கிறாளா?

''என்ன, பேசு.''

''உங்க அண்ணனப் பத்தித் தெரிஞ்சுமா இப்பிடி யொரு கேள்வியக் கேக்கறீங்க?''

தன்னையே திருப்பிக் கேள்வி கேட்ட அபிநயாவை எரிச்சலை மறைக்கக் கூட முயலாது பார்த்தாள் சுமிதா.

''என் அண்ணாவப் பத்தி எனக்குத் தெரியும். அவ ரோட குணத்தப்பத்தியும். நான் கேக்கற அர்த்தமே வேற. நீயாவது அண்ணாகிட்ட சொல்ற மாதிரி சொல்லி... உங்களது லவ் மேரேஜ், உன்னோட வார்த்தைகளுக்கும் கொஞ்சமாவது மதிப்பிருக்கும் தான, நீதான் எப்பிடி யாவது எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கணும்.''

''சரிதான். முயற்சி பண்றேன்.''

''அப்ப இத்தன நாளும் அதப் பண்ணலயா, நல்லதாப் போச்சுன்னு விட்டுட்டியா?''

கோபத்துடன் கேட்டவளை எதுவும் பேசாமல் பார்த் தாள் அபிநயா. அதாவது என்ன பேசுவதென்று தெரி யாமல்.

''அபிநயா.''

தன்னை அத்தை அழைப்பது கேட்க, எழுந்து சென் றாள் அபிநயா.

''கூப்டீங்களா அத்தே?''

''ஆமாம்மா, இங்க வா,'' என்று நடந்த அத்தையைத் தானும் பின் தொடர்ந்தாள்.

உள்ளே இருந்த அந்த அறைக்குள் இருவரும் வந்திருக்க, ''உக்காருமா,'' என்று விட்டுச் சென்று அங்கிருந்த பீரோவைத் திறந்து எதையோ எடுத்தார் நிர்மலா.

அதற்குப் பிறகுதான் அவர் எடுத்து வந்தது நகைப் பெட்டிகள் என்பது அபிநயாவிற்குப் புரிந்தது.

''இந்தாடாம்மா. இதையெல்லாம் போட்டுப் பாரு.''

''எதுக்கு அத்தே இப்ப...''

''பின்ன ரிஷப்ஷன் அன்னைக்குப் போட வேண்டாமா? அதுக்கு இன்னும் ரெண்டு நாள்தான் இருக்கு.''

அனைத்துமே வைர நகைகளாக இருக்க, சங்கடத்துடன் பார்த்தாள்.

''என்னமா?''

''இல்ல, நகைகள்தான அத்தே, போட்டுப் பாக்கலேன்னா என்ன...''

''அதுசரி, அப்பத்தான எடுத்துப் போட்டா சரியா வரும்னு ஒரு ஐடியா கிடைக்கும்,'' என்றவர் தானே வெள்ளைக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய பெரிய வைர நகைகளை எடுத்து மருமகளுக்கு அணிவித்து அழகு பார்த்தார் நிர்மலா.

''உனக்கு எல்லாமே ரொம்ப அழகா இருக்குடாம்மா!'' என்று உணர்ந்து சொன்னவர், ''அபி, தயவு செஞ்சு யார் என்ன சொன்னாலும் நீ அதப் பெரிசா எடுத்துக்காதமா. எனக்காக...'' என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

''அச்சச்சோ! அப்பிடியெல்லாம் யாருமே எதுவும் சொல்லல அத்தே. அப்பிடியே இருந்தாலும் கூட அத நீங்க எனக்கு இத்தன தடவ சொல்லணுமா?'' என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.



''சரிதான்,'' என்று சிரித்தவர், மேலும் சில நகைகளைச் சற்று மாற்றி அணிவித்து இந்த செட் நல்லா இருக்கும் போலத் தோணுது. எதுக்கும் நீயும் கண்ணாடில பாருமா என்றார்.

தனது அத்தை சொன்னதற்காக எழுந்து சென்று கண்ணாடியில் பார்த்த அபிநயாவிற்கு, அந்த வைர நகைகளின் அழகில் தன்னையே மிகவும் பிடித்துப் போய் விட்டிருந்தது.

அப்படியே கண்ணாடியில் பார்த்துக் கொண்டே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று மனம் ஏங்கத் தொடங்கியிருந்தது.

''என்னமா, நல்லார்க்கா?''

''ரொம்ப நல்லார்க்கு அத்தே.''

''அப்ப இப்பிடியே போட்டுக்கலாம்தான?''

''இது யாருது...''

''என்ன இப்பிடிக் கேக்கற? உனக்கு எடுத்ததுதான். இன்னைக்கு மதியம் தான் கொண்டு வந்து குடுத்துட்டுப் போனாங்க. எதெது பிடிக்கலையோ சொல்லு, மாத்திடலாம்...''

உடனே, ''அச்சச்சோ! எல்லாமே ரொம்பப் பிரமாதமா இருக்கு அத்தே!'' என்று சொன்னவள், ''ஆனா இதெல்லாம் ரொம்ப விலை அதிகமானதா இருக்குமில்லையா?'' என்று தயங்கிக் கொண்டே கேட்டாள்.

''உன் வீட்டுக்காரரோட அந்தஸ்துக்கு விலை மதிப்பே இல்லமா. அப்பிடி இருந்தும் கூட அவன் எடுக்கச் சொன்ன மதிப்புல பாதி அளவுக்குத்தான் நகைகளோட விலையே வந்திருக்கு.

''ஒரு நிமிஷம்மா. சுமிகிட்டயும் ஒரு வார்த்த கேட்டுடலாம். அவ சரியா சொல்லிடுவா,'' என்று தனது அத்தை

எழுந்து செல்ல, இப்பொழுது நகைகளனைத்தும் முள் ளாய் மாறி உடலைக் குத்துவதைப் போல உணர்ந்தாள் அபிநயா.

அந்த அளவிற்கு சுமிதா வந்து என்ன சொல்லி விடு வாளோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது.

அவள் எண்ணிப் பயந்தது போலவே வேண்டா வெறுப் புடன் வந்து தன்னைப் பார்த்த சுமிதாவை மனம் கனக்கப் பார்த்தாள் அபிநயா.

மகளைத் தொடர்ந்து உள்ளே வந்திருந்த நிர்மலா, "என்னமா, எப்பிடியிருக்கு?" என்று மகளிடம் கருத்துக் கேட்டார்.

"பரவாயில்ல மம்மி."

"என்னமா இப்பிடி சொல்ற? அப்ப நல்லா இல்லையா?"

"நல்லாதான் இருக்கு."

"என்னடாம்மா, ஏதாவது குறையிருந்தா சொல்லிடு. இன்னும் ரெண்டே நாள் தான் இருக்கு," என்று லேசான பதற்றத்துடன் மீண்டும் தனது மகளைப் பார்த்துக் கேட்டார் நிர்மலா.

அதுதான் பெரிய குறையே உருவமாக நிற்கிறதே என்று நினைத்த சுமிதாவால் அதை அப்படியே வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

"அப்புறம் அன்னைக்கு அபி கட்றது இந்தப் பட்டு சேலதான், எப்பிடியிருக்குமா?"

"நல்லார்க்குமா, நல்ல கலர்!" என்று சுமிதா சொல்ல, "பிளவுஸ வேணும்னா ஒரு தடவ போட்டுப் பாத்துடற யாம்மா?" என்று தனது மருமகளைப் பார்த்துக் கேட்டார் நிர்மலா.

அபிநயாவிற்கு முன்னரே வேண்டாமென்று மறுத்து விட்டிருந்தாள் சுமிதா.



"ஆமாம் அத்தே, அதெல்லாம் சரியாதான் இருக்கு. கண்ல பாத்தாலே தெரியுதே!" என்று அபிநயா தானும் சொல்லிவிட்டிருக்க, "ஆமாம், கசக்காதீங்க, அப்புறம் அன்னைக்குப் போட முடியாத மாதிரி ஆயிடும்," என்றாள் சுமிதா.

"சரிதான்மா," என்று நிம்மதியுடன் சொன்ன நிர்மலா, அனைத்தையும் மீண்டும் பழையபடி எடுத்துப் பெட்டி களுக்குள் வைத்தார்.

"இந்த டிரேஸ்க்காவது இங்க இருங்க," என்று தன் னைப் பார்த்துச் சொன்ன சுமிதாவிடம் சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் அபிநயா.

"அவ என்னமா பண்ணுவா? அது உங்க அண்ணன் கைலதான இருக்கு," என்ற தாயிடம், "ஏன் நான் சொல்லி எங்க வீட்ல அவர் கேக்கறதில்லையா, அந்த மாதிரி தான்," என்றாள்.

ஆனால், உன் அண்ணன் கேட்டுக் கொள்ளமாட் டான், அவன் நினைப்பதைத்தான் செய்வான் என்று நினைத்துக் கொண்ட நிர்மலாவால் அதை வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.



## 17

மேலும் இரண்டு மணி நேரங்களுக்கும் மேலாகவே அங்கு இருந்து விட்டு இரவு உணவையும் முடித்துக் கொண்டு மனைவியுடன் கிளம்பி விட்டிருந்தான் தயாணந்.

யார் என்ன சொல்லியும் இல்லை கிளம்ப வேண்டு மென்று ஒற்றை வார்த்தையில் மறுத்து விட்டிருந்தான்.

தயானந்த்தின் அந்த மறுப்பிற்கு மேல் அங்கு யாரும் எதையும் சொல்லியிருக்கவுமில்லை.

மனைவி காரில் ஏறி அமர்ந்ததும், ஸ்டார்ட் செய் திருந்தான்.

எதுவும் பேசாமலே வந்தவளைத் திரும்பிப் பார்த்தவன், ''என்னமா?'' என்று கேட்டான்.

''ஒன்னுமில்லையே.''

''அப்ப என்னவோ இருக்கு. சொல்லு, யார் என்ன சொன் னாங்க?''

''அதெல்லாம் யாரும் எதுவும் சொல்லல. எனக்குத்தான் மனசுக்குள்ள ஒரு சின்ன யோசன...''

''என்ன?''

''நாம மட்டும் ஏன் தனியா இருக்கணும் தயா? இங்கயே ஒன்னா வந்துடலாமே...''

''ஏன் சுமிதா ஏதாவது சொன்னாளா?''

கணவன் சரியாகக் கணித்துக் கேட்க, ''அச்சச்சோ! இல்ல நானாதான் கேக்கறேன்,'' என்றாள்.

''எல்லாரும் ஒண்ணா சேந்து இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும். அதான்...''

''அப்ப நாம தனியா இருக்கறதுல, இருக்கணுங்கறதுல எல்லாம் உனக்குக் கொஞ்சங்கூட ஆசையே இல்லையா?''

''அச்சச்சோ! என்ன தயா...''

''சரிசரி. விடு.''

கணவனின் பட்டுக் கத்தரித்தாற் போன்ற பதிலில் பதறிப் போனாள் அபிநயா.



''எனக்கெல்லாம் ஆசதான் தயா. ஏன் இன்னும் சரியா சொல்லணும்னா நான் எவ்வளவோ ஃப்ரீயா இருக்கேன். ஆனா..''

''ம்...''

''மத்தவங்களுக்காகவும் பாக்கணுமில்ல. அதனால தான்...''

சரிதான், யாரோ ஏதோ சொல்லியிருக்கிறார்கள் என் பது இப்பொழுது தயானந்திற்கு உறுதியாகி விட்டிருந்தது.

''வேண்டாம்மா. அந்த எண்ணத்த இத்தோட மறந்துடு.''

''ஏன் தயா, எனக்காகக் கொஞ்சம் யோசிக்கக் கூடாதா?''

''ம்கூம், அவசியமில்ல.''

கோபத்துடன் பட்டென்று கணவன் சொல்லிவிட, அதற்கு மேல் எதையும் கேட்கும் தைரியம் அபிநயா விற்கும் இருக்கவில்லை.

அதற்குப் பிறகு வீடு வந்து சேரும் வரை கூடக் காரில் அமைதி நிலவியது.

காரை விட்டு இறங்கி இருவரும் வீட்டிற்குள் வந் திருந்தனர்.

''எங்க போற?''

கணவனின் கேள்வியில் திரும்பிப் பார்த்தவள், ''உங் களுக்குப் பால்,'' என்றாள்.

''வேண்டாம். வயிறு ஃபுல். கொஞ்சங்கூட இடமில்ல... உனக்கு வேணும்னா எடுத்துட்டு வா.''

''ம்கூம், எனக்கும் வேண்டாம்,'' என்று தானும் கணவ னுடன் நடந்தாள் அபிநயா.

''ஏன்டா, நீ வயிறு நிறைய சாப்பிட்டயோ என்னவோ, வா. போய் உனக்குப் பால் எடுத்துட்டு வரலாம்...''

"நீங்க வேற தயா!" என்று சிரித்தவள், "அத்தையைப் பத்தி என்ன விடவும் கூட உங்களுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கணுமே. அப்பிடியிருக்கும் போது இப்பிடியொரு கேள்வியா?" என்றாள்.

"அபி..."

"ம்..."

அதற்குள் இருவரும் தங்களுடைய அறைக்கு வந்திருக்க, "இங்க வா," என்று மனைவியைத் தன்னருகில் இழுத்து அவளுடைய கழுத்தைச் சுற்றித் தனது கைகளைப் போட்டிருந்தான் தயானந்த்.

"என்ன தயா?"

"எம் மேல கோபமா?"

"எதுக்கு?"

"அங்க வேண்டாம்னு..."

"இல்ல தயா, நீங்க ஒன்னு சொல்றீங்கன்னா அதுக்குக் காரணம் இருக்கும்."

"வேண்டாம்மா. அப்புறம் அங்க வர்றவங்க எல்லாருமே உன்னத்தான் ரொம்பவும் ஹர்ட் பண்ணுவாங்க. அத என்னால தாங்கிக்க முடியாது."

அப்படியானால் தனக்காகத்தான் தன்னுடைய நிம்மதிக்காகவும் சந்தோஷத்திற்காகவும்தான் கணவன் அங்கே வேண்டாம் என்கிறானா? ஏனோ அந்த வினாடியில் அபிநயாவின் உள்ளம் உருகிப் போய் விட்டிருந்தது.

"இருந்தாலும்.."

"எனக்குத் தெரியும்மா. எல்லாமே எனக்கும் புரியுது. விட்ரு.



"என்ன யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க. அதுலயும் சுமியோட சொந்தத்துல ஒரு பொண்ண நான் வேண்டாம்னு சொல்லிட்டேன்னு அதுக்குக் காரணமான உம்மேல தான் அவங்க கோபமெல்லாம் திரும்பும். கடைசிக்குச் சில மாசங்களுக்காவது நாம தனியாதான் இருந்தாகணும். அப்பதான் நமக்கும்..."

கணவனின் பார்வை மாற, அதை நேருக்கு நேராகச் சந்திக்க முடியாமல் குனிந்து கொண்டாள்.

"அபி..."

அதிலும் உன் கணவனின் அந்தஸ்துக்கும் மரியாதைக்கும் விலை மதிப்பே இல்லையென்று சற்று முன்னர் தனது அத்தை சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது அபிநயாவிற்கு.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, சென்று அட்டெண்ட் செய்து பேசினான் தயானந்த்.

இன்னும் இரண்டு நாட்களில் வரவிருக்கும் ரிஸப்ஷனை நினைத்து அபிநயாவிற்கு அப்பொழுதே மிகவும் பயமாக இருந்தது.

அனைத்தும் நல்லபடியாக முடிய வேண்டும் கடவுளே என்று மனதார வேண்டிக் கொண்டாள்.

முக்கியமாகத் தன்னால் புகுந்த வீட்டுச் சொந்தங்கள் யாருக்கும் குறிப்பாகக் கணவனுக்கு ஒரு சிறு பிரச்சனை கூட வந்துவிடக் கூடாதென்பதில் உறுதியாக இருந்தாள்.

தொடர்ந்து வரப்போகும் இரண்டு நாட்களுக்கு மட்டுமாவது கணவன் ஆபீஸ் செல்லும்போது தன்னைக் கொண்டு போய் அங்கு விட்டுவிட்டுப் போகுமாறு காலையில் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

இல்லையென்றால் பாவம் அத்தைக்குதானே சிரமம் என்றும்.

''என்னடா, ஒரே யோசனையா இருக்க?''

போன் பேசிவிட்டு தயானந்த் வர, ''அதெல்லாம் இல்ல தயா,'' என்று திரும்பினாள் அபிநயா.

''அப்புறம் ரிஷப்ஷனுக்குப் புதுசா செஞ்சு வந்திருக்கற நகைகளையெல்லாம் போட்டுப் பாத்தியா?''

''ம்.''

''நல்லார்க்கா?''

''ரொம்ப ரொம்ப நல்லார்க்கு!'' என்றவள், ''இப்பதான் கல்யாணத்துக்குன்னு எவ்வளவோ எடுத்தோம். திரும்பவும் எதுக்கு அவ்வளவு...''

''எல்லாமே உனக்குப் பிடிச்சிருக்குதான?''

''எனக்கு உண்மையிலேயே ரொம்பவும் பிடிச்சிருக்கு தயா.''

''அப்ப சரி. விடு.''

''போட்டுப் பாக்கச் சொல்லித் தான் அத்தே குடுத்தாங்க. ஆனா எனக்குத் திரும்பவும் அதக் கழட்டிக் குடுக்கவே மனசு இல்ல தெரியுமா?'' என்று மனைவி சொன்ன பாவனையில் சிரித்தான் தயானந்த்.

''அப்பப் போட்டுட்டே வந்திருக்க வேண்டியதுதான?''

''அதுசரி. அப்புறம் நகைக்கடை விளம்பரத்துக்குப் போற மாதிரி இருக்கும்.''

''இருக்கட்டுமே. அதோட நானும் பாத்திருப்பேன் இல்லையா?''

''அச்சச்சோ! ஆமாம் தயா, ஒன்னு பண்ணட்டுமா? நாளைக்கு வேணும்னா போய் இன்னொரு தடவ உங்களுக்குப் போட்டுக் காட்டட்டுமா?''



''வேண்டாம், விடு. வரவேற்பு அன்னைக்கே பாத்துக்கறேன்.''

''அப்புறம் அப்பிடியே என் அழகுல சொக்கிப் போய்ட்டீங்கன்னா...''

''அதுதான் உன்ன ஹாஸ்பிட்டல்ல வெச்சு ஃபர்ஸ்ட் டைம் பாத்தப்பவே அப்பிடியே ஃப்ளேட் ஆயிட்டேனே! இன்னொரு தடவ எப்பிடி?''

''உண்மையாவா சொல்றீங்க? அந்த அளவுக்கா முதல் தடவையே நான் உங்கள இம்ப்ரஸ் பண்ணிட்டேன்?''

''இதென்ன மேடம் இப்பிடியொரு கேள்வி. நீ ஹாஸ்பிட்டலுக்கு வந்துட்டுத் திரும்பிப் போகும் போதே என் இதயத்த திருடிட்டுப் போய்ட்ட. தூக்கத்தையும்.''

''ம், அப்புறம்...''

''நிஜம்மா.''

''அப்பிடி எங்கிட்ட என்ன தயா ஸ்பெஷலா இருக்கு...''

''எனக்கு நீயே ஸ்பெஷல்தான். உன் வெகுளித்தனமான நடை உடை பாவனை எல்லாமே என்ன ரொம்பவும் இம்ப்ரஸ் பண்ணிடுச்சு. அப்பிடியே உன் அழகு, குழந்தைத்தனமான முகம்...''

''விட்டா இன்னும் சொல்லிட்டே போவீங்க போலிருக்கு.''

''அது சரிதான்,'' என்று அந்த இனிய நினைவுகளில் மூழ்கிப் போனான் தயானந்த்.

சில வினாடிகளில் நடப்புக்கு வந்திருந்தவனைப் புன்னகையுடன் பார்த்தவள், ''என்ன, மலரும் நினைவுகளா?'' என்று கேட்டாள்.

''பின்ன?'' என்று தானும் சிரித்த கணவனிடம், ''அப்ப அந்த நகையெல்லாம் எனக்காக எடுத்ததுதானா தயா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா.''

''மொத்தம் எவ்வளவு வேல்யூ?''

''எவ்வளவு ஆனா அதப்பத்தி என்ன உனக்கு?''

''சொல்லுங்க ப்ளீஸ்.''

''நாப்பது லட்சம்.''

''தயா!''

''என்னடா?''

''அவ்வளவா?''

''பின்ன தங்கமும், வைரமும் விக்கற விலைக்கு அதுகூட இல்லாம எப்பிடி?''

''ஆனாலும்...''

''என்னடா, எதுக்கு இவ்வளவு ஆச்சரியம், தயக்கம் எல்லாம்?''

''எதுக்கு தயா எனக்குப் போய் அந்த அளவுக்கு...''

''எவ்வளவு, ரொம்பவும் கொஞ்சம்தான்.''

''கொஞ்சமா...''

அதே வினாடியில் மனைவியைத் தன்னருகில் இழுத்து அவளைத் தனது கைகளுக்குள் சிறைப் பிடித்திருந்தவன், ''அபி...'' என்று எல்லையற்ற காதலுடன் பார்த்தான்.

''உனக்காக இது என்னடா, இன்னும் எவ்வளவு வேணும்னாலும் நான் செய்வேன்.''



''ஏன் தயா?''

''ஏன்னு கேட்டா... நீ என் உயிர்.''

''ஓஹோ!''

''ஏன் நான் உனக்கு அப்பிடியில்லையா?''

''எனக்கு நீ அத விடவும் மேலடா!'' என்றவளுக்குக் குரல் கரகரத்து விட, அப்படியே கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

தயானந்தும் எங்கே வலித்து விடுமோ என்னுமளவிற்குத் தனது மனைவியைப் பூப்போல மிருதுவாக அணைத்துக் கொண்டான்.

இனம் புரியாத ஒரு வித உணர்வில் உள்ளம் நிறைந்து போயிருக்க, மிகவும் பெருமையாகவும் உணர்ந்தாள் அபிநயா.

கணவனுக்காக எவ்வளவு சொந்தங்கள் சொத்து சுகம் அந்தஸ்து மரியாதை என இன்னும் அனைத்துமே இருந்தாலும் கூட அவனுக்கு நாமல்லவா பெரிதாக ஏன் உயிராகத் தெரிகிறோமென்று நினைக்கத் தோன்றியது.

அதற்குத் தான் எத்தனை பாக்கியம் செய்திருக்க வேண்டுமென்று நினைத்தவளுக்கு ஆனந்தத்தில் அழுகை கூட வந்து விட்டிருந்தது.

''தயா...'' என்று கணவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

மனைவியின் மனதை அறிந்து கொண்ட தயானந்தின் நிலை பற்றியோ அதற்கு மேல் கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

## 18

''வா அபி.''

''வரலாம் அத்தே. என்ன ஃப்ரீயா உக்காந்துட்டீங்க போலிருக்கு.''

''ஆமாம்மா. உன்னக் கொண்டு வந்து இங்க விட்டுட்டு அப்பிடியே ஆஃபீஸ் போய்க்கறேன்னு தயா சொன்னதுலிருந்தே சரி நீ வரட்டும்னு உக்காந்துட்டேன்.''

''ஏன் அத்தே?''

''ஆமாம்மா. நாம ரெண்டு பேரும் சேந்து எல்லாத்தையும் எடுத்து வைக்கலாமே. வேலையும் நல்லா நடக்கும்.''

''அது சரிதான் அத்தே. அப்புறம் சுமி எல்லாரும் அத்தே?''

''அவங்க கிளம்பிட்டாங்கமா. நாளைக்கு மறுநாள் மதியம் வரவேற்புக்கு அப்பிடியே மண்டபத்துக்கு வந்துட்றோம்னாங்க.''

''சுமி இருக்கற மாதிரி சொல்லிட்டிருந்தாங்க...''

''அவளுக்கெதுக்கு மரியாத? அவளுக்கும் உன் வயசுதான். வா போன்னே கூப்புடு,'' என்றவர், ''அவ சொல்லுவா. மாப்பிள்ளைக்கும் எத்தனையோ வேலைகள் இருக்கும்தான?'' என்றார்.

''சுமி மட்டுமாவது இருந்திருக்கலாம். இல்லையா அத்தே?''



''ம். உன் வீட்டுக்காரருக்குத்தான் நீ வேணுமாக்கும்,'' என்று புன்னகையுடன் தனது மருமகளைப் பார்த்துக் கேட்ட நிர்மலா, ''மகங்கிட்டயே என்னால ஒன்னும் பேச முடியல. இனி மாப்ள கிட்ட என்னமா பேசுவேன்?'' என்றார்.

''நானும் சும்மாதான்...''

''அசடு. நானும் விளையாட்டுக்குத்தான் சொன்னேன். விடு. இப்ப நீ மட்டும் வந்திருக்கலேன்னா நான் கிளம்பி அங்க வந்திருப்பேன்,'' என்றவர், ''வாடாம்மா. வந்து டிஃபன் எடுத்துக்கோ,'' என்றார்.

''நான் ஆச்சு அத்தே.''

''இன்னும் கொஞ்சம்...''

''வேண்டாம் அத்தே. காபி மட்டும் போதும்.''

''இரு. சொல்லிட்டு வர்றேன்,'' என்று எழுந்த அத்தையுடன் தானும் கூட நடந்தாள் அபிநயா.

''நீங்க இருங்க அத்தே. நான் போய்ச் சொல்லிட்டு வந்துட்றேன்...''

''இல்லமா. அப்பிடியே லஞ்ச்சுக்கும் சொல்லிட்டு எல்லாத்தையும் எடுத்துக் குடுத்துட்டு வந்துடலாம் வா,'' என்றவர், ''தயா வேற மதியச் சாப்பாட்டுக்கு வர்றதா சொல்லிட்டுப் போயிருக்கானே. கொஞ்சம் ஸ்பெஷலா எதையாவது செய்யலாம்,'' என்றார்.

''அவன் மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வர்றதே அதிசயம். எல்லாரும் சேந்து சாப்புட்டும் ரொம்ப நாளாச்சு.''

''அது சரிதான் அத்தே.''

''இப்ப உம் புருஷனுக்குக் கால்ல, கைல அடிபட்டதெல்லாம் சுத்தமா சரியாயிடுச்சாமா?''

''அப்பிடிதான் அத்தே அவர் சொல்றார். ஆனாலும் ஸ்ட்ரெய்ன் பண்றதில்ல. நானும் அதுக்கு விட்றதில்ல.''

''அப்ப மானிங் எக்ஸர்ஸைஸ்?''

''அதுவும் இல்ல அத்தே. இன்னும் ஒரு சில மாசங்களுக்கு மட்டும் கொஞ்சம் பாத்து இருந்துட்டாப் போதும். அதுக்கப்புறம் பழையபடி எல்லாமே செஞ்சுக்கலாம்.''

''அப்பிடின்னுதாம்மா டாக்டரும் சொன்னார். ஆனா அவனால ஸ்ட்ரெய்ன் பண்ணாம முக்கியமா எக்ஸர்ஸைஸ் பண்ணாம இருக்க முடியாதே. என்ன பண்றான்?''

''அது சரிதான் அத்தே. ஆனா நான் ஸ்ட்ரிக்டா விட்றதில்ல. ஆனாலும் இப்ப வலியெல்லாம் சுத்தமா இல்ல. எல்லாமே சரியாயிடுச்சு.''

''ஏதோ இனி எந்தக் கடவுள் புண்ணியமோ இந்த அளவுல சரியாச்சு. இன்னும் கொஞ்சம் பலமா அடிபட்டிருந்தா...''

அது சரிதான் என்று தானும் மனதிற்குள் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டாள் அபிநயா.

தனது அத்தையுடன் சேர்ந்து தானும் மதிய உணவு தயாரிப்பதற்கான வேலைகளில் உதவினாள் அபிநயா.

ஓரளவு அனைத்தையும் இதிது இப்படிச் செய்ய வேண்டுமென்று அனைத்தையும் எடுத்து வேலையாட்களிடம் கொடுத்து விட்டிருந்தனர்.

''நான் சொன்ன மாதிரி வரணும்,'' என்று மீண்டும் ஒருமுறையும் சொன்ன நிர்மலா, ''வாடாம்மா,'' என்று அபிநயாவுடன் வெளியே வந்தார்.

அதே நேரம், ''அம்மா காபி,'' என்று வேலைக்காரி ட்ரேயுடன் வர, இருவரும் எடுத்துக் கொண்டனர்.

''வாம்மா. இப்பிடி வந்து உக்காரு,'' என்று அழைத்த தனது அத்தையின் அருகில் சென்று அமர்ந்தாள் அபிநயா.



''அப்புறம் இன்னைக்கே பியூட்டிஷியன வரச் சொல்லிடலாமா அபி?''

''வேண்டாம் அத்தே.''

''ஏம்மா, ஃபேஷியல் பண்ணிக்கலயா?''

''ம்கூம். அதெல்லாம் வேண்டாம் அத்தே.''

''ஏன்?''

''எனக்கு அதெல்லாம் அவ்வளவா சேர்றதில்ல. அதான்...''

''அதெல்லாம் சுமி எப்பவும் பண்ணிக்கற இடத்துல இருந்துதாம்மா வர்றாங்க. ஒன்னும் பயமில்ல.''

''சரி அத்தே.''

''ஏன் உனக்கு விருப்பமில்லையா?''

''என்னக் கேட்டா ரிஸப்ஷன் அன்னைக்கு மட்டும் பண்ணிக்கிட்டாப் போதும்னு சொல்வேன்.''

''சரிதான். அப்புறம் உன்னிஷ்டம். அதோட உன் முகமும் ஒரு சின்ன மாசுமருகூட இல்லாம பிரமாதமா தான் இருக்கு. அதனால அன்னைக்கே பாத்துக்கலாம். விடு,'' என்று விட்டிருந்தார் நிர்மலா.

ஏற்கெனவே சொல்லிவிட்டுச் சென்றது போல மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்திருந்தான் தயானந்த்.

''மாமா?'' என்று கேட்ட மனைவியிடம், ''டெல்லி போயிருக்கார். நைட்தான் வருவார்,'' என்றான்.

''ஒரு நிமிஷம் எங்கூட வா,'' என்று அழைத்த கணவன், ''நீங்களும் வாங்கமா,'' என்று தனது தாயையும் அழைத்தான்.

''என்னப்பா?''

''அந்த நகைகளையெல்லாம் எனக்கும்தான் கொஞ்சம் காட்றது,'' என்ற மகனிடம், ''காட்றதென்ன, உன்

பொண்டாட்டிக்கு நீயே போட்டு அழகு பாரு,'' என்று சிரித்துக் கொண்டே வந்தார் நிர்மலா.

இரவு போலவே அப்பொழுதும் அபிநயாவிற்கு அனைத்து நகைகளையும் தானே அணிவித்து விட்டார் நிர்மலா.

''எப்பிடியிருக்கு கண்ணா?''

''பிரமாதம்மா.''

''நான் நகைகளப் பத்திக் கேக்கறேன்,'' என்று புன்னகையுடன் சொன்ன தாயிடம், ''புரியுது. எம்பொண்டாட்டி அழகுதாங்கறது மத்தவங்க சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கணும்னு இல்ல,'' என்று தானும் அவரைப் போலவே சொன்னான் தயானந்த்.

''அடடா, அப்புறம்?''

''என்ன அப்புறம்? விட்டா எல்லாரும் கண்ணு வெச்சுடுவீங்க போலிருக்கு,'' என்றான் தயானந்த்.

''கவலப்படாதப்பா. அப்பிடியெல்லாம் உன் பொண்டாட்டி மேல கண்ணெல்லாம் எதுவும் வைக்கமாட்டோம்,'' என்றவர், ''நைட்டே உன்னக் கூப்புட்டுக் காட்டலாம்னு தோனுச்சு. ஆனாலும் நீ ஏதாவது சொல்லிடுவியோன்னு யோசனையாவும் இருந்தது,'' என்றார்.

''அதோட எல்லாருமே வேற இருந்தாங்க...''

''ரொம்ப நல்லார்க்குமா. யாரு டிஸைன் செலக்ட் பண்ணிக் குடுத்தது?''

''சுமிதான் கண்ணா.''

''அதான...'' என்றவன், ''அவளுக்கு வரவேற்புக்கு நகை எடுத்துட்டீங்களா?'' என்று கேட்டான்.



''அவளுக்கென்ன தயா, அவதான் நினைச்சப்பவெல்லாம் எடுத்துட்டே இருக்கறதாச்சே.''

தாய் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தனது மொபைலை எடுத்துத் தங்கைக்கு அழைத்திருந்தான் தயானந்த்.

புன்னகையுடன் சில நிமிடங்கள் பேசியவன், ''சரிதான். என்ன மாதிரி பிரச்சனையா இருந்தாலும் எங்கிட்ட சொல்லு. நான் பேசிச் சரி பண்ணிவிட்றேன். அதுக்காக மாப்ளைய திட்டவோ, அடிக்கவோ எல்லாம் செய்யாதமா,'' என்று விட்டு போனை வைத்தான்.

''ஏம்பா அப்பிடி சொல்ற?'' என்று சிரித்துக்கொண்டே கேட்ட தாயிடம் தனது தங்கை சொன்னதைச் சொன்னான்.

''நீங்கெல்லாம் உங்க பொண்டாட்டிக்கு எப்பிடி எல்லாத்தையும் பாத்துப் பாத்து வாங்கித் தர்றீங்க. என் வீட்டுக்காரரும் இருக்காரே... இருங்க அவர ஒரு வழி பண்றேன்னு பல்லக் கடிக்கறாம்மா.''

''போடா, அவ ஒன்னும் அப்பிடியெல்லாம் பேசற பொண்ணு கிடையாது.''

''நிஜம்மா. ஆனா என்ன இதையே கொஞ்சம் மாத்திச் சொன்னா.''

''ம். அப்பிடி உண்மைய சொல்லு,'' என்று நன்றாகவே சிரித்தார் நிர்மலா. அபிநயாவும்.

''அது மட்டுமில்லமா, அதே டிஸைன்ல தான் நானும் என் கல்யாணத்துக்குச் செஞ்சிருந்தேன். அப்பெல்லாம் கண்ணு தெரியல. ஆனா இப்ப மட்டும் நல்லா இருக்குன்னு கூப்புட்டுப் பாராட்டற அளவுக்கே தெரியுதாக்கும்னு கேக்கறா உங்க பொண்ணு.''

''நியாயமாதான கேக்கறா.''

''என்ன நியாயமோ!'' என்று அலுத்துக் கொண்ட மகனிடம், ''பாவம் கண்ணா, அவளுக்கு மனசெல்லாம் இங்க தான் இருக்கும்,'' என்று ஆதங்கத்துடன் சொன்னார் நிர்மலா.

''அது சரிதாம்மா. இங்க இருந்தா நம்ம கஷ்டம், அங்க இனி பாவம் மாப்ள அவகிட்ட மாட்டிக்கிட்டு என்ன பாடு பட்றாரோ?''

''அபி உங்கிட்ட மாட்டிக்கிட்டிருக்கறத விடவுமா?''

''என்னமா இன்னைக்கு ஒரு டைப்பாவே பேசிட்டிருக் கீங்க?''

''இருக்கறத சொல்றேன்டா.''

''பாத்தியா, இதுக்குத் தான் கஷ்டமோ நஷ்டமோ நாம நம்ம வீட்ல இருக்கணும்னு சொல்றது,'' என்று தயானந்த் தனது மனைவியைப் பார்த்துச் சொல்ல, அவனுடைய பாவனையில் அத்தை, மருமகள் இருவருமே சிரித்து விட்டிருந்தனர்.

''சரிதான். அவ்வளவு ரோஷமிருந்தா கிளம்பலாம். வேண்டாம்னு தடுக்கறவங்க இங்க யாருமில்ல.''

''ரொம்பப் பசிக்கிது. சாப்பாடு மட்டும் குடுங்கம்மா. அதுக்கப்புறம் வேணும்னாக் கிள...'' என்று பாவனை யுடன் மேலும் ஏதோ சொல்ல வந்த மகனை விளையாட் டுக்கு அடிப்பதற்காகக் கையை ஓங்கியிருந்தார் நிர்மலா.

''என்னமா, அடிச்சுருங்க.''

''வேண்டான்டா. உன்னையெல்லாம் அடிச்சா அப்புறம் எனக்குதான்...''

''ம், என்ன, சொல்லுங்க.''



''கைவலிக்கும்,'' என்று நிர்மலா முடித்திருக்க, ''அப் பாடா!'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான் தயானந்த்.

''ஏன் நான் வேற ஏதாவது சொல்லிடுவேன்னு பயந் துட்டியோ?''

''அட அதையெல்லாம் விடுங்கமா. ஒன்னுமில்லாததை யெல்லாம் பெரிசு பண்ணிக்கிட்டு. வரவர இதே வேலையா இல்ல போயிடுச்சு உங்களுக்கு?'' என்று அலுத்துக் கொண்ட தயானந்தின் பாவனையில் இப்பொழுது அனைவருமே சிரித்து விட்டிருந்தனர்.

''இன்னைக்குக் கண்டிப்பா உனக்குச் சாப்பாடு கிடையா துடா,'' என்று தாய் சொல்ல, ''சரிதான். இதோட விட் ருங்க. நாங்க கிளம்பிக்கறோம். வா அபி,'' என்று மனை வியைப் பார்த்தான் தயானந்த்.

''உன் ரோஷத்தையும் பாக்கறேன்டா,'' என்று சிரித்துக் கொண்டே எழுந்திருந்த நிர்மலா, ''நான் சாப்பாடு இல் லேன்னு சொன்னது உனக்கு மட்டும்தான். எதுக்கு என் மருமகளையும் இழுக்கற?'' என்று விட்டுப் போனார்.

''எல்லாம் நேரம்டா சாமி,'' என்ற கணவனைப் புன் னகையுடன் பார்த்த அபிநயா, ''எப்பிடியிருக்கு தயா?'' என்று தனது நகைகளைக் காட்டிக் கேட்டாள்.

இரவு மனைவி சொன்னது போல நகைகள் அனைத் தும் அவளுடைய ஒல்லியான சங்குக் கழுத்திற்காகவே வடிவமைத்துச் செய்யப்பட்டதைப் போல பிரமாதமாக இருப்பதைக் கண்டான்.

''என்ன தயா?''

ஆசையுடன் கேட்ட மனைவியை, ''நீ இவ்வளவு அழகா!'' என்று பார்த்தான்.

''ம்கூம், நானில்ல. நகைகள்.''

''இல்ல. ரெண்டுமே ஒன்னுக்கொன்னு போட்டி போட்டுக்கிட்டுப் பொருத்தமா அமைஞ்சிடுச்சு.''

''அது சரிதான். உங்களையும், என்னையும் மாதிரி!'' என்ற மனைவியை நெருங்கிய தயானந்த், யாரோ வரும் அரவம் கேட்டு அப்படியே நின்று விட்டிருந்தான்.

அடுத்த சில வினாடிகளில், ''என்னப்பா நகைகளையெல்லாம் கழட்டிடலாமா? இல்ல வேண்டாமா?'' என்று வந்த தாயிடம், ''என்னக் கேட்டா? அது உங்க ரெண்டு பேரோட இஷ்டம்,'' என்று வெளியே சென்றிருந்தான் தயானந்த்.

இருவரும் சேர்ந்து நகைகளை எடுத்து வைத்து விட்டு வந்து, சமைத்த உணவு வகைகளைப் பரிமாறுவதற்குத் தயாராக டேபிளில் எடுத்து வைத்தார்கள்.

அடுத்த அரை மணி நேரத்தில் மதிய உணவை முடித்துக் கொண்டு மீண்டும் கம்பெனிக்குக் கிளம்பி விட்டிருந்தான் தயானந்த்.

மாலையில் திரும்பி வந்திருந்தவன் இரவு உணவை முடித்துக் கொண்டு சொன்னது போலவே நாளைக் காலை வருகிறோமென்று மனைவியுடன் கிளம்பத் தயாரானான்.

''உங்க அப்பாவும் இல்லையே கண்ணா. இன்னைக்கு ஒரு நாளைக்கு இருங்களேன். நாளைக்குப் போலாம்.''

''அப்பா இன்னுமொரு அர மணி நேரத்துக்குள்ள வந்துடுவார்மா.''

''அப்ப இருக்க மாட்டி...''

அவனது தாய் முடித்துக் கூட இருக்கவில்லை, ''சரிமா. இருக்கறோம்,'' என்று விட்டிருந்தான் தயானந்த்.



சரியென்று சம்மதித்து விட்டிருந்த கணவனைத் தானும் சந்தோஷமாகப் பார்த்தாள் அபிநயா.

அது நிர்மலாவின் கண்களிலும் படத் தவறவில்லை.



## 19

அன்று மட்டுமல்ல, அதற்கு மறுநாளும் கூட இருவரும் அங்கேயே தங்கி விட்டிருந்தனர்.

விடிந்தால் வரவேற்பு நாள். விடிந்தும் இருக்க காலையிலேயே பெரும்பாலான சொந்தங்கள் வந்து விட்டிருந்தனர்.

திருமணத்திற்கு வந்திருக்காதவர்களும் கூட நிறையப் பேர் வந்திருந்ததில் நிர்மலா தானே அழைத்துச் சென்று மருமகள் என்று அபிநயாவைச் சந்தோஷமாக அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

உங்க மருமகள் ரொம்ப அழகு என்று நிறையப் பேர் சொன்னதில் மனதிற்குள் பெருமையாக உணர்ந்தாள் அபிநயா.

தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் அபிநயாவின் நாத்தனாரான சுமிதாவின் வீட்டிலிருந்தும் அனைவரும் வந்து விட்டிருக்க, அதற்குப் பிறகுதான் அவளுக்குச் சோதனைகள் ஆரம்பமாயின.

அதுவும் ஒன்றும் பெரிய அளவில் என்று சொல்லி விடுவதற்கில்லை.

திருமண வரவேற்பு நேரமும் நெருங்கியிருக்க மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

அபிநயாவின் பெற்றோரும் நேராக மண்டபத்திற்கே வந்து விட்டிருந்தார்கள்.

அவசியத்திற்கு மட்டும் பேசிக் கொண்டு அதிக உரிமை எடுத்துக் கொள்ளாமல் மிகவும் நாகரிகமாக நடந்து கொண்ட அபிநயாவின் பெற்றோரின் மீது இப்பொழுது தயானந்த்தின் சொந்தங்களுக்கும் அதிக மரியாதை வந்து விட்டிருந்தது.

அனைவரும் எதிர்பார்த்திருந்ததை விடவும்கூடத் திருமண வரவேற்பு வெகு சிறப்பாக நடந்து முடிந்தது.

திருமணத்திற்கு வந்ததை விடவும் கூட வரவேற்பிற்கு நிறையக் கூட்டம் வந்திருந்தது.

வந்தவர்களுக்கெல்லாம் சிறப்பான விருந்து, விலையுயர்ந்த பரிசு என தயானந்த்தின் குடும்பமும் அவர்களுடைய அந்தஸ்தை விட்டுக்கொடுத்து விடவில்லை.

மணமக்களின் பிரமாதமான ஜோடிப் பொருத்தத்தை அனைவரும் வாய்விட்டே வாழ்த்தினார்கள்.

முக்கியமாக அபிநயாவின் அபரிமிதமான அழகை. அந்த அளவிற்குப் பட்டும் வைரங்களும் கூடிய அலங்காரத்தில் தேவதை போல ஜொலித்தாள்.

திருமண வரவேற்பும் இனிதே நடந்து முடிந்தது.

அபிநயாவின் பெற்றோரும் மண்டபத்திலிருந்து அப்படியே கிளம்பி விட்டிருந்தனர்.

சுமிதாவின் புகுந்த வீட்டுச் சொந்தங்களுடன் தயானந்த்தின் குடும்பமும் வீடு வந்து சேர்ந்திருந்தது.

சுமிதாவின் கணவன் அதாவது அந்த வீட்டின் மாப்பிள்ளை திருமண வரவேற்புக்கு வந்திருக்கவில்லை.



அன்று தனது உயிர்த் தோழனுக்குத் திருமணம் என்பதால் அவரும் தான் வர முடியாதென்று முன்பிருந்தே சொல்லிக் கொண்டு தான் இருந்தார்.

அதனாலோ என்னவோ அவருடைய மற்றச் சொந்தங்கள் அனைவருமே காலையில் நேரத்திலேயே கிளம்பி வந்து விட்டிருந்தனர்.

என்ன முயன்றும் சுமிதாவால் அபிநயாவிடம் அதாவது அவளுடைய அண்ணியிடம் இயல்பாக நடந்து கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

அது மட்டுமல்லாமல், வார்த்தைகள் என்னும் கூர் அம்புகளால் குத்திக் கிழித்தாள்.

மிகவும் கேவலமாக நடத்தினாள்.

அதாவது யாரும் அறியாத வண்ணம்.

அதிலும் எதற்குமே வழியில்லாத இவள் எப்படி இப்படிப் பட்டும் வைரங்களுமாக ஜொலிக்கலாம் என்பதே அவளுடைய அன்றைய அதிகப்படியான கோபத்திற்குக் காரணமாக இருந்தது.

அது மட்டுமா, விட்டால் அவளை அனைவருமே தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள் போலல்லவா இருக்கிறது என்றும்.

அப்படி எந்த விதத்தில் அந்த அபிநயா இந்தச் சிறப்புகளுக்கெல்லாம் தகுதியுடையவளாகிவிட்டாள், தனது அண்ணனின் மனைவி என்பதைத் தவிர.

மகளுடைய செய்கைகளையெல்லாம் நிர்மலாவும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

மருமகளிடம் தனது மகள் சுமிதா நடந்து கொள்ளும் விதம், அவருக்கே கோபத்தை வரவழைப்பதாக இருந்தது.

அதிலும் மகனுக்குத் தெரிந்தால் அவனுடைய மனம் என்ன பாடு படுமென்றும்.

ஏன் தானே இந்த அளவிற்கு கவனித்திருக்கும் பொழுது தனது தங்கையின் செய்கைகள் அவனுடைய கண்களில் படாமலா போயிருக்கும்?

தொடர்ந்து இப்படியே நடந்து கொண்டால் நிச்சயம் மகளைத் தனியாக அழைத்து எச்சரிக்கத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டார் நிர்மலா.

''அபி!''

''அத்தே.''

''வாடாம்மா. இனி நீ உன் டிரஸ், நகைகளையெல்லாம் மாத்திக்கோ. வா. அப்பிடியே தலை முடியையும் கலைச்சுட்டு ஃப்ரீயாப் பின்னிக்கோ.''

''சரி அத்தே,'' என்றவளுடன் தானும் உதவி செய்வதற்காக உடன் சென்றார் நிர்மலா.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினான் தயானந்த்.

அழைத்ததும் வேறு யாருமல்ல, அந்த வீட்டு மாப்பிள்ளையே.

சில வினாடிகள் பேசியவன், ''இதோ உடனே வர்றேன்,'' என்று வேகமாகச் சென்று கார் சாவியைக் கையிலெடுத்திருந்தான்.

''என்ன அண்ணா, யார் போன்ல?''

தங்கை கேட்க, ''மாப்ள தான்மா,'' என்றான் தயானந்த்.

''என்னாச்சு, என்ன விஷயம்?''

''தெரியல, அவர் ஏதோ கொஞ்சம் பதட்டமாப் பேசற மாதிரி தெரியுது. போய்ப் பாத்தாதான் தெரியும்.''



''ஓ சரி. போய்ட்டு வாங்க.''

என்ன, ஏதென்று பதறாமல் கூலாகச் சொன்ன தங்கையைப் பார்த்தவனுக்குச் சரிதான், நாம்தான் அவசியமில்லாமல் பயப்படுகிறோம் போலிருக்கிறதென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

''என்னமா, நீயும் வர்றியா?''

''நான் வரலண்ணா. ஆமா, இப்ப அவர் எங்க இருக்காராம்?''

''இங்க பக்கத்துலதான். பத்து கி.மீ. தூரத்துல.''

''ஓ, சரிண்ணா. கிளம்புங்க.''

ஏன் தங்கை இன்று சற்று வித்தியாசமாக நடந்து கொள்கிறாளென்று நினைத்துக் கொண்டே நகர்ந்தான் தயானந்த்.

கிளம்பிச் சென்றவன் அடுத்த அரை மணி நேரத்தில், தங்களது மாப்பிள்ளையுடன் திரும்பி வந்திருந்தான்.

அவர்கள் இருவரும் ஹாலுக்குள் வர, ''என்னப்பா என்னாச்சு?'' என்று பொதுவாக விசாரித்தார் ராகவேந்திரன்.

''ஒன்னுமில்ல மாமா. எப்பிடியாவது ரிஷப்ஷனுக்கு வந்துடணும்னு கொஞ்சம் வேகமா வந்துட்டிருந்தேனா... அப்ப நம்ம காருக்கு மட்டும் ஒரு சின்ன அடி. ஸைட்ல இருந்து வந்த இன்னொரு கார்க்காரன் வந்து மோதிட்டான். அவன் மேலதான் தப்பும்கூட.''

''உங்களுக்கு ஒன்னும் ஆகலயே மாப்ள?'' என்று லேசான பதற்றத்துடன் ராகவேந்திரன் கேட்க, ''ம்கூம் இல்ல மாமா. நம்ம கார்ல தான் எ.பி.எஸ். இருக்கே. எனக்குச் சின்ன அடி கூட இல்ல, காருக்கு மட்டும் தான் கொஞ்சம் அடி. வொர்க் ஷாப்புல விட்டுட்டு

வந்திருக்கோம்,'' என்றார், அவருடைய மாப்பிள்ளை முரளி.

அதே நேரம், ''பாத்தீங்களா, எப்பிடியும் உங்களால ரிஷப்ஷன் டைம் முடியறதுக்குள்ள வந்து சேர முடியாதுன்னு சொன்னேனில்ல. இப்ப அதே மாதிரிதான் ஆயிடுச்சு,'' என்று கணவனைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே ஹாலுக்கு வந்தாள் சுமிதா.

என்ன இவள் என்று தங்கையின் மீது எரிச்சல் கூட வந்து விட்டிருந்தது தயானந்த்திற்கு.

நடந்ததைப் பற்றி ஒன்றும் கேட்காததே தவறு என்னும் போது, நான் சொன்னது தானே நடந்ததென்று இந்த நேரத்தில் சிறுபிள்ளைத்தனமாக அவள் கேட்டதை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

ஒருவேளை நடந்தது ஒன்றும் தெரியாதோ என்று தங்கையிடம் நடந்ததனைத்தையும் விவரமாகச் சொன்னான்.

ஆனால் அப்பொழுதும், ''ஓ அப்படியா!'' என்பதற்கு மேல் அவள் அந்த விஷயத்தைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

''பயப்பட்றதுக்கு ஒன்னுமில்லடா,'' என்று மாப்பிள்ளையே தனது தங்கையைச் சமாதானப்படுத்துவதைப் பார்த்த தயானந்த், சரிதான், வீட்டு மாப்பிள்ளையே அதை இயல்பாக எடுத்துக் கொண்டு அவருடைய மனைவிக்கு ஆறுதல் சொல்லும் போது நாமும் ஏன் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விட்டு விட்டிருந்தான்.

''மாப்பிள்ளைக்கு குடிக்க, சாப்பிட ஏதாவது எடுத்துட்டு வாம்மா,'' என்று ராகவேந்திரன் தனது மகளைப் பார்த்துச் சொல்ல, நகர்ந்தாள் சுமிதா.



ஆனால் அதே நேரம், ''இப்ப எதுவும் வேண்டாம்மா. இன்னும் கொஞ்ச நேரம் போகட்டும்,'' என்று தனது கணவன் மறுத்து விட்டிருந்ததில், சரிதானென்று தானும் வந்து அனைவருடனும் அமர்ந்து கொண்டாள் சுமிதா.

''அப்புறம் ஃபங்ஷன நான்தான் மிஸ் பண்ணிட்டேன் தயா,'' என்று லேசான வருத்தத்துடன் தங்கை கணவன் சொல்ல, ''நீங்க இல்லாதது எங்களுக்கும் ஒரு பெரிய குறைதான்,'' என்று தானும் சொன்னான் தயானந்த்.

''அதுதான் எனக்கு ஏற்கெனவே தெரியுமே,'' என்று மீண்டும் கணவனைக் குற்றம் சொல்லும் குரலில் சொன்ன தங்கையைப் பார்த்தான்.

''என்ன சுமி நீ, மாப்பிள்ளைக்கு அடி எதுவும் படாம இந்த அளவுக்கு வந்திருக்காரேன்னு நிம்மதியடையாம சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிட்டிருக்க?'' என்று முயன்று வரவழைக்கப்பட்ட இயல்பான குரலில் தங்கையைப் பார்த்துக் கேட்டான்.

''அதுதான் அவருக்கு ஒன்னும் ஆகலையே அண்ணா. அதவிடுங்க. ஆமா என்ன இவ்வளவு சொல்றீங்க, உங்களுக்கு ஏதாவது ஸாரி... சும்மா ஒரு தப்பான தகவல் உங்களுக்கு என்னவோ ஆயிடுச்சுன்னு யாராவது தெரியாம மாத்தி சொல்லிட்டாங்க, இல்ல... இப்ப இவருக்கு ஆன மாதிரி உங்களுக்கும் ஏதாவது ஆயிடுச்சுன்னு வெச்சுக்கோங்க. அப்ப உங்க மனைவி மட்டும் உடனே என்னாச்சோ ஏதாச்சோன்னு பதறிப் போயிடுவாங்களாக்கும், சும்மா...''

''அதுலென்ன சந்தேகம்?''

உடனே பட்டென்று கேட்ட அண்ணனைப் பார்த்த சுமிதா, ''ம்கூம், சான்ஸே இல்ல,'' என்றாள்.

இப்பொழுது தங்கையைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தான் தயானந்த்.

"நான் நம்ப மாட்டேண்ணா."

"என் பொண்டாட்டியப் பத்தி எனக்குத் தெரியும்." என்று மீண்டும் அதே கேலிக் குரலில் சொன்னான் தயானந்த்

"பாத்துடலாமா?"

அப்படிக் கேட்ட தங்கையிடம், "என்ன பாக்கப் போற?" என்று தயானந்த் கேட்க, "அதான..." என்றார் அந்த வீட்டு மாப்பிள்ளை முரளி.

"சும்மா ஒரு டெஸ்ட் பண்ணிப் பாத்துடலாம்ணா."

"என்னம்மா நீ?" என்று கேட்ட கணவனிடம், "ஒரு நிமிஷம் இருங்க." என்றுவிட்டு "என்னண்ணா இப்ப பயமா இருக்கில்ல. இல்ல உங்க நம்பிக்கை பொய்யாயிடுமோன்னு?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் சுமிதா.

"பயமா, சரி. டெஸ்ட் பண்ணித்தான் பாரு!"

அப்படிச் சொன்ன தனது அண்ணனிடம், "சரி. என்ன பந்தயம்?" என்று கேட்டாள்.

"அதாவது நீங்க தோத்துட்டா..."

"நீ என்ன கேட்டாலும், சொன்னாலும் செய்யறேன்."

"வார்த்த மாறக் கூடாது... ஸாரி. நீங்க அப்பிடி செய்ய மாட்டீங்கண்ணா. ஸாரி..."

"சரி. சொல்லு... நீ தோத்துட்டா என்ன பண்ணலாம்?" என்று தயானந்த் தங்கையைப் பார்த்துக் கேட்க,

"அப்பிடிக் கேளுங்க," என்றார் அவளுடைய கணவன் முரளி.



"இனிமேல் இந்த மாதிரி சிறு குழந்தத்தனமாப் பேசறத விட்டுடணும்."

அப்படிச் சொன்ன தனது அண்ணனை, "என்னண்ணா, நீங்க இப்பிடியொரு பெட் கட்றீங்க?" என்று சிரித்தாள் சுமிதா.

ஆனால் அதெல்லாம் தயானந்தின் காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

"சொல்லுமா. இனிமேல் இப்பிடியெல்லாம் சிறுபிள்ளைத்தனமா நடந்துக்கறத விட்டுடுவியா?"

என்ன இந்த அண்ணன் என்பதைப் போலப் புன்னகையுடன் பார்த்த சுமிதா சரி என்று ஒப்புக்குச் சொல்லி வைத்தாள்.

"சரி. இப்பக் கொஞ்சம் முன்னாடி மாப்பிள்ளைக்கு ஆன மாதிரி எனக்கும் ஆயிடுச்சு, ஆனா அவ்வளவு சரியா என்ன ஆச்சுன்னு தெரியல. அதாவது கொஞ்சம் முன்னாடி மாப்பிள்ள கூப்புட்டார்னு நான் உங்கிட்ட சொல்லிட்டுப் போன மாதிரி நீ போய் அபிகிட்ட சொல்லு." என்றான், தயானந்த்.

"அண்ணா, எதுக்கும் இன்னொரு முறை..."

"என்ன பயமா இருக்கா?" என்று தனது கணவன் கேட்க, "யாருக்கு?" என்று உள்ளே சென்றே விட்டிருந்தாள் சுமிதா.

முகத்தை வெகு சாதாரணமாக வைத்துக் கொண்டு, தனது கணவனை அழைக்கப் போன போது தனது அண்ணன் தன்னிடம் சொல்லிவிட்டுப் போனதைப் போலத் தான் தானும் அபிநயாவிடம் சென்று விஷயத்தைச் சொன்னாள் சுமிதா.

உண்மையிலேயே அவள் அந்த அளவிற்கு எதிர்பார்த் திருக்கவில்லை.

''என்ன சொல்றீங்க?'' என்று அதிர்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டிருந்த அபிநயாவின் கண்கள் அந்த வினா டியே கலங்கி விட்டிருந்ததைக் கண்டாள் சுமிதா.

''இப்ப அவர் எங்க... ப்ளீஸ் சொல்லுங்க. அவரு...''

''அச்சச்சோ! அழாதீங்க. பயப்பட்றதுக்கு ஒன்னுமில் லன்னு அண்ணாவே போன்ல சொல்லிட்டார். இப்ப தான் அண்ணா எங்கிட்டப் பேசினார். நீங்களும் வேணும்னா போன்ல பேசறீங்களா?''

சரி என்பதைப் போலத் தலையை லேசாக ஆட்டிய அபிநயா, ''இல்ல. அவர நான் நேர்ல பாக்கணும். இப்பவே பாக்கணும்... ப்ளீஸ் ஏதாவது கார் சாவி குடுங்களேன்,'' என்று இப்பொழுது அழவே தொடங்கி விட்டிருந்த அபிநயாவைப் பார்த்தாள் சுமிதா.

''தயவு செஞ்சு சொன்னாக் கேளுங்க அபி...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்த சுமிதாவிற்கு அதற்குப் பிறகுதான் தான் தன்னையறியாமலேயே அபிநயாவிற்கு மரியாதை கொடுத்துப் பேசத் தொடங்கி விட்டிருந்தது கருத்தில் பட்டது.

அப்படியானால் தனது அண்ணன் சொன்னது சரிதான்.

இப்பொழுது பந்தயத்தில் தோற்கப் போவது நாம் தானோ?

மீண்டும் நடப்பிற்கு வந்த சுமிதா அதற்குப் பிறகு தான் அபிநயா அங்கு இல்லாததையே உணர்ந்தாள்.

வேகமாகத் தானும் அந்த அறையை விட்டு வெளியே வந்தாள்.



''என்னமா, ஏன் அழற?'' என்று கேட்ட தனது தாயிடம் அவள் அழுகையுடன் விவரத்தைச் சொல்லிக் கொண் டிருப்பதைக் கண்டாள் சுமிதா.

''அச்சச்சோ! அப்பிடியெல்லாம் எதுவும் நடக்கலமா, அபி. இங்க பாரு...'' என்று தனது தாய் அவளைச் சமா தானப்படுத்திக் கொண்டிருந்ததையும். ஆனால் அதெல் லாம் அபிநயாவின் காதுகள் வரை கூடச் சென் றிருந்தால் அல்லவா?

ஏதோ நினைவு வந்தவளாக வேகமாக ஹாலில் இருந்த லேண்ட்லைன் போனுக்கு அருகில் ஓடிச் சென்றவள், அவசர அவசரமாக ஏதோ எண்களுக்கு டயல் செய்தாள்.

ரிங் போவது தெரிய, இணைப்புக்காக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருக்கலானாள்.

ஆனால் ரிங் தான் போய்க் கொண்டே இருந்ததே தவிர இணைப்பு கிடைத்திருக்கவில்லை.

கடவுளே! அப்படியானால் அட்டெண்ட் செய்து பேசும் நிலையில் கணவன் இல்லையோ?

''அபி!''

இது... இது கணவனுடைய குரல் அல்லவா?

தீப்பட்டாற் போலத் திரும்பினாள் அபிநயா.

அவளுடைய கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்க, தனது கணவனே தனக்கு முன்னால் வந்து நின்றிருந்ததை நம்ப மாட்டாத ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள்.

அடுத்த வினாடியே அழுகையுடன் எழுந்து கணவ னுக்கு அருகில் ஓடி வந்திருந்தாள்.

உங்களுக்கு... உங்க... ஒன்னும்... என்று தொடர்ந்து பேசக் கூட முடியாதவளாய் கணவனைத் தனது கண்களால் கண்ணிமைக்கும் நேரத்தில் ஆராய்ந்து முடித்தாள்.

ஆனாலும் திருப்தி ஏற்படாதவளாக, ''தயா, உங்களுக்கு ஒன்னும் ஆகலையே, சொல்லுங்க தயா...'' என்று அழுகையுடன் கணவனைப் பிடித்து உலுக்கினாள்.

''இல்லடா. எனக்கு எதுவுமே ஆகல. ஏன் உனக்கு அப்பிடி ஏதாவது தப்பான தகவல் கிடை...''

ஆனால் அதெல்லாம் அபிநயாவின் காதுகளுக்குள் சென்றிருந்தால் அல்லவா? கணவனுக்கு ஒன்றும் ஆகியிருக்கவில்லை என்னும் திருப்தியிலேயே கை, கால்கள் அனைத்தும் ஓய்ந்து போய்விட்டிருக்க, அப்படியே தனது கணவனின் மார்பில் விழுந்து கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

தானும் தனது மனைவியை லேசாக அணைத்துக் கொண்ட தயானந்த், 'இதற்கு இப்பொழுது என்ன சொல்கிறாய்?' என்பதைப் போலக் கண்களால் தனது தங்கையைப் பார்த்தான்.

அப்படிக் கேட்டவன் அந்த வினாடியே தனது மனைவியைத் தன் மார்போடு சாய்த்தவாறு தங்களுடைய அறைக்கும் அழைத்துச் சென்று விட்டிருந்தான்.

செய்வதறியாது சிலை போல நின்று விட்டிருந்த மனைவியைப் பார்த்த முரளி, ''அவங்க ஒருத்தருக்கொருத்தர் ரொம்பவும் புரிஞ்சு வெச்சிருக்காங்க. நம்மள மாதிரி கிடையாது.'' என்று லேசான புன்னகையுடன் உள்ளே சென்று விட்டிருந்தான்.



அந்த வினாடியில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்த கவிதா அதற்குப் பிறகுதான் தன்னைப் பெற்றவர்களும் கூட அங்கு இருப்பதைக் கண்டாள்.

''என்னமா, இப்பத் திருப்தியா?''

எனனத்துடன் அப்படிக் கேட்ட தாயை நிமிர்ந்து பார்த்தாள் கவிதா.

''மத்ததையெல்லாம் விடுமா. அவங்களுக்கு கல்யாணமான நாள்ல இருந்து அபிகிட்ட அதாவது உன் அண்ணிகிட்ட நீ நடந்துக்கற விதத்த நானும் பாத்துட்டுத்தான் இருக்கேன்.

''நம்ம அளவுக்கு அவங்ககிட்ட பணமில்லேங்கற ஒரு குறையத் தவிர வேற என்ன பெரிய தப்ப நீ அவகிட்ட கண்டுபிடிச்சுட்ட?''

''அபி உன்ன விடவும் கூட ரெண்டு வயது பெரியவ, தெரியுமா? சரி. அதையெல்லாம் விடு. அண்ணன் என்ன, அண்ணி என்ன. நீ அபியக் கேவலமா ட்ரீட் பண்ணினது உங்க அண்ணனையும் கேவலமா ட்ரீட் பண்ண...''

''அம்மா!''

''என்ன இப்ப எதுக்கு அழற? இன்னும் கூடக் கொஞ்சம் கீழ்த்தரமா நடத்தாமப் போய்ட்டோமேன்னா?''

''ப்ளீஸ்மா. தயவுசெஞ்சு அப்பிடியெல்லாம் சொல்லாத...''

''போம்மா. போய் ஒரு வார்த்த உன் அண்ணா அண்ணி கிட்ட ஸாரி கேளு. இனிமேல் இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கறதயும் விட்டு.'' என்ற மனைவியைப் பார்த்த ராகவேந்திரன், ''அதுதான் நீயே சொல்லிட்டயே, கவி சின்னப் பொண்ணுன்னு. இனிமேல் என் செல்லம் இப்பிடியெல்லாம் நடந்துக்க

மாட்டாம்மா. நீ வா,'' என்று தானும் உள்ளே சென்று விட்டிருந்தார்.

யாரோ தங்களுடைய அறைக் கதவைத் தட்டும் ஓசை கேட்க, ''வாங்க,'' என்றான் தயானந்த்.

அடுத்த வினாடி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த தங்கையை, ''வாடா,'' என்று அழைத்தான்.

''அண்ணா!'' என்றவளுக்கு அதற்கு மேல் வார்த்தையே வந்திருக்கவில்லை. அழுகைதான் வந்தது.

''ஏய் சுமி, இங்க பாரு,'' என்று எழுந்து தங்கையை நோக்கி வந்தான் தயானந்த்.

ஆனால் அதற்கு முன்னரே அபிநயாவின் அருகில் வந்திருந்த சுமிதா, ''என்ன மன்னிச்சுடுங்க அண்ணி,'' என்று அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு அழத் தொடங்கி விட்டிருந்தாள்.

''அச்சச்சோ! என்ன சுமி நீங்க, நானெதுக்கு உ...''

''ப்ளீஸ் என்ன இனிமேல் வா போன்னு கூப்புடுங்க.''

''சரி. அழ வேண்டாம். இங்க பாரு...''

''என்ன மன்னிச்சுட்டேன்னு சொல்லுங்க,'' என்றவளுக்கு இப்பொழுது முன்னிலும் அழுகை அதிகம் தான் ஆகியிருந்தது.

''மன்னிச்சுட்டோம் சுமி!'' என்று தங்கையின் அருகில் வந்திருந்த தயானந்த், ''நீ சின்னக் குழந்தடா. எதுக்கு பெரிய வார்த்தையெல்லாம் பேசிட்டிருக்க?'' என்று ஆதங்கத்துடன் கேட்டான்.

''ம். கொஞ்சம் முன்னாடிதான் யாரோ நீ குழந்தத் தனமா, சிறுபிள்ளைத் தனமா நடந்துக்கக் கூடாது அப்



பிடி இப்பிடின்னெல்லாம் அட்வைஸ் பண்ணினாங்க. அது யாருண்ணா?''

தங்கை விளையாட்டுக்குப் பேசத் தொடங்கி விட்டிருந்தது புரிய, அவனும் அப்படியே தொடர்ந்தான்.

''உனக்கு அட்வைஸ் செஞ்சாங்களா, அது யாருமா அந்த முட்டாள்?''

''அவரொன்னும் அப்பிடியெல்லாம் இல்ல, என் அண்ணனாக்கும்!''

''ஓ, அப்ப அவரு முட்டாள் இல்ல?''

''ம்கூம். கிடையவே கிடையாது. அவரோட தங்கை தான் கொஞ்சநாளா முட்டாள்தனமா நடந்துட்டிருந்தா. ஆனா இப்ப அவளும் திருந்திட்டாளாக்கும்.''

சுமிதா சொன்ன பாவனையில், இப்பொழுது மூவருமே சிரித்து விட்டிருந்தனர்.

''பூஜை வேளைக் கரடி மாதிரி உள்ள வந்ததுக்கு இன்னொரு ஸாரியும் கூட!'' என்ற தங்கையை, ''சும்மா சொல்லிட்டே நின்னுட்டிருந்தா எப்பிடி...'' என்று முடிக்காமல் பார்த்தான் தயானந்த்.

''சரி சரி. போறேன். விடுங்க...''

''போறது மட்டுமில்ல. உடனே போய் மாப்பிள்ளையப் பாரு. என்னடா நம்ம பொண்டாட்டி நமக்கு என்ன ஆனாலும் கண்டுக்கமாட்டா போலிருக்குன்னு ரொம்பவும் அப்ஸெட் ஆன மாதிரியிருந்தார்.''

''க்கும். அவருக்கு என்னப் பத்தித் தெரியுமாக்கும். நம்ம பொண்டாட்டிக்கு மத்தவங்கள அதாவது ஊர் உலகத்துல இருக்கற சிலர் மாதிரியெல்லாம் நடிக்கத் தெரியாது. ரொம்ப நல்லவ...''

''ஹலோ அப்பிடின்னா நான் நடிச்சேன்னு சொல்றியா?'' என்று முதன் முறையாக ரோஷத்துடன் சத்தமாகக் கேட்டாள் அபிநயா.

அதற்கு, ''அதான, அப்பிடிக் கேளுமா,'' என்று தயானந்த் தானும் சொல்ல, ''ஐயய்யோ! நானில்லப்பா,'' என்று ஓடியே விட்டிருந்தாள் சுமிதா.

அதே கையோடு திரும்பி மனைவியைச் சந்தேகத் துடன் பார்த்தான் தயானந்த்.

''என்னங்க, ஏன் அப்பிடிப் பாக்கறீங்க?''

''இல்ல, சுமி சொன்னதுதான் உண்மையோன்னு...''

''இது என்னடா குடும்பம். இது இப்பதான் தங்கைக்கு புத்தி சரியா வேல செய்யுதுன்னு சந்தோஷப்பட்டா, இப்பிடி அதே கையோட அண்ணனுக்குக் கெட்டுப் போச்சு.''

அப்படிச் சொன்ன மனைவியை, ''அது சரிதான். இனிமேல் தான் நீ ரியல் தயானந்தத் தெரிஞ்சுக்கப் போறி யாக்கும்!'' என்று ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு நெருங்கியிருந்தான் அவன்.

நெருங்கியிருந்தவன் அடுத்த சில வினாடிகளில் மனைவியைத் தனது கைகளுக்குள் சிறைப் பிடித்திருந் தான், காதலுடன்தான்.

✱


மயங்கினேன்
சொல்லத்
தயங்கினேன்
சத்யா இராஜ்குமார்